# வண்புகழ் மூவர் வரலாறு

URA TAMIL SANGAM

திரு. **M.** துரைசாமி **M.A., M.Ed.,**

*ஆசிரியர், அர்ச்சு கேப்ரியல் உயர்தரக் கலாசாலை,*

*சென்னை.*

**பாரதி இலக்கியப் பதிப்பகம்**

பெரிய கடைத் தெரு, :: திருச்சிராப்பள்ளி.

பதிப்புரிமை] **1950** [விலை ரூ. **1-12-0.**

Rajan Electric Press, Madras-1

THE MADURA TAMILSANGAM

# முகவுரை

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."

என்ற திருவள்ளுவர் வாக்கின்படி அரிதிற்பெற்று வந்த மனிதப்பிறவியின் நோக்கம் இறைவனை வழிபட்டு அவனருள் பெற்றுப் பிறவிக்கடல் நீந்துவதாக விருத்தல் வேண்டும். தூய அறிவனாகிய பகவானுடைய திருவடிகளை வணங்காவிடில் நாம் கற்ற கல்வியினாற் பயனில்லை. ஆகவே நமது முன்னோர்கள் எவ்வாறு இறைவன் திருவருள் பெற்றார்கள் என்பது நாம் உணரவேண்டுமென்பதும், அதன் வழியொழுகவேண்டுமென்பதும் கருதி இச்சிறு நூலில் முதற்கண் "புரந்தரதாசர் வாழ்க்கை வரலாறு" வரையப்பெற்றுள்ளது.

"அற்றது பற்றெனில் உற்றது வீடு"

என்னும் நிலையினை மெய்ப்பித்துக் காட்டும் இவ்வரலாற்றை விரிவாக எழுதியிருக்கின்றேன்.

அடுத்தபடியாக அன்புருவாய்த் திகழ்ந்த கலைமலிந்த சீர்க் கண்ணப்பர் வரலாறு கூறப்பெற்றுள்ளது. அன்பின் எல்லையைக்கண்டவர். அன்பினாற்றான் ஆண்டவனையடைய முடியும் என்பதை அகிலத்தார்க்கு எடுத்துக் காட்டிய பெரியார். கண்ணப்பர் பெரிய புராணத்தில் வந்துள்ள அறுபத்துமூன்று நாயன்மாரில் ஒருவர். பட்டினத்தார் பாராட்டிய மூவரில் ஒருவர். ஆதிசங்கரர் வடமொழியில் இவர் அன்பின் திறத்தைப் பாராட்டுகின்றார்.

மூன்றாவதாக வரையப்பெற்றுள்ளது உலகப்புகழ் உத்தமப் பெரியார் காந்தியடிகள் வரலாறு. உடம்பிந்த

நாட்டிற்கே உயிரிந்த நாட்டிற்கே யவர்பாலுள்ள திடம் பெற்ற பொருளெல்லாம் இந்தியர்க்கே யாப்பணஞ்செய்த தீரர். இன்று சுதந்தரத்தோடு நாம் வாழ்வது அவரது தியாகத்தின் பலன். அவரது அயரா வுழைப்பின் பலன்,

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"


என்ற வள்ளுவர் வாய்மொழிப்படி அடிகள் தூய புகழ்பெற்றார். இவர்தம் வாழ்வு தொண்டுபுரி வாழ் வாகும். இம்மூவரும் அழியாப் புகழ்பெற்றவர்கள். முன் மாதிரியாக வைத்துப் பூசிக்கத்தக்க மும்மூர்த்திகள். இவர்களுடைய வரலாற்றினைப் படித்து மாணவர்கள் பயனடைவார்களாக. யான் எழுதிய இச்சிறு நூலையும் தமிழுலக மேற்குமெனின் என் நல்வினைப் பயனென் றெண்ணி மகிழ்வேன். ஏழிசையாய் இசைப் பயனாய் என்னுடைய இன்னமுதாய் நிற்கும் ஈசன் அருள் புரிவானாக.

சென்னை-6
19-2-50.

இங்ஙனம்,
M. துரைசாமி.

# பொருளடக்கம்


| எண். | | பக்கம். |
| --- | --- | --- |
| 1. | புரந்தர தாசர் | ... 2 |
| 2. | கண்ணப்பர் | ... 49 |
| 3. | மகாத்துமா காந்தியடிகள் | ... 91 |



# 1. புரந்தரதாசர்

## முதலதிகாரம்

### வளமார் வாழ்க்கை

புரந்தரதாசர் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் சோலாப்பூர் ஜில்லாவைச் சேர்ந்த பண்டரிபுரத்துக்கருகில் உள்ள புரந்தர கட்டத்தில் கி. பி. 1484-ல் வரதப்ப நாயகர் என்ற தேசஸ்த பிராமணருடைய அரிய தவப்புதல்வராய்த் தோன்றினர். இவரது இயற்பெயர் சீனிவாச நாயகர் என்பது. இவரது முன்னோர்கள் இரத்தினம் முதலிய மணிகளை வியாபாரஞ் செய்வதில் திறமை வாய்ந்திருந்தார்கள். அதனால் நிதி மிகுந்த செல்வர்களாய்த் திகழ்ந்தனர்.

புரந்தரரும் நவமணி வியாபாரத்தில் தனது முன்னோரைப் போலவே நல்ல திறமை பெற்றவராய் விளங்கினர்.

நவமணிச் சோதனையில் அக்கால வைர வியாபாரிகளுள் இவரே தலை சிறந்தவராய் மதிக்கப்பட்டார். இவர்பால் விசயபுரி (Bijapur) வேந்தனும், "குல்பர்க்" கோமானும் விசய நகரத்தரசரும், வேறு பிற செல்வச் சீமான்களும், தத்தமக்குத் தேவையான பொன், மணிகளை வாங்கி வந்தனர். எனவே இவர் செல்வர்களால் போற்றக்கூடிய நிலையில் இருந்தார். பொருட் செல்வத்துடன் கல்விச் செல்வமும் இவர்பால் பொருந்தியிருந்தது.

"இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்று திருவள்ளுவர் இவ்வுலக மக்களின் பொதுத் தன்மையைக் கூறியது போலன்றி, புரந்தரர் முற்பிறவியின் நல்வினைப் பயனால் நிதிக்கிழவனைப் போலத் திகழ்ந்ததுடன், வடமொழியிலும், வளமார்ந்த கன்னட மொழியிலும் வையத்தார் புகழும் புலமை நிரம்பியவராய் இலங்கினார். இசைக் கலையிலும் இணையற்றவராக விருந்தார்.

இவர் கற்புக் கரசி யெனத் தகும் சரசுவதி யம்மையாரை வாழ்க்கைத் துணைவியாகப் பெறும் பேறு பெற்றார். அவர் மாசிலாக் குலத்து வந்தவர். வருவிருந்து வைகலும் ஓம்பும் வனிதையார்.

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்ற பொய்யில் புலவர் வாழ்க்கைத் துணைக்கு வகுத்த இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்கினாள். புக்ககத்தில் மாமன் மாமியார் மனங்கோணாத வண்ணம் நடந்து வந்தார். அவர்களும் தமது பெண்ணினைப்போல் அன்புடன் நடத்தி வந்தார்கள். மாமிக்கும் மருகிக்கும் இயற்கை

யாகக் காணக்கிடக்கும் பகைமை இவர்களிடம் தலைகாட்ட வில்லை. அதற்குக் காரணம் சரசுவதி யம்மையார் மாமன் மாமியாரைத் தனது இருமுதுகுரவராக மதித்து வழிபட்டமையே யாகும். கொண்டானைக் குலதெய்வ மாக வழிபட்டு அவர் குறிப்பின் வழி நின்ற கோதிலாக் கோதையாதலால், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் முதலிய தீப்பண்புகளுக்கு இரையாகாதிருந்தார். அன்பும் அருளும் அவரிடம் குடிகொண்டிருந்தன. அன் புருவாய்த் திகழ்ந்தார் எனலாம்.

சில காலத்தின் பின்னர் புரந்தரர் தனது பெற் ரோர்களை இழந்தார். பெற்ரோர்கள் பிரிவிற்கு மனம் வருந்தினர் புரந்தரர். உலகில் மக்களாய்ப் பிறந்தவர் கள் இறப்பது இயற்கை யென்பதுணர்ந்து ஒருவாறு மனந்தேறி என்றும் போல் தனது வியாபாரத்தில் கண் ணுங் கருத்துமாய் இருந்தார். பெரும்பொருள் திரட்டி னர். "நவகோடி நாராயணன்" என்ற சிறப்புப் பட்டத்தை யும் பெற்றார். இவரது மங்கலமான மனைமாட்சிக்கு நன் கலமெனத்தகும் நன் மக்கட் பேற்றினையும் பெற்றார். அறிவறிந்த புதல்வர் என்று அகிலம் புகழும் நற்குணச் செல்வர் நால்வர் தோன்றினர். சீனிவாச நாயகர் செல்வ நாயகராகவும் சிறப்புறு வாழ்வில் திளைத்தார்.

உலகில் மக்கட்குப் பெறலருந்திரு வந்தெய்தின் அவர்தம் சிந்தை மென்மேல் சேர்க்கவேண்டும் இம்மியும் இன்னொருவருக்கு ஈயவொண்ணாது என்னும் இவறன்மை (அல்லது கடும்பற்றுள்ளம்) யால் கவரப்பட்டு கிருபண சிகாமணி யென்னும் பட்டம் பெற்று வாழ்வது இயற்கை. இஃதன்றியும் இறைவனை வழிபடாமையும், வழிபடு வோரை யிழித்துக் கூறும் இழிதகைமையும் உடை

யராய் நாத்திகம் பேசி நாத்தழும்பேறும் பெற்றியும் உடையராய் இருத்தல் செல்வர்க்குரிய பொதுப்பண் பாகும். நமது நாயகரும் இத்தகைய செல்வருள் ஒருவரா கவே தனது வாழ்க்கைத் துறையில் ஈடுபட்டிருந்தார்.

ஆனால் அவர்தம் அரும்பெறன் மனைவியாராகிய சரசு வதியம்மையார் பெயருக்குப் பொருத்தமாகப் பத்திச்சுவை கனிசொட்டும் புராணங்கள், கதைகள் முதலியவற்றைக் கல்வி கேள்வி வாயிலாக அறிந்து அதன் பயனைக வாலறி வனது நற்றாள் தொழுது அச்சேவடிக்கே இடையறா அன்புடையவராய் விளங்கினர்.

அன்றியும் தேடும் பொருளும் ஆண்டவன் திரு வடியே எனத் தெளிந்த அம்மையார், பொய்யாய செல் வத்தே புக்குழலும் தனது கணவருக்கு அமயம் நேர்ந் துழி அமைச்சர் போலவும், அருங்குரவர் போலவும் அற வுரைகள் புரியவுந் துணிந்தார். ஆனால், நாயகர் மனம் பொருட் செல்வத்துப் பதிந்துவிட்டமையின் மனைவியாரது மாண்புமிக்க அறவுரைகள் யாவும் எட்டுணையும் பயனின்றி விழலுக்கிறைத்த நீராயிற்று. நாயகர் செவியில் நல்லுரை கள் ஏறவில்லை.

அம்மையார் ஓங்கியுலகளந்த உத்தமனும் திருமாலி னிடம் அளவற்ற அன்பு பூண்டு ஒழுகி வந்தார். அடியார் கருத்தறிந்து முடிக்கும் அண்ணல்; ஆதியம்பரமே யென் றழைத்த ஆனைக் கிரங்கியருளிய ஆதிமூலப் பெருமான் அம்மையாரின் உட்கிடையறிந்து அவர்தம் கணவனுரை ஆட் கொள்ளத் திருவுளம் பற்றினர். இறைவன் அன்பர் தம் இதயத் தாமரையில் வீற்றிருந்து அவர்கள் எண் ணும் எண்ணங்களை ஈடேற்றும் இன்பப் பெருமானன்றோ? இதனையே நமது ஆளுடைய அரசு, "கருத்தானைக் கருத்தறிந்து

முடிப்பான் தன்னை" என்று திருத்தாண்டகத்தில் அருளிப் போந்தார்.

திருநாவுக்கரசர் மருணீக்கியார் என்ற இயற்பெயருடன் வாழ்ந்தபோது சமண சமயத்திற் சேர்ந்து தருமசேனர் என்ற தலைமைப் பெயரையும் பெற்று சமணர் தம் குருவாய் விளங்கி வந்த ஞான்று அவர்தம் அருமைத் தமக்கையார் திலகவதியார் திரு வீரட்டானேசுரர் பால் "எம்பெருமானே, நீர் அடியேனை ஆண்டருள்வதுண்மையாயின் அமண்படுகுழியினின்றும் என்னருமைத் தம்பியைக் கரையேற்றி யருளவேண்டும்" என்றிறைஞ்சினர். வேண்டிய வேண்டியாங்கு ஈவாறுதலினால் வெண்ணீற்றிறைவன் விரைந்துவந்து வாகீசரைச் சூலை நோயால் தடுத்தாட் கொள்ள அம்மையார் கருத்தினிது நிறைவேறியமை உலகறிந்ததொன்று. அது போன்றே, ஈண்டும் சரசுவதி யம்மையாரின் கருத்தறிந்து உடன் முடிக்கத் திருவுளங்கொண்டார் உலகளந்த பெருமானாரும்.

★

# இரண்டா மதிகாரம்

## நாயகரும் நாராயணனும்

அம்மையாரின் அன்புக் கயிற்றால் பிணிக்கப்பட்ட ஆண்டவன் அவர்தம் விருப்பத்தை முடித்துத் தருவான் வேண்டி ஒரு விருத்தமாதவர் வேடம் புனைந்து, தம்முடன் ஒரு புதல்வனையும் அழைத்துக் கொண்டு நமது நாயகரது பொற்கடை நோக்கிப் போந்தார். அண்டமளந்த ஆதி மூர்த்தியானவர் தமது செம்பொற்பாதம் சிவக்கத் தன்பால் தன்பொருட்டு வந்தமை "நவகோடி நாராயணன்" அறிந்தாரா? இல்லை. ஏன் அறியவில்லை?

> "சிறியரே மதிக்குமிந்தச் செல்வம்வந் துற்றகாலை
> வறியபுன் செருக்குமூடி வாயுளார் மூகராவார்
> பறியணி காதுளாரும் பயில்தரு செவிடராவர்
> குறிபெறு விழியுளாரும் குருடராய் முடிவரன்றே"

என்று குசேலோபாக்கியானம் கூறியாங்கே, நமது நாயகரும், பொருளல்லவற்றைப் பொருளெனக் கருதி மருளுற்றிருந்தவராகலின் தம்மை நாடிவரும் வறிஞர்தம்மை "வருக" என வாயாலழையார்; கண்ணெடுத்தும் பாரார்; அவர்தம் கூற்றுக்கும் செவி கொடார். ஏழையர் முகம் பாரார். இன்முகங் காட்டார். அவர் முகம் பார்த்தின் முகங்காட்டின் "அவர்கள் ஏதேனும் இரப்பரே" என்றஞ்சும் செல்வருள் ஒருவராக விளங்கிய நமது நாயகர் அண்டர் நாயகன் மறையவர் வடிவில் மறைந்துவந்தமை யெங்ஙனம் உணர்வார்? தனது செல்வத்தைப் பாதுகாத்தல்,

மேலும் பெருக்குதல் என்ற இரண்டுமே அவரது வாழ்க்கையின் குறிக்கோளாம். இவ்விரண்டையும் கடந்து அவர் மனம் அப்பாற் செல்வதில்லை. அறம், அன்பு, அருள் என்னும் முப்பொருளின் வாசனையே மோந்தறியாப் பொருட் செல்வர்கள், "இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்தழிவில் வீடும்" அடையக் கூடுமா? இதுபற்றியே மாசற்ற ஏசுநாதரும், "ஒரு ஊசியின் காதின் வழியே ஒட்டகம் ஒன்று நுழைந்து செல்லினும் செல்லலாம்; ஆனால் வன்கட் செல்வனொருவன் வான்புகுதல் மட்டும் இயலாது" என்று மிக அழுத்தமாக அருளிப் போந்தார். "செல்வம் மக்கள் பிறக்கும்போது உடன் வருவதில்லை; பிறந்து மண்மேல் இறக்கும் போது கொடுபோவதில்லை. இடைநடுவே சிவன் தந்த செல்வம் என்று எளியோர்க்குக் கொடுத்தறியாதார்க்கென் சொல்வேன்". என்று பட்டினத்தார் இத்தகைய உலோப குணம் படைத்த செல்வர்களைப் பார்த்து இரங்குகின்றார். உலகில் அறம் ஒன்றே அழியாததாகும். இது கருதியே இளஞ்சிறார்க்கு அறவுரை அருளிய ஔவை மூதாட்டியார் "அறஞ்செய விரும்பு" என ஆத்தி சூடியின்கண் முதலாவதாகக் கூறியுள்ளார். திருவள்ளுவர்,

> "அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
> பொன்றுங்கால் பொன்றுத் துணை"

என்று மிக அழகாக அறத்தையும் அதன் பயனையும் இன்னதெனக் காட்டினார். ஆகவே நம்பால் பொருட் செல்வம் உண்டாங்கால், அதன் பயனை நாம் நுகர்வதுடன் நமது எளிய சகோதரர்களும் நுகருமாறு செய்து அவர்களிடமிருந்து புண்ணியத்தையும், நமது பரம பிதாவாகிய பரமனிடமிருந்து அருளையும் பெற்றுய்தல் அறி

வுடைமையாகும். இறைவனுக்குத் தேன் முழுக்கு, பால் முழுக்கு முதலிய முழுக்குகள் முழுமனதுடன் புரிந்து ஏழையர்கட்கிரங்கா விடின் இறைவன் இவற்றையொரு சிறிதும் மதியான். தனது குழந்தைகள் பசிநோயால் கதறக் கதறத் தான் மாத்திரம் அருந்தி மகிழும் அன்னையுலகில் உண்டோ? ஐயன் உண்டோ? இல்லை. இல்லை. சாமானிய தாய் தந்தையர்களே தமது குழந்தைகள் வருந்தும் போது, தாம் புசிப்பதில்லை யென்றால் பால் நினைந்தூட்டுந் தாயினும் பன்மடங்கு சிறந்த தயாபரன் தேனையும் பாலையும் பருகித் தேக்கெறிந்து திளைப்பன் கொல்லோ? ஒரு நாளும் இல்லை. அன்பர் பணியே, அடியார் பணியே, ஆண்டவன் தனது திருப்பாணியாகக் கொள்வான். இக்கருத்தினை யுட்கொண்ட தாயுமானவர்,

> "அன்பர் பணிக்கென்னை ஆளாக்கி விட்டக்கால்
> இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்று இன்ப நிலையாம் முத்திநிலை வந்தெய்தும் காலத்தையும் வழியையும் நம்போன்றார் உய்யும் வண்ணம் கூறியருளினார்.

ஆனால், செல்வருட் பலர் செல்வச் செருக்குற்று வாய் முத்தஞ் சிந்திவிடுமோ என அஞ்சுபவர் போல் யாரிடமும் பேசாதும், கருணை காட்டாதும், "பணம் காத்த பூதம்" எனப் பாரோர் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு நர்மமது மானிடர் என்று வாழ்கின்றனர்.

நமது நாயகர், "நவகோடி நாராயணன்" தம் செருக்கால் தம்பால், வேதியருருத்தாங்கி மைந்தனொருவனுடன் எழுந்தருளியுள்ள எம்பெருமான் என்பதுணராமல், அவரைக் கண்ணெடுத்துப் பாராமல் வாளாவிருந்தார். கருணையின் வடிவோ வென வந்த பெருமானார் சீனிவாச நாயக

ரைப்பார்த்து "ஐயா, வறிஞர்க்கு வாரி வாரி வழங்கும் வள்ளன்மை மிக்கீர், செல்வமிக்க பெரியீர், யான் ஓர் ஏழை வேதியன். எனது ஏழ்மையும் முதுமையும், இவ்வொரு சிறுமைந்தனுக்குப் பருவம் வரப் பெற்றதும் உபநயனம் முடித்தற் கிடந்தரவில்லை. எங்கள் சாதியினராகிய வேதியரோ உதவுவதற்குப் பதிலாக எள்ளி நகையாடுகின்றனர். செய்வதறியாது திகைப்புற்ற போது தங்களைப்பற்றி அன்பரொருவர் என்னிடம் கூறினர். ஆகவே தங்கள் பால் உபநயனத்திற்குரிய பொருள் பெற்றுப் போகவந்தேன். செல்வச் செம்மலாகிய தாங்கள் திருவுளங் கொண்டால் எனது கோரிக்கை எளிதில் நிறைவேறும். எளியேனுக்கிரங்கி என் மகவுக்கு உபநயனம் புரிவிக்கும் ஒப்பற்ற புண்ணியத்தை யேற்றருளுமாறு இறைஞ்சுகின்றேன். முதுமையெய்திய என்னுடல் நிலையும் பல்வேறிடம் செல்வதற்கு இடந் தந்திலது. ஆகலின் தாங்கள் எனது வேண்டுகோளை மறுக்காமல் ஏற்றருள வேண்டுகிறேன்." என்று பல்லெலாந் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டிக் குறையிரந்தார். நாயகரோ கண்ணோட்டமின்றி இங்ஙனம் ஒரு வேதியன் இரத்தற் பொருட்டு வந்தானே யென்று எண்ணியவராய், ஏங்கியவராய், வாய் மூடி மௌனியாய், இல்லை யென்னுமலும் ஈவேன் என்னுமலும் கன்மாப் பலகை மீது வீற்றிருந்தார். வேதியர், எங்கும் நிறைந்த பொருளானமையால் அவரதுள்ளக் கருத்தினை யறிந்து வெறுங்கையோடு மீண்டார்.

அங்ஙனம் சென்ற அண்டர் நாயக வேதியர் விடாமுண்டனைப் போல மறு நாளும் மீண்டும், கொடா முண்டனுகிய நமது நாயகர்பாற் சென்று குறையிரந்து கொண்டார். ஆனல் நாயகர் கன்னெஞ்சம் கரையவில்லை. கடும்

பற்றுள்ளமென்னும் வன்னெஞ்சக் கள்வனால் வலியப் பற்றப் பட்டவர் தப்புவரோ? ஒருநாளும் தப்பிப் பிழையார். எல்லாக் குற்றங்களிலும் தலை சிறந்த குற்றம் கடும்பற்றுள்ளம் என்னும் இவறன்மை என்று கருதிய நமது பொய்யாமொழிப் புலவர்,

"பற்றுள்ள மென்னும் இவறன்மை யெற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று'

என்றருளிச் செய்தார். இச் சீரிய குறட்கு உரை வகுத்த உரைமேற் சிறந்த பரிமேலழகர் "இவறலது (உலோபத்தின்) தன்மையாவது குணங்களெல்லாம் ஒருங்குளவாயினும் அவற்றைக் கீழ்ப்படுத்தித் தான்மேற் படவல்ல வியல்பு. ஒழிந்தன அது மாட்டாமையின் 'எற்றுள்ளு மெண்ணப் படுவதொன் றன்று' என்றார்" என்று நயங் கூறியது கூர்ந்து படித்தின்புறற் பாலது. அறு பகைவர் நம்முள் வதிகின்றனர். காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனப்பட்ட தீக்குணங் கள் ஆறனுள், கடும்பற்றுள்ளம் (உலோபம்) ஒழிந்த ஏனைய தீக்குணங்கள், நற்குணங்களெல்லா வற்றையும் கீழ்ப்படுத்தித் தாம்மேற்படும் தன்மையைச் செய்யமாட் டாமையாற்றான், இவறன்மை ஏற்றுள்ளும் (எவற்றுள் ளும்) எண்ணப்படுவதொன்றன்று என்று வள்ளுவர் நயம் பட வுரைத்தருளினர். இத்தகைய பற்றுளத்தால் ஆட் கொண்டருளப் பெற்ற நாயகர் நாராயணனால் இலேசில் ஆட்கொள்ளப்படுவாரோ? இரண்டாம் நாள் வந்து இரந்த ஞான்றும், யாதொன்றும் பெறாது வந்த வழியே திரும்பிப் போனார். ஆனால் வேதியர் மெய் வருத்தம் பாராது, செவ் வியருமையுங் கருதாது, அவமதிப்புங் கொள்ளாது, மறு நாளும் நாயகர் கடைக்கு வந்தார். என்றும் போல் நாயகர்

ஒன்றுங் கொடாமல் வாளா விருந்தார்; வேதியர் மீண்டார். இம் மாதிரியே நாடோறும் நாயகர்பால் வேதியர் வருவதும் வறிதே மீள்வதுமாக ஆறு திங்கட் காலம் கழித்தார்; அலைந்தார். பஞ்சவர்க்குத் தூது சென்ற கால்கள் அலுக் காது அலைந்தன. மூன்றடி மண் மாவலிபால் இரந்த நாக்கு இவரிடம் இரக்கச் சளைக்கவில்லை. எல்லையிலாக் கருணையும் பொறுமையும் உடையவரன்றோ நம்மையாளுடைய நாய கன்? நம்பால் காணப்பெறும் மாசுதுடைக்க, களிம்பினைப் போக்க, நமதையன் சலிப்பானா? சலிக்காது வந்து போயி னன் சக்கரமுடைய பெரியோன். ஆறுமாத காலம் அலுக் காதலைந்த அலைகடற் பள்ளிகொண்ட அரங்கன், ஒரு நாள் அலுத்தவன் போல் நடித்து நாயகரைப் பார்த்து “ஐயா, யான் ஆறு திங்களாக அலைந்து அலைந்து கால்கள் நொந்து போய்விட்டன. வறுமைப் பிணியால் என் மனம் நோகின்றது. ஊண் இன்மையின் உடல் வலிகுன்றி விட்டது. ஆகவே தாம் தம்மால் இயன்றதை இப்போதே கொடுத்துதவும். இன்றேல் ஒன்றும் இல்லை யென்றே னும் வாய் விடுத்துக் கூறிவிடும். இல்லையென்று கூறி விடுவீராயின் யான் மீட்டும் உமது கடையை நாடேன்” என்று கண்டிப்பாய்க் கூறி விட் டார். நாயகரது கன் மனமும் கரைந்து விட்டது போலும். உடனே தாம் அதுகாறும் பேணி வைத்திருந்த செல்லாக் காசுகள் நிறைந்த பையொன்றை வேதியர் பால் தந்து “வேண்டுமாயின் இக்காசுகளில் ஒன்றை மட்டும் பொறுக்கிச் செல்க” என்று தாராள மனப்பான் மையுடன் தயங்காமற் கூறினர். அந்தணர் வேடம் புனைந்த அனந்த பதுமன் அதைக் கண்ணெடுத்தும் பாராமல் மனம் நொந்தவர் போற் சென்று விட்டார்.

★

## நாராயணனும் நாயகர் மனைவியும்

கண்ணனென்றும், திருமால் என்றும், அரியென்றும் புகழப்படும் இறைவன் மாயவன் என்னும் பெயருடையானன்றோ? அவ்விறைவனது மாயச் செயல்கட்கும் வரையறை யுண்டோ? விருத்த வேதியர் வேடம் புனைந்து சீனிவாச நாயகரிடம் ஆறு திங்கள் அலைந்து பார்த்தார். அவரிடம் ஒன்றும் பலிக்காது போயிற்று. செல்லாக் காசு வழங்க இசைந்தார் நமது நாயகர்.

நாயகர் மனநிலையை நன்குணர்ந்த நாராயணன் நாயகர் கடைக்குப் போவதை நிறுத்திக் கொண்டு அவர் வீட்டிற்குச் சென்று அவர்தம் மனைவியாரைப் பார்த்தார். அவ்வம்மையார் ஐயன் வரவு பார்த்து, இருக்கையினின்றும் எழுந்து அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தவராய் அவரை யெதிர் கொண்டழைத்து ஆசனம் வழங்கி ' ஐயனே, தாங்கள் இவ்வேழையின் மீது கருணை கூர்ந்து இவ்வளவு தூரம் இந்த முதுமைப் பருவத்தில் இங் கெழுந்தருளியமைக்குப் பெரிதும் மகிழ்கின்றேன். தாங்கள் எதன் பொருட்டு இவண் எழுந்தருளினீர்களோ அடியேன் அறிந்து கொள்ளலாமோ?" என்று தழுதழுத்த குரலில் மிகவும் பணிவாகவும் இனிமையாகவும் கேட்டார்.

வேதியர் அம்மையாரின் அன்புரை கேட்டு மகிழ்ந்தவராய் "அம்மா, யான் மிகவும் ஏழை. எனது குறை முடிப்பார் இங்கு யாருமிலர். இவ்வூரில் ஒரு பெரும் பொருள் படைத்த வணிகன் ஒருவன் உளன். அவன் கிருபணசிகா

மணி; கன்னெஞ்சக் கயவன். இச் சிறுவனுக்கு உப நயனஞ் செய்யும் பொருட்டு அவன் பால் குறையிரந்து ஆறு திங்கள் அலேந்தேன். கால்கள் அலுத்துவிட்டன. மனம் வருந்தினேன், உடலும் தளர்ந்து போனேன். இரக்க மின்னதென்பதறியாத அவ்வுலோபி இறுதியில் செல்லாக் காசுகள் நிறைந்த பையொன்றினை யென் முன்னர் வீசி அப்பையினின்றும் ஒரு செல்லாக் காசு எடுத்துச் செல்லுமாறு கூறினன். யான் மனமொடிந்து அதனையும் கொள்ளாது அவனை வைதுகொண்டே இங்கு வந்தேன். அம்மா, தாங்களும் செல்வமிக் குடையராகக் காண்கின்றீர். எனது இச் சிறுவனது பிரமோபதேசம் புரியும் புண்ணியத்தையேற்றுக் கொள்ளுங்கள். யான் இறப்பதற்குச் சித்தமாக வேண்டிய நிலேயடைந்து விட்டேன். முதுமையும் அதிகமாயின. இவ்வென் மகனது உபநயனத்தை முடித்துப் பார்த்த பின்னர் இறக்கவேண்டு மென்ப தென்னிறுதியான ஆசை, அதைத் தாங்கள் தான் நிறைவேற்றித் தரவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

வேதியர் விளம்பியதைக் கேட்டதும் அம்மையாரது உள்ளம் குழைந்து விட்டது. கணவன்வழி நிற்கும் அக் கற்புடைச் செல்வியார் அந்தணர்க்கு எதுவும் அளிப்பதற்கியலாமை கருதி மிகவும் வருந்தினர். சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். பின்னர் வேதியரைப் பார்த்து அவ்வம்மையார், "ஐயா, நீர்குறித்த செல்வர் எனது நாயகர் என்று எண்ணுகிறேன். என் முன்னர் அவரை யிழிவாகப் பேசாதிருக்க வேண்டுகின்றேன். எனக்கோ இரவலர்க்கீத்துவக்கும் இன்பப்பேறிலது. எனக்கென இம் மனேயில் உரியதொன்று மில்லேயே! என் செய்வேன்" என்று இரங்கிக் கூறினர். அது கேட்ட அந்தண வேடர் "அம்மையே,

உமது மூக்கில் ஒளிரும் மூக்குத்தியையேனும் எனக்களிப் பீராயின் அதனை விற்று என் மகனது உபநயன முகூர்த் தத்தை இனிது நடாத்தி இன்புறுதல் கூடும். உமக்கும் பெரும் புண்ணியமுண்டாகும். எனக்கும் பேருபகாரமா கும். இச்சிறுவனும் கடைத்தேறுவான். அறப்பெருங் கருணை கூர்ந்து அடியேனுக்கருள்வீராக" என்று கன் னெஞ்சும் கனிந்துருகுமாறு கூறினர். எவ்வுயிர்க்கும் இரங் கியருளும் ஈசன் எத்தேவரும் தம்மை இரக்கும் நிலையி லுள்ள எம்பெருமானர் தமது அன்பருக்காக இரக்கவும் முற்பட்டார். என்னே! இறைவனது அருட்டிரு விளை யாடல்!

அடியார்க்கெளியராம் ஆண்டவர் அன்பர்கட்கு அருள் புரியு முன்னர் அவர்களை அரிய சோதனைகட் குட்படுத்துவது இயல்பே போலும். நினைந்துருகும் அடி யாரை நைய வைத்தவர் தம் வினையை நீக்கும் நிமலன் அல் லவா? ஆகவே பல சோதனைகள் நடத்தி அவற்றில் தேர் வடைந்தவர்களுக்கே வீடு அளித்து மகிழ்வான் விமலன். இத்தகைய இறுதித் தேர்வில் தவருது தேறுகின்றவர் மிகச் சிலரே. சோதனையில் தவறி இடர்ப்படுவார் பலர். இல்லற வாழ்வைத் துறந்து துறவறம் பூண்ட பெருந் துறவிகளும் ஒரோருகால் வழுக்குவார்களேயானல் சாதா ரண மக்களைப் பற்றிக் கூறுவானேன்?

இவண் சரசுவதியம்மையார் முற்பிறவியின் நல்வினைப் பயனுல் தவறி விடவில்லை. வேதியர் மூக்குத்தியைச் சுட் டிக் காட்டிக் கேட்டதும், அம்மையார் மனங் குழைந்து அதை நல்வினைக்குக் கொடுத்துதவக் கருதினர். எனி னும் கணவர் மூக்குத்தி யெங்கே யெனக் கேட்கின் என் செய்வதென்று கலங்கினர். இருதலைக் கொள்ளியின் உள்

ளெறும் பொத்தார் அம்மையார். வீட்டு நாயகரின் வெகுளியும், பர வீட்டு நாயகரது விருப்பமும் அம்மையார் மனதினைச் சற்று அசைத்தது. பின்னர் எது வரினும் வருக என்று துணிந்து மூக்குத்தியைக் கழற்றி அந்தண ருக்கு அன்புடன் அளித்துவிட்டார். மூக்குத்தி பெற்ற முது மறையவர் அளவிலா மகிழ்ச்சி யெய்தினர். அம்மை யாரைப் பலபடப் பாராட்டினர். பரிவுடன் ஆசி பல பகர்ந் தார். அரிய அறச்செயலைக் கருதிக் கருதி வியந்து மகிழ்ந் தார்போற் றோன்றினர். வாயார வாழ்த்திய பின் அம்மை யார்பால் விடை பெற்றுத் தம் மகனுடன் சென்று விட்டார்.

★

# அம்மையாருக்கு ஆண்டவனருள் புரிதல்

மூக்குத்தி பெற்று வந்த முது வேதியர் வடிவுற்ற நாராயணன், வேதியர் வடிவினை விடுத்தார். ஒரு வணிகர் வேடம் பூண்டார். மூக்குத்தியுடன் செல்லாக் காசு வழங்கிய செல்வராகிய சீனிவாச நாயகர் கடைக்கு வந்தார்.

வணிக வேடம் புனைந்து வந்த வண்டுவரைக் கோமானை நாயகர் வர வேற்றார். ஆசனம் வழங்கினார். இதே பெருமான் வேதியர் வடிவில் வந்த ஞான்று அவருடன் பேசாதிருந்தார் நாயகர். என்னே! உலகியற்கை யிருந்தவாறு! வேடத்தினால் இவர் மனம் வேறுபட்டது. நாயகர் வரவேற்றுபசரித்ததும், அண்டர் நாயகர் தாம் கையில் வைத்திருந்த மூக்குத்தியைக் காட்டி, "ஐயா, இம் மூக்குத்திக்கு ஏற்ற விலை தருவீரோ?" என்று கேட்டார். நாயகர் மூக்குத்தியைக் கையில் வாங்கி யுற்றுப்பார்த்தார். அது ஒருகால் தமது மனைவியின் மூக்குத்திதானோவென் றையுற்றார். எனினும் வணிகத்துக்கு வரும் பல்வேறு பொருள்களிற் சில ஒன்றை யொன்று ஒத்திருப்பதும் இயற்கையே யெனக் கருதி ஐயமகற்றிக்கொண்டார். அவ் வணிகரிடம் மூக்குத்திக்குரிய பொன்னைத் தந்து அனுப்பி விட்டார். வணிக வேடம் புனைந்துவந்த மாயன் மாயமாய் விரைவில் மறைந்தார்.

ஆனால், நாயகர் மனம் மட்டும் உறுதியற்றுப் பல கருதத் தொடங்கியது. ஏவலரை யழைத்து அவ்வணிகர் சென்றவிட மறிந்து வருமாறு பணித்தார். அவர்களும் அவர்தம் ஆணை வழிச் சென்று பார்த்தபோது வணிக உருவில் வந்தவர் ஒரு கோயிலுட் புகுவதைக் கண்டனர். அவ்வாறே ஏவலர் தமது நாயகரிடங் கூறினர். நாயகரோ அவ்வேவலரை அறிவிலிகள் என்று எள்ளினார். ஆயின் அவர் மனம் அவரையறியாமலே பதைபதைத்தது; பரபரப்புற்றது. முன்னர்த் தோன்றிய ஐயம் இன்னும் வலிவுற்றது. அவருக்குக் கடையில் இருப்புக் கொள்ளவில்லை. விலைக்கு வாங்கிய மூக்குத்தியைப் பெட்டியில் வைத்துப் பத்திரமாகப் பூட்டினார். கடையையும் நன்கு பூட்டிவிட்டுத் தம் வீடு சென்றார். வீட்டினுள் நுழைந்து அங்கு மிங்கும் ஓடினார். மனைவியைத் தேடினார். என்னே பொன்னாசை கொண்ட மனம் படும் பாடு! அவர் கொண்ட பரபரப்பை ஆறு திங்கள் அவர் பால் நடந்தலைந்த ஆண்டவனேயறிவான்.

இஃதிவ்வாறாக, அம்மையாரோ தமது பூசையறையில் தனியாக அமர்ந்து ஆண்டவர் தியானத்தில் ஈடுபட்டிருந்தார். இதனை நாயகர் எங்ஙனம் உணர்வார்? நாயகர் பூசையறைக்குள் புக்கார். அம்மையார் முகத்தினை யுற்றுநோக்கினார். மூக்குத்தியைக் கண்டாரில்லை; திடுக்கிட்டார். நாயகருக்குக் கடுஞ்சினம் கொதித்தெழுந்தது. அம்மையாரைப் பார்த்து "மூக்குத்தி யெங்கே? எங்கே மூக்குத்தி?" என்று கடுகடுத்த முகத்துடன் இடிக்குரலிற் கேட்டார். அம்மையாரோ நிகழ்ந்தது கூற அஞ்சியவராய், "பூசை முடிந்ததும் தேடித் தருகின்றேன், சற்றுப் பொறுப்பீர்களாக" என்று கூறி நடந்ததை மறைத்தார்.

" பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின் "

என்பது பொய்யாமொழியன்றோ? நாயகர் பதட்ட மெய்தினார். அவசரமும் ஆத்திரமுங் கொண்டார். அம்மையாரைப் பார்த்து, " உடன் தருக. இன்றேல் இருக்குமிடத்தைக் கூறு. அது இப்போது வேண்டும் " என்று மீட்டும் அதட்டிக் கேட்டார். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டல்லவா? பூசை வேளை யென்பதையும் எண்ணினானல்லன். பூசை புரிந்தவனாயிருந்தால் அதன் பெருமை யுணர்ந்திருப்பான். பரம்பொருளை வணங்குவதை விடுத்து பணப் பூசை புரிந்தவன். ஆகவே, அம்மையாரின் சமய மறியாது உடனே மூக்குத்தியைத் தரவேண்டுமென்று கேட்டதில் வியப்பொன்றுமில்லை.

அம்மையார் செய்வதறியாது திகைத்தார். மறுபடியும் கணவரை நோக்கித் " திருத்துழாய், பூசை முடியும் வரை பொறுத்தருள்வீர் " என்று வணங்கிக் கேட்டுக் கொண்டார். பூசைப் பெட்டியை யெடுத்துத் தம் முன்னர் வைத்துக் கொண்டு எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணி யெண்ணி மனம் புண்ணாயினார். ஒன்றும் தோன்றாது திகைத்தார்.

கடைசியாகத் தம் கணவரிடமும் அயலாரிடமும் இகழ்ச்சியுற்று மானம் நீத்தலினும் உயிர் நீத்தலே மேலென்று துணிந்தார்.

" மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் "

என்ற பொது மறையின்படி, உயிரினும் சிறந்த மானத்தை யிழக்க மனமிலராய் உயிர் இழக்கத்

துணிந்தார். உடனே வைரத்தைப் பொடி செய்து பொற் கிண்ண மொன்றில் பாலுடன் குழைத்தார். அக் கிண்ணத்தைக் கையிலெடுத்துக் கொண்டு உலக மாதா வாகிய பெருந்தேவியாரை நோக்கி "அன்னையே, என்னை யளிப்பது உன் கடன். என் அறச் செயல் இறைவனுக் குவப்பாயிற்று. அவ் வறம் மறமாகாதிருக்க வேண்டு மென்றஞ்சியே உண்மை யறியுங்கால் சீற்ற மிகக் கொள் ளுங் குணத்தினராய என் நாயகர்க்கு உண்மை கூறிலேன். என் பதியோ அறத்தின் மணமும் இன்னதென அறியாத வர். ஓரற்ப மூக்குத்தியின் பொருட்டுக் கலாம் விளைக் கக் கருதேன். ஈகைச் செய்கையும் மறைவாகவே யிருக்க வேண்டுமன்றோ? "செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்பே மெனினே தப்புந பலவா" மன்றே! ஏழையரும் இரவல ரும் மனம் வெதும்புமாறு இயல்வதைக் கரந்து இல்லை யெனல் நற்குடிப் பிறந்தார்க் கியல்பன்றே! தன்னலங் கருதி வாழ்வதும் ஒரு வாழ்வாமா? பிறர் துன்பம் நீக்க முடியாது இடுக்கட்பட்டு, நீரிற் சுருட்டும் நெடுந்திரை போலக் கணத்தில் மாயும் இவ் வுடலோம்புவதினும் நினது மலரடிகளில் வீழ்ந்து மரித்தலே நன்றல்லவா? யான் என்னுயிர் விடுத்தேனும் என் கணவரை அறத் தாற்றுப் படுப்பேனுக. அம்மையே, தற்கொலைக் குற்றத் திற் கென்னையாளாக்க வேண்டாம். என்னை மன்னித் தருள்க. இற்றைநாள் வரை யானிழைத்த தவறனைத் தையும் பொறுத்தருள்க. உன் பொன்னடிக்கே போது கின்றேன். ஈர்த்தணைத்துக் கொள்ளுமம்மா. இதோ வருகின்றேன்" என்று மனமொழி மெய்களால் தாயை வணங்கி நச்சுக் கிண்ணத்தை வாயருகே கொண்டு செல் லத் துணிந்தார். என்ன ஆச்சரியம்! பால் வாயுறு முன்னர் அப் பாத்திரத்தில் ஏதோ வீழ்ந்த சப்தம் கேட்

டார். அஃதென்னவென உற்று நோக்கினர். இறைவன் வேதியர் வடிவத்தில் வந்து வாங்கிச் சென்ற மூக்குத்தி தான். அம்மையார் வியப்பெய்தினர். ஆனந்தக் கண்ணீ ருகுத்தார். சற்று நேரம் ஒன்று மறியாது ஓவியப் பாவை போல் வாளா நின்றார். அந்தணர் வடிவில் தன் பால் மூக்குத்தி பெற்றவர் ஸ்ரீமந் நாராயணனே யென் றறிந்து இறைவனது இன்ப வுருவினையும், அவன் திரு விளையாடலையும் எண்ணி யெண்ணி நெஞ்சுருகினர். இறைவனது பெறலருங் காட்சி எளிதிற் கிடைத்தமை கண்டு இன்பக் கடலில் ஆழ்ந்தார். மீண்டும் இறைவன் எப்போது வந்து தம்மை யாட்கொள்ளுவரோ? விரைந்து ஆட்கொண்டருள வேண்டுமே! ஆ! ஏழையேன் ஆண் டவனென்று அறிந்து கொள்ளாது போயினேனே" என்று விம்மி விம்மி யழுதார். சற்று நேரத்திற்குப் பின், பேரானந்தக் கடலினின்றும் தம்மை விடுவித்துக் கொண்டு, தம் மியற்கை நிலை கைவரப் பெற்று, கணவ ரிடம் விரைந்து சென்று மூக்குத்தியைக் கொடுத்தார்.

அடியார்கள் கலங்குகின்றபோது ஆண்டவன் அவர் களது கலக்கத்தைப் போக்கியருளுகின்றான். நல்லொழுக் கத்தினின்றும் வழுக்கி வீழுங்கால் ஊன்றுகோலாய் நின்று, அவ்வண்ணம் வீழா வண்ணந் தடுக்கின்றான். வீழினும் மீட்டும் நன்னிலைப் படுத்துகின்றான். மனந் தளருமிடத்து மனத் தளர்ச்சியைப் போக்கியருளுகின் றான். புனிதவதியாம் காரைக்காலம்மையார்க்கும் இவ் வாறே முக்கண்ணன் இடர்நீக்கி யருளினன். அவர் தம் கணவன் பரமதத்தன் ஒரு கனியை யுண்டு "மற்றதையும் கொணர்க" என்றபோது, அம் மற்றொரு மாங்கனியை விருந்தினர்க்களித்துவிட்ட அம்மையார் கணவன் சொற்

படி கனியைக் கொணருமாறு சென்று கனியிருந்த பாண்டத்தைக் கண்ணுதற் பெருமானைக் கருதிக்கொண்டே நோக்கினார். இறைவனருள் கூட்ட அங்கு விருந்தினர் தின்ற மாங்கனி மீட்டும் இருப்பதைக் கண்டு கணவர்க் களித்து இன்புற்றார். நமது நாயகரது மனைவியாரும் இடருற்ற ஞான்று இறைவனால் காப்பாற்றப்பட்டார். "பிறிது நினைப்பின்றித் தன்னை வழிபடும் அன்பரது நலமனைத்தும் யானே பார்த்துக் கொள்ளுகின்றேன்" என்று கண்ணன் கீதையில் கூறவில்லையா? அதே கண்ணன் தானே அம்மையாரிடம் அந்தண வடிவத்தில் வந்தது. அவ்வாண்டவன் தனது வாக்கைக் காப்பாற்றாது விடுவானா? ஒரு நாளும் நம்பினாரைக் கைவிட்டதில்லை நமது நாயகன்.

★

# ஐந்தாமதிகாரம்

## சீனிவாச நாயகர் சிறப்புறு தாசரானமை

நாயகர் மூக்குத்தியைப் பெற்றதும் கடையை நோக்கி விரைந்து நடந்தார். கடையைத் திறந்து பெட்டியையுந் திறந்தார். அப்பெட்டியினுள்ளிருந்த மூக்குத்தியைக் கண்டாரில்லை. வெறும் பெட்டி கண்டு மருண்டார். வெகுண்டார். வெகுளியினுல் மூளை குழம்பியது. தலை சுற்றியது. உடல் குலுங்கியது. "இஃதென்ன, மாயத்தினும் மாயமாய் இருக்கின்றதே! இப்பொழுது தானே கடையை விட்டுச் சென்றேன். கதவுகளும் பெட்டியும் யான் பூட்டிச் சென்ற வண்ணமே யிருக்கின்றன. இம் மூக்குத்தி எங்ஙனம் மறைந்திருக்கக்கூடும்? இது மனிதச் செயலாகத் தோன்றவில்லையே" என்று வியப்புடனும் சினத்துடனும் கடையை மீட்டும் பூட்டிக்கொண்டு வீட்டிற்கு வந்தார். எவ்வளவு எண்ணிப் பார்த்தும் உண்மை யொன்றும் புலப்பட்டிலது. நாயகர் தமது மனைவியை அழைத்தார். அவரும் வந்து எதிரில் எழுது சித்திரப் பாவை போல் நின்றுர். அம்மையாரைப் பார்த்து "மடக்கொடி நல்லாய்! உன்னை யொன்று கேட்க விரும்புகின்றேன். நீ சிறிதும் மறைக்காமல் உள்ளதைக் கூறுவாயாக. நீ துளசி பூசை செய்தபோது மூக்குத்தி யெங்கே யென்று கேட்டேன். அதற்குத் துளசி பூசை முடிந்த பிறகு மூக்குத்தியைத் தேடித் தருவதாகப் பகர்ந்தாய். ஆனுல், பூசை முடிந்ததும் மூக்குத்தியை

யெங்கும் தேடாமல் நேரே யென்னிடம் வந்து மூக்குத்தியைக் கொடுத்தாய். அது எனக்குச் சிறிது வியப்பையும் ஐயத்தையும் விளைத்தது. அன்றியும் சற்று முன்பு தான் விலைக்கொரு மூக்குத்தி வாங்கி, கடையில் வைத்துப் பூட்டிவிட்டு இங்கு வந்து மீளுவதற்குள் அம்மூக்குத்தி மாயமாய் மறைந்து விட்டது. என்னிடம் மூக்குத்தியை விற்றவன் பணத்தைப் பெற்ற பின்னர் அவன் எங்கு சென்றுனெனப் பார்த்துவர ஏவலாளரை விடுத்தேன். ஏவலாளர் சென்று பார்த்து வந்து அவன் விட்டலர் கோயிலுள் புகுந்து திடீரென மறைந்துவிட்டான் என்று கூறினர். இக்காரணங்களால் என் மனம் குழம்பியுளது. செல்வத்திலும் வெறுப்புத் தோன்றியுளது. உயிர் வாழவேண்டுமென்ற ஆசை கூட இல்லை. இங்ஙனம் திடீரென்று வாழ்க்கையில் ஒருநாளுமின்றி வெறுப்புத் தோன்றினமைக்குக் காரணமும் விளங்கவில்லை. அறநூலறத் தெளிந்து அறத்தைப் பற்றியடிக்கடி நல்லுபதேசம் புரிந்து வந்த புனிதவதியே! இவ்வேளையில் எனக்கு அறநெறியையும் விளக்குக. இப்பொழுதுதான் அவற்றின்மேல் ஆசை கொண்டேன். முன்போல் இகழ்வேன் என்று அஞ்சற்க. அரும்பெறற் பாவாய்! அன்று கூறிய அறவுரைகளைக் காற்றில் பறக்க விட்டேன். அவற்றில் என் மனம் பதியவில்லை. கல்லாத புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளென ஒரு காதின் வழியே புகுந்து மற்றொரு காதின் வழியே சென்றுவிட்டன. கழிந்த நாள் கருதி வருந்துகின்றேன். யான் உய்ய வந்த பாவையாக உன்னை யெண்ணுகின்றேன். முதலில் எனது ஐயத்தை யகற்றுவாயாக. யாதொன்றையும் மறைக்க வேண்டாம்" என்று மனைவியாரை நாயகர் கேட்டுக்கொண்டார்.

நாயகர் வேண்டுகோளின்படி சரசுவதியம்மையார் நடந்ததனைத்தும் ஒன்றுவிடாமல் விவரமாகக் கூறினார். அம்மையார் கூறியதைச் செவிமடுத்த நாயகர் ஆண்டவன் அருட்செயலை யெண்ணி யெண்ணி இறும்பூதெய்தினார். "நாயினேன் பொருட்டு நாராயணன் கால்கடுக்க நடந்தனனே. பணத்தையே பரம்பொருளென்று எண்ணி செல்வத்தில் ஆழ்ந்துகிடந்து ஆறுமாதகாலம் என்னை யாளுடையயனை யலைய வைத்த பாவியானேன். என்னே! என் ஏழைமதி யிருந்தவாறு! ஒன்றுக்கும் பற்றாத என்னையுய்விக்கும் பொருட்டு வேதியர் வேடமும், வணிக வேடமும் தரித்துவந்தனனே! இறைவனைக்காண எண்ணரும் தவமியற்றியவர்கள் காணாத நிலையில் நின்று தவிக்க, பரமலோபியாகிய பாவியை யாட்கொண்ட தெய்வமாரோ?" என்று பலவாறு இறைவனருட் செயலை யெண்ணினார். தாம் புரிந்த இழிதகைச் செயலுக்கு மனம் நாணினார். பாழ்வாழ்வெனும் படுகுழியில் வீழ்ந்துழன்றமைக்கு வருந்தினார். வாழ்க்கையின் உண்மை நிலையுணர்ந்ததும், நாயகருக்கு ஞானோதயம் ஏற்பட்டது.

"காதற்ற வூசியும் வாராதுகாண் கடைவழிக்கே" யென்ற மருதவாணனது உபதேசச் சீட்டைப் பார்த்த போது, செல்வத்திலே கிடந்துழன்ற கோடீசுரனான திருவெண்காடர் எங்ஙனம் பாரனைத்தும் பொய்யெனத் துறந்து கோவண ஆண்டியாக வீட்டை விடுத்துப் புறப்பட்டாரோ, அதே போன்று நமது நவகோடி நாராயணனாகிய நாயகருக்கு நாராயணனது மூக்குத்தித் திருவிளையாடலால், வாழ்வில் வெறுப்புண்டாயிற்று. இறைவன் பால் எல்லையற்ற அன்பு இடையறாதேற்பட்டது. ஐயோ! என் மனைவிக்கு ஏற்பட்ட ஞானம் எனக்கு ஏற்படாது

போயிற்றே! யான் எத்தகைய பாவியானேன்! அறச் செயல் புரியாது அற்பப் பொருளில் ஆசைவைத்தேனே. ஆண்டவனே வந்து இரந்த ஞான்று வணங்காமற் போனேனே. பாண்டுரங்கா! செல்வத்தினல் செருக் குற்று உன்னையும் உன்னடியார்களையும் இழித்துப் பேசி னேன். அதனுல் கொடு நரகிற்கு மீளா ஆளாயினேன்." என்று தம்மைத்தாமே நொந்துகொண்டார். அரி நாமங் களை அன்புடன் உச்சரிக்கலானுர். தாம் செய்த பிழை யனைத்தும் மன்னித்தருளுமாறு நாராயணனை மன்ருடி வேண்டிக்கொண்டார். "சுவாமி, அடியேனது கடைக்கு எந்த வடிவில் யாசகனுகி வந்துகொண்டிருந்தீரோ அந்த வடிவில் அடியேனுக்குக் காட்சி கொடுத்தருளல் வேண் டும். அங்ஙனம் கொடாதொழிவீராயின் உனது நாமத்தை யென்னுவினுல் உச்சரித்துக்கொண்டே என்னுயிரை உன் திருவடிகளில் விட்டிடுவேன்" என்றுகூறி ஊணையும், உறக் கத்தையும் உடன் துறந்து அரிநாம கீர்த்தனை புரிவா ராயினுர். இவ்வாறு மூன்று நாட்கள் கழிந்தன. அவரது மனைவியாரும் ஊண் உறக்கமொழிந்து உலகளந்த பெரு மாளின் தியானத்தில் ஆழ்ந்தார். இஃது ஒத்த அன்பினை யுடைய காதலியின் செயலல்லவா?

நான்காம் நாள் வைகறையில் சரசுவதியம்மையார் முறைப்படி துளசி பூசை செய்யும் நாள் வந்தது. அவர் தூயமனம் உள்ளவராய் பிருந்தாவனப் பிரியனுன கண்ண பிரானைத் தியானித்துக்கொண்டு அமர்ந்திருக்கும் பொழுது அந்தணர் வடிவில் ஆண்டவன் காட்சியளித் தார். உடனே அம்மையார் அளவற்ற மகிழ்ச்சியினுல் அவனது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, தமது விழி களினின்றும் அருவிபோல் வந்துகொண்டிருந்த ஆனந்தக்

கண்ணீரால் அவனது அழகிய திருவடிகளை அலம்பினர். மெய்ம்மறந்து இறைவனைத் துதித்தார். இறைவனே, அம்மையாரின் உண்மையன்பிற்கு உளமுருகி யாதுமறியா தவர்போலநடித்து "தமக்காக ஏன் ஊண் உறக்கந் துறந்து துன்புற வேண்டும்?" என்று கேட்டார். அம்மையார் தமது கணவனரின் விருப்பத்தை மிகப் பணிவாகத் தெரிவித்தார். ஆண்டவனும் அகமகிழ்ந்து புன்முறுவல் பூத்தவராய் "உனது கணவன் கடந்த மூன்று இரவுகளில் என்னைத்தியானித்து வந்த காரணத்தால் அவனது பாவங்களை யெரித்துவிட்டேன். அவனது உடலும் உளமும் தூயவாயின. ஆயினும் பொன்னாசையின்னும் அவனைவிட்டு நீங்கவில்லை. ஆகவே அவன் எல்லாவற்றையும் துறந்து எனது தொண்டனாகி வந்து நின்றால் அவனுக்குக் காட்சியளிப்பேன். இச் செய்தியை உன் கணவற்குத் தெரிவி. உனக்கு மங்களம் உண்டாவதாக. என்று கூறியருளி மறைந்தார்.

அம்மையார் ஆனந்த பரவசராகித் தம் கணவருக்கு ஆண்டவன் கட்டளையைத் தெரிவித்தார். இறைவனருளிப்பாட்டினை இரு செவியும் குளிரக் கேட்டின்புற்றார். பெறுதற்கரிய பேறு பெற்றதாகக் கூறி மகிழ்ந்தார். ஆனந்த பரவசராய் அரி நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டே ஆட வாரம்பித்தார். உடனே காவி யுடை தரித்தார். வீடும் சுற்றமும் விட்டார். செல்வமனைத்தும் அல்லல் எனத் தள்ளினர். வீதியில் வந்து நின்றார். துளசி யொன்றை யெடுத்து வீட்டின்மேல் வீசி யெறிந்து "கிருஷ்ணார்ப்பணம்" என்று கூறி வீட்டிலுள்ளபொருள்களனைத்தையும் ஏழைகளுக்குச் சூறையிட்டார். அரிநாம சங்கீர்த்தனம் புரிந்து கொண்டு மாருதி கோயில் வந்துற்

ளூர். கணவன் தந்த அரி நாம மகிமையால் பரிசுத்தமான பதார்த்தங்களை அம்மையார் சமைத்து அன்புடன் உதவினர். அதைச் சீனிவாச நாயகர் அங்கிருந்து கொண்டு ஆண்டவனுக்கு நிவேதனஞ் செய்தார். எல்லாரும் இறையன்பு மிக்கு மகிழ்ச்சியினால் இனிதாய் உணவருந்தினர். அன்றிரவு இறைவன், நாயகரின் கனவிடைத் தோன்றி, பம்பையெனும் பதியிலுள்ள சக்கர தீர்த்தக் கரையில் தவம் புரிந்துவரும் வியாசராய அடிகளிடத்தில் உபதேசம் பெறவேண்டுமென்று ஆணை தந்தார்.

மறு நாளே நாயகர் மனைவி மக்களுடன் பம்பைக்கு நடந்து செல்லத் துணிந்தார். வெகு தூரத்திலுள்ள அப்பதியை விரைவிற் போய்ச் சேர்ந்தார். ஆங்கு வீற்றிருந்த அடிகளை வணங்கி ஆண்டவன் கனவிடை அருளியதைப் பகர்ந்தார். அடிகளும் நாயகரது வரவினை ஆண்டவன் திருக் குறிப்பால் உணர்ந்திருந்தமையால் அவர் வந்ததும் மகிழ்ந்து நாயகருக்கு முறைப்படி மந்திரோபதேசம் புரிந்தார். சீனிவாச நாயகர் சிறப்புறு தாசரானார்.

தாசர் என்றாலும் அடியார் என்றாலும் ஒன்று. தாசர் என்னும் பதத்திற்கு ஆண்டவனிடம் அடிமை பூண்டு ஒழுகும் அன்பர் என்பது பொருளாகும். வட நாட்டிலும், கன்னட நாட்டிலும் வாழ்ந்த அடியார்கள் தாசர்கள் எனப் பெயர் பெற்றனர். இவர்கள் கையில் சிறு 'தம்பூரா, என்னும் நரம்புக் கருவியை வைத்துக்கொண்டு இறைவனது நாமங்களைச் சொல்லிப் பாடிக்கொண்டு நடந்து ஒரூரினின்றும் மற்றோரிடத்திற்குச் சென்ற வண்ணமாய் இருப்பார்கள். "ஓடு நமக்குண்டு வற்றாத பாத்திரம்;" என்ற பட்டினத்து அடிகள் வாக்கிற்கிணங்க அங்கங்கே பிச்சையெடுத்துப் புசித்து எடுத்த பிறவி ஈடேறுவதற்குரிய இறையன்பு வழி அல்லது பக்தி மார்க்கத்தில் இடை

யருது சென்றுகொண்டிருப்பார்கள். இன்றும் அத் தகையோரைப் பார்த்து மகிழலாம். நமது நவகோடி நாராயணன் தாசரானார். "புரந்தர விட்டல்" என்பது இவரை வேதியர் வடிவத்திலும், வணிக வடிவத்திலும் வந்து ஆட்கொண்ட ஆழி வண்ணன் ஆகவே, அவ ரது தாசர் என்பது தெரிய இவருக்குப் புரந்தர தாசர் என்னும் தீக்ஷா நாமம் ஏற்பட்டது.

புரந்தர தாசர் இயற்றப்போகும் கீர்த்தனைகள் எல்லா வற்றையும் புரந்தர விட்டலருக்கு அர்ப்பணஞ் செய்தல் வேண்டும் என்று குரு ஆணையிட்டார். அன்று முதல் தாசர் குருவின் ஆணை வழி நின்று அண்டர் நாயகன் திருப்பெயர்களுள் ஒன்ருகிய "புரந்தர விட்டல்" என்னும் திருக்கடைக் காப்புடன் கீர்த்தனைகள் பாடவாரம்பித்தார். இக்காரணம் பற்றியும் இவருக்குப் புரந்தர தாசர் என்ற பெயர் வந்திருக்கக் கூடும். மந்திரங்களை உச்சரித்துச் சித்த ரானார். தாசருக்குச் சகல சித்திகளும் உண்டாவதாக வென்று குரு ஆசியளித்தார். இறைவனது காட்சி கிடைத் தபோது "உகாபோக" என்னும் கீர்த்தனையை முதன் முதல் கன்னட மென்னும் தமது தாய் மொழியில் பாடி னார்.

அதன் பொருள் வருமாறு:— 'இன்றே நன்னாள், இவ் வாரமே நல் வாரம், இவ் வேளையே நல்வேளை, இவ் யோகமே நல் யோகம், இக்கரணமே நற் கரணம், புரந்தர விட்டலின் காட்சிப் பலன் பெற்றேன்" என்பதாகும்.

★

# ஆறு மதிகாரம்

---

## விசயநகரத் தரசரும், விட்டல் தாசரும்

புரந்தரர் வாழ்ந்த ஞான்று விசய நகரத்தில் கிருஷ்ண தேவராயரும், அச்சுதராயரும் அரசு புரிந்து வந்தனர். அவ்விரு பேரரசர்களும் வியாசராய அடிகளாரின் சீடர்கள். அவர்களின் வேண்டுகோளுக் கிணங்கி வியாசராய அடிகள் ஹம்பி யென்னும் இடத்தில் வெகு காலம் வசித்து வந்தார். கிருஷ்ணராயருக்குத் தமது நாட்டில் பெருஞ் செல்வராய்த் திகழ்ந்த, வணிக மன்னன், நவ கோடி நாராயணன், சீனிவாச நாயகர் எல்லாவற்றையுந் துறந்து சீர்சால் அரிதாசராகி வியாசராய அடிகள்பால் வந்திருக்கும் செய்தி தெரிய வந்தது. இராயர் இறும்பூதெய்தினர். உடனே வியாசராயர் மடம் வந்து சேர்ந்து புரந்தரரைக் கண்டு அளவளாவிய பின்னர், தமது அரண் மனைக்குத் தம்முடன் வருமாறு வேண்டினர்.

புரந்தரர் மன்னரின் வேண்டுகோளை மறுக்கமாட்டாமல் அவருடன் அவரது அரண்மனை போய்ச் சேர்ந்தார். மறைமுகமாகத் தாசரின் அனுபவங்களெல்லாவற்றையும் மன்னர் அறிந்து, இறைவனது திருவிளையாடலுக்கு மகிழ்ந்து பத்திப் பரவசரானர். மன்னர் தாசரை முறைப்படிப் பூசித்து அநேக ஆடை யணிகலன்களையும் அவருக்கு வழங்கினர். தாசர், கிருஷ்ணதேவராயரது அன்புப் பெருக்கினைப் பாராட்டிவிட்டு, அரண்மனை விடுத்து வெளியேறியதும், எளிய இரவலர்களையழைத்து

தாம் மன்னர்பாற் பெற்றவற்றை யெல்லாம் வழங்கி மகிழ்ந்த பின்னர் வியாசர் மடம் அணுகினர்.

தாசர் தாம் பெற்ற ஆடை யாபரணங்களை ஏழைகட்கீந்தமை கிருஷ்ணதேவராயர் அறிந்தார். தாசருக்குத் தாஞ் செய்த சிறப்புகள், அவர் தம் பெருமைக்கு ஏற்றவை யல்ல என்று கருதிபோலும், அவர் இங்ஙனம் எளியார்க் கீந்து விட்டார் என்று எண்ணினர்.

ஒரு சமயம் கிருஷ்ணராயர் வியாசராயர் மடத்திற்கு வந்து தாசருடன் அளவளாவிப் பேசிக் கொண்டிருக்கும் போது மன்னர் தாம் எண்ணியதைப் பற்றித் தெரிவித்தார். அதற்குப் புரந்தர தாசர் அரசரைப் பார்த்து "ஐய, தாம் எளியேனுக்குச் செய்த சிறப்புகளனைத்தும் எம்பெருமானுக்கு ஏழைகள் மூலம் போய்ச் சேர்ந்து விட்டன. ஆண்டவனது மக்களுக்குச் செய்யும் உதவி ஆண்டவனுக்கு அளவிலா மகிழ்ச்சியை யுண்டுபண்ணுகின்றது. தாங்கள் கொடுத்த ஆடையாபரணங்களைக் கொண்டு என்னுடலை அணி பெறச் செய்திருப்பேனாயின் எம்பெருமானுக்கு இவ்வளவு அன்பு ஏற்பட்டிராது. ஆகவே, தாங்கள் இதைத் தவறாக எண்ணவேண்டாம்" என்று கூறினர். இதனல் புரந்தர தாசர் உண்மைத் துறவி யென்பதை மன்னர் அறிந்து மகிழ்ந்தார்.

ஒரு சமயம் கிருஷ்ணராயருக்குச் சாதகப்படி கெட்ட யோகம் வரவும், அதை வியாசராயர் தமது தவ வலிமையால் மாற்றி யருளினர். அந் நேரத்தில் தமக்கு நேரவிருந்த இடுக்கணைப் போக்கியருளிய குருவின் கருணையைப் பாராட்டி, மன்னர் கெட்ட யோகத்தினின்றும் தப்பித்துக் கொண்டமை கருதி பல தானங்கள் புரிந்தார். புரந்தர தாசருக்கும் ஏதோ தானம் புரிய மன்னர் அவ

ரிடம் அணுகவும், அவர் தமக்குத் தானம் யாதொன்றும் வேண்டாம் என்றும் தானத்துக்குப் பதிலாக சக்கரத் தீர்த்தத் தருகில் ஒரு ஜப மண்டபம் கட்டித்தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அவ்வாறே அரசர் ஆயிரக்கணக்கான மக்கள் தங்குதற்குரிய பெரியதோர் மண்டபம் கட்டி அதற்குத் "தாசர் மண்டபம்" எனப் பெயரிட்டார். அம் மண்டபம் அங்கு இன்றும் நின்று நிலவுகின்றது. ஆனல் அது மிகவும் பழுது பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பத்திற்ருன் கிருஷ்ணராயர் வியாசராயர் மடத்திற்குச் சர்வ மானிய கிராமங்களும், கோபால கிருஷ்ண சுவாமிகட்கு அநேக இரத்தின மாலைகளும் அளித்தார். பிறகு அநேக கிராமங்கள் தவறிப் போய் விட்டன. ஒரு சில கிராமங்கள் மாத்திரம் இன்னும் இருக்கின்றன.

பிறகு சுவாமிகள் கிருஷ்ணராயருக்கு எல்லாப் பேறுகளும் உண்டாவதாக வென்று வாழ்த்தி வட நாடு நோக்கிப் புறப்பட்டார். புரந்தர தாசரும் குருவுடன் வட நாடு சென்று மீண்டு, குருவின் உத்தரவுப்படி பண்டரிபுரம் வந்து சேர்ந்து தங்கினர்.

★

# ஏழா மதிகாரம்

## மாருதியும் மத்துவபதியும்

தாசர் பண்டரிபுரத்தில் தங்கியிருந்த போது பல அருஞ் செயல்கள் நிகழ்ந்தன. அவற்றில் ஒன்றினை மாத்திரம் இங்கு எழுதுகின்றேன்.

புரந்தர தாசர் நாடோறும் பூசை செய்த பிறகு, அவ் வூரருகே கோயில் கொண்டெழுந்தருளியிருந்த மாருதி கோயிலுக்குச் சென்று வணங்கி, அவ்வாஞ்சநேயருக்கு அன்புடன் ஏதேனும் நிவேதனஞ் செய்த பின்னர்த்தான் வீடு வந்துற்று உணவு கொள்வது வழக்கம். இங்ஙனம் நடந்துவருகையில், உடற்றளர்ச்சியால் நமது தாசர் தமது இளைய மகனை மத்துவபதியை யனுப்பி மாருதிப் பெருமானுக்குப் பூசை நைவேத்தியங்கள் புரிவித்து வந்தார்.

மத்துவபதி அதுகாறும் கோயில் நிவேதனஞ் செய்யும் வழக்கம் அறியாதிருந்தான். ஆகவே, அவன் மாருதி கோயிற்சென்று, மாருதிக்கு அபிடேகஞ்செய்து, நைவேத்தியப் பொருளை ஆஞ்சநேயர் முன்னர் வைத்து, அவரை யுண்ணுமாறு வேண்டினன். மாருதி வடிவம் நைவேத்தியத்தை யென்றும் போல், பார்வையால் அருந்திற்றே தவிர, நம்போல் உண்ணவில்லை. இறைவனுக்கு நைவேத்தியஞ் செய்வதெல்லாம் அவனது அருட்பார்வை படட்டும், அவ்வுணவு தூய்மை பெறட்டும், அதை ஆன்மகோடிகள் உண்டு தூய்மையடையட்டும் என்ற நோக்கத்திறரன் முன்னோர்கள் இறைவன்முன் உணவு, கனி முத

லியவற்றை வைத்துப் படைக்கும் வழக்கத்தை மேற்கொண்டனர். மத்துவபதி இது அறியாத இளஞ்சிறுன். ஆதலால், ஆஞ்சநேயர் அதை யுண்ணுதிருந்த நிலைமையறிந்து மனமுளைந்து அவ் விக்கிரகத்திடம் "ஆஞ்சநேயரே, என் தந்தை நிவேதிக்கும் பொருளை யுண்கின்றீர். யான் மாத்திரங் கொடுத்தால் ஏன் உண்ணமறுக்கின்றீர்? நீர் வாய்திறந்து இப்பொழுது இவ்வுணவை யுண்ணுதொழியின், யான் சும்மாவிடமாட்டேன்'' என்று பிடிவாதமாய்ப் பேசினுன்.

மத்துவபதியின் உள்ளம் களங்கமற்றதாகும். மாருதி கற்சிலையென்று எண்ணவில்லை. மாருதியின் சிலை மாருதியே யென்றெண்ணி அதை நிவேதனம் அருந்துமாறு வேண்டினுன். மாருதியும் மத்துவபதியின் அன்பிற் கட்டுப்பட்டு, அவனது வேண்டுகோளை மறுக்க மனமின்றி, அவன் விருப்பப்படி அந் நிவேதனத்தை யருந்தி மகிழ்ந்தார்.

திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரும், வழக்கம் போல் வழிபாடாற்றுங் குருக்கள் ஒருநாள் உடலக்கேட்டால் பூசை புரியப்போக முடியாதவராய், தமது திருக்குமாரனை யனுப்பினுர். அவன் அருச்சனை புரிந்து நைவேத்தியத்தை வைத்துப் படைத்தான். பிள்ளையார் அருந்தாதிருந்த போது பையன் அதை யருந்துமாறு மிகப் பணிந்து வேண்டியழுதான். பிள்ளையாரும் பிள்ளையின் அன்பெனுங் கயிற்ருற் பிணிக்கப்பட்டு அதையுண்டு மகிழ்ந்தார்.

இறைவன்பால் அன்பிலார்க்கும், அவன் திருவிளையாடல்களில் நம்பிக்கை யற்றவர்கட்கும், இத்தகைய கதைகளின் உண்மை விளங்காது. மத்துவபதியின்

களங்கமற்ற மனம் இன்று நமது இளைஞர்கட்கு இருக்கு மானால் மாருதி அத்தகைய இளைஞர் அளிக்கும் அன் புடன் கலந்த உணவை அருந்தி மகிழ்வர். ஐயமின்று.

இம்மாதிரி மத்துவபதி சென்று நிவேதனத்தை வழக் கப்படி மாருதிக்களித்து மகிழ்ந்துவந்தான். சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் தாசர் உணவருந்த உட்கார்ந்திருந்த போது "மாருதிப் பிரசாதம் எங்கே?" என்று கேட்டு, அதில் ஒரு சிறிது கொணர்ந்து பரிமாறும்படிச் சொன் ஞர்.

நாலைந்து நாட்களாக அங்குள்ளவர்கட்கு மாருதிப் பிரசாத ஞாபகமே இருக்கவில்லை. மத்துவபதியை அழைத்துக் கேட்க, அவன் நடந்த விஷயத்தைக் கூறி ஞன். எல்லாரும் எல்லையிலா இறும்பூதெய்தினர். "கற் சிலை யுண்ணும் என்ற செய்தி யின்றுதான் கேட்டோம்" என்று கூறிப் பரிகசித்தனர். மத்துவபதி, அவர்களின் பரிகாச வார்த்தைகள் பொறுக்கமாட்டாமல், அழத் தொடங்கினன். தாசர் தம் மைந்தனுக்குத் தேறுதல் கூறி, மறுநாள் தம்மெதிரில் மாருதியை யுண்பிப்பாயாக வென்று கூறினர். மத்துவபதியும் அதற்குச் சம்மதித் தான்.

மறுநாள் தாசர் மத்துவபதியுடனே மாருதி கோயி லுக்குப் போய்ச் சேர்ந்தார். மத்துவபதி மாருதி தேவ ருக்கு மஞ்சனமாட்டி நிவேதனத்தின் பொருட்டுக் கொணர்ந்த அன்னத்தைக் கவளங்கவளமாகச் செய்து மாருதி வாயருகே கொண்டுசென்றான். மாருதி வாய் திறக்காது வாளா விருந்தார். மத்துவபதி மாருதியைப் பார்த்து "மாருதியே, வாயுபுத்திரனே! என் தந்தையின் முன்பு என்னை அவமானப்படுத்த எண்ணுகின்றாயா? நீ

இப்பொழுது உண்ணவிடில், என் தலையை யுன்பாத பீடத்தில் மோதி யுயிர்விடுவேன்" என்றுகூறி அழுதான். மாருதியும் மகவின் விருப்பப்படி வாய்திறந்து அன்னத்தை யுண்டார். புரந்தரதாசர் தமது இளைய மைந்தன் பாலுள்ள மாருதியின் அருளை நினைந்து மகிழ்ந்தார்; ஆச்சரியமுற்றார். அன்று முதற்கொண்டு அவனுக்குச் சாத்திரங்கள் பல கற்பிக்கத் தொடங்கினர்.

சில காலத்திற்குப் பின்னர் புரந்தரதாசர் தம் மனைவி மக்களுடன் இராமேசுர யாத்திரையின் பொருட்டு வெளிக் கிளம்பினர். வழியில் திருப்பதி சென்று, வேங்கடேசுவரப் பெருமானை வழிபட்டு, அங்கிருந்து புறப்பட்டுக் காஞ்சி, திருவரங்கம், ஸ்ரீமுஷ்ணம், தோதாத்திரி, கோனேரி ராசபுரம், சிதம்பரம், கும்பகோணம், மதுரை, இராமேசுரம், அனந்தசயனம், உடுப்பி முதலிய சிவஸ்தலங்கட்கும், வைணவதலங்கட்கும் சென்றார். சென்ற விடங்களிலெல்லாம் வழிபாடாற்றி அன்புநெறி யென்னும் பக்தி மார்க்கத்தின் மேன்மையைப் பற்றிப் பேசிச் சென்றார். அநேகர் இவருக்குச் சீடர் ஆயினர்.

கடைசியாக, தாசர், தென்னாட்டுத் தலயாத்திரையை முடித்துக்கொண்டு, மைசூர் நாட்டிற்குப் போய்ச் சேர்ந்தார். சிற்ப வேலைக்குப் பேர்போன பேலூர் சென்று அங்குள்ள ஆண்டவனை வணங்கினர். பின்னர் அவ்வூரில் வசித்து வந்த வைகுண்ட தாசர் என்னும் பெரியாரைக் கண்டு மகிழ்ந்தார். அப்பெரியார் தாசரைக் கண்டு மகிழ்ந்தார். தம்முடன் சிலகாலம் இருக்கும்படி வேண்டினர். அவர் விருப்பப்படி தாசர் சிலகாலம் அங்கேயே தங்கியிருந்து வைகுண்ட தாசருடன் தத்துவ ஆராய்ச்சி புரிந்தார். புரந்தரதாசர் அவ்வூரில் இருந்தபோது அவ்வூர்ப்

பெருமாளுகிய கேசவப் பெருமான் மீது பல கீர்த்தனைகள் இயற்றினர்.

தாசர் சில காலம் அங்கிருந்த பின்னர், மேற்கோட்டை யென்னும் திருநாராயணபுரம் சென்று, அவண் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள "செல்லப் பிள்ளை" என்னும் திருமாலை வணங்கிய பின்னர் பன்னூர் போய்ச்சேர்ந்தார். அங்கு வியாசராய அடிகள் வந்திருந்தார்கள். அவர்களையும் தாசர் தரிசித்து மகிழ்ச்சியடைந்தார்.

பன்னூர் விடுத்து, மொசலை, திருமுக்கூடல், நரசி புரம், நஞ்சன்கூடு முதலிய தலங்கட்குச் சென்று வணங்கி சீரங்கப்பட்டினம் வந்து சேர்ந்தார். அகிலம் புரக்கும் பெருமாளுகிய திருமால் பள்ளிகொண்டுள்ள முப்பெரும அரங்கங்களுள் இஃதொன்ருகும். இவ்வூரை மத்தியரங்கம் என்பர். இவ்வூரில் விசயநகரத்தரசரின் பிரதிநிதியொரு வர் இருந்தார். அவர் தாசரின் பெருமையுணர்ந்து, அவரை நன்கு மதித்தார். பிறகு அங்கிருந்து அப்பூர் சென்ருர். சில காலம் சென்னபட்டணத்தில் தங்கியிருந்தார். (இது மைசூர் நாட்டைச் சேர்ந்தது) சென்னபட்டணத்திலிருந்து அப்பூருக்குச் செல்லும் வழியில் ஒரு பாலம் கட்டு வித்தார்.

கோலார் ஜில்லாவைச் சேர்ந்த முளபாகலில் சிலகாலம் வசித்து. வியாசராய அடிகளுடன் மீண்டும் விசயநகரத் திற்குப் பிரயாணஞ் செய்தார். அப்பொழுது விசய நகரத் தில் அச்சுதராயர் ஆட்சிபுரிந்து வந்தார். அச்சுதராயர் இறந்த பின்னர் இராமராயர் அரசராஞர்.

இவ்வரசர் காலத்தில் பல பெரியார்கள் இந் நகரை விடுத்து வெளியே சென்று விட்டார்கள். அச்சுதராயர்

காலத்திலேயே, வியாசராய அடிகள் வீடுபேறெய்தினர். வியாசராயருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர், அவ்விடத்தை விட்டு மைசூர் வந்து சேர்ந்தார். புரந்தரதாசர் பண்டரிபுரம் போய்ச் சேர்ந்தார். தாசர் சுமார் நாற்பதாண்டுகள் தல யாத்திரை செய்தார். பல தலங்கட்குத் தாசர் சென்றிருந்தமைக்குத் தக்க சான்றுகள் உள்ளன. இவர் சென்ற விடங்களிலெல்லாம் நாட்டுப் பற்று, மொழிப் பற்று, கடவுட் பற்று என்ற மூன்றும் மக்களிடையே பரவின. இவர் தமது முதுமைப் பருவத்தில் பண்டரிபுரஞ் சென்று அங்கே தங்கினர்.

★

# எட்டா மதிகாரம்

## தாசரின் யாத்திரை

புரந்தரதாசர் பத்திநெறியெனும் அன்பு நெறியொழுகு வார்க்கு ஆற்றியதொண்டினை அகிலத்தார் என்றும் மறக்கமாட்டார். கீர்த்தனை முறைகளை மீண்டும் மக்கட் களித்தவர் நமது தாசரே. இவரது அடிச் சுவட்டைப் பின் பற்றியே, திருவையாற்றில் வீற்றிருந்து இராம பக்தி புரிந்து, இன்று போற்றப்படும் தியாகராஜரும், மராட்டிய நாட்டு மாண்புமிக்க இராமதாசரும், துக்காராம் முதலிய அன்பர்களும் கீர்த்தனை மாலைகளாம் வாடா மாலைகள் தொடுத்து எல்லாம் வல்ல இறைவனுக்குப் புனைந்தேத்தி மகிழ்ந்தனர்.

ஹிந்துமதக் கோட்பாடுகள் எல்லாம் வடமொழிக்கண் வரையப் பெற்றுள்ளன. வடமொழி வாணர்கள் மட்டுந் தான் அவற்றை அறிந்து பயன் பெறுவார்கள். ஏனையர் அவற்றை யறிய வழியின்றி யிருந்தனர். நமது தாசர் அவற்றை யெல்லாம், எளிய கன்னட மொழியில், கீர்த் தனைகள் மூலம், கற்றோரும் மற்றோரும் அறிந்தின்புற் றுய்யுமாறு உதவி யுள்ளார். இஃது கன்னட மொழிக்குச் சிறந்த பணியாகும்.

தாசர் இசைக் கலைக்குப் புத்துயிர் அளித்தார். இவர் இயற்றிய கீர்த்தனைகள் நான்கு லட்சத்து எழுபத்தையா யிரம் என்பர். ஒரு சில மாத்திரந்தான் நமக்குக் கிடைத் துள்ளன. வடமொழி யிலக்கணம், வேதம், தருக்கம்,

முதலியவற்றை நன்குகப் பயின்றவர்கள் பிறருடன் வாத மிட்டுக் கலாம் விளைத்து வந்தனர். அத்தகைய பண்டி தர்கட்குப் பத்தி நெறியறிவித்தவர் தாசர்.

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றுள் தொழாஅ ரெனின்"

என்ற வள்ளுவர் வாய்மொழிக் கிணங்க, ஆரவாரஞ் செய்ய மாத்திரம் கல்வி கற்றுப் பயனில்லை. வாதம் புரி வதற்கு மாத்திரம் படித்துப் பலனில்லை. பரமனிடம் பக்தி செலுத்த வேண்டும். அவனது திருவடிகளைப் பூசிக்க வேண்டும். அவனது திருவடிப் பேறுதான் எல்லாப் பேறுகளிலும் தலையாய பேறு என்றுணர்தல் வேண்டும். இங்ஙனம், பிறவிப் பிணிக்கு மருந்தாய பெருமான் திருவடிகளை வணங்காதார் கல்வி யொன்றுக் கும் பயன்படாது என்று கூறினார் வள்ளுவர். அதைப் போலவே, நமது தாசர் முத்திக்குரிய நெறி, பத்தி நெறி தான் என்றுணர்ந்தார். சங்கரரும் வெறும் இலக்க ணத்தை மாத்திரம் நெட்டுருச் செய்துகொண்டிருந்த வடமொழி மாணவர்களைப் பார்த்து இரங்கி, "மாணவர் களே! அர்த்த மற்ற முறையில் இங்ஙனம் நெட்டுருச் செய்வதை விடுத்து எல்லாம்வல்ல கோவிந்தனை வழிபடு வீர்கள்" என்ற கருத்துப்பட,

"பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்"

என்ற அருட்பாவினை யியற்றி யருளினார். படித்து வாத மிடுவார் செயலைத் தாயுமானுர் கண்டித்திருக்கின்றார்.

"கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றுமறி விலாதவென் கருமத்தை யென்சொல்கேன்"

என்ற அறவுரை கூறுவதும் வீண் வாதம் புரிபவர்களைத் திருத்த வேண்டியே. நமது வாதவூரையன்,

"உற்ருரை யான்வேண்டேன், ஊர்வேண்டேன், பேர்வேண்டேன்,
கற்ருரை யான்வேண்டேன், கற்பனவும் இனியமையும்,
குற்ருலத் தமர்ந்துறையும் கூத்தாவுன் குரைகழற்கே
கற்ருவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

என்று இறைவனிடம் இடையரு அன்பு வேண்டுகின்ற போது, எதிர்மறை முகத்தால் இன்னின்னவை வேண்டா மென்று விளக்கமாகவிமலனிடம் விண்ணப்பிக்கும் போது, "கற்ருரை யான் வேண்டேன்" என்றது எதன் பொருட்டெனின், வாதமிடுங் கற்றவரின் கூட்டுறவால், அமைதியும், அன்புங் குடிகொண்டுள்ள தமது மனம் கெடும் என்று கருதியேபோலும் இங்ஙனம் சொன்ஞர். 'அன்பே சிவம்' என்ருர் பெரியாரொருவர். அன்பும் சிவமும் இரண்டென்பர் அறியார். இத்தகைய அன்பின் சுவை பார்த்த புரந்தரர், "யான் பெற்ற இன்பம் பெறுக விவ்வையகம்" என்ற திருமூலர் இச்சையைப் போன்றதொரு இச்சை கொண்டார். ஆகவே, சென்ற விடங்களில் பக்தி நெறி பரப்பி மகிழ்ந்தார். அன்பர் பணியே அறப்பணி யென்றுணர்ந்தார். அத்தகைய பணியை அல்லும் பகலும் ஆற்றினர். அதன் பயனுக மக்களிடை வளர்ந்து வந்த பகைமை யொழிய நேர்ந்தது. பிறமத வெறுப்புத் தீர்ந்தது. அன்பெனும் ஆறு கரை புரண்டோடுங்கால், வெறுப்பெனும் அனல் அடியோடவிந்தொழியும். இது கருதியே நமது வள்ளுவப் பெருந்தகையார்,

"அறத்திற்கே யன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணை"

என்று கூறுவாராயினர்.

நமது தாசர் இவ்வன்பு நெறியை எல்லோருக்கும் எடுத்துபதேசித்தார். பிற்காலத்தில் சிலர் மதவெறி கொண்டு, பிறமத வெறுப்புடைய சில கீர்த்தனைகளை, தாசர் கீர்த்தனைத் தொகுதிகளிற் சேர்த்துவிட்டனர். அத்தகைய கீர்த்தனைகளின் நடையைக்கொண்டு அவை கள் "இடைச் செருகல்" என்றறிந்துகொள்ளலாம். பிறமத வெறுப்புக்களை யெல்லாம் போக்கவேண்டுமென் றும், அன்பு நெறியே அரிய நெறி யென்றும் மக்கட்கு அறிவுறுத்திய தாசர் பிறமதங்களைக் கண்டித்துக் கீர்த் தனைகள் இயற்றியிருக்க முடியுமா?

நமது தாசர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எனப்படு வோருக்கு நற்பணியாற்றி மகிழ்ந்தார். "சண்டாளர்" என்னும் பதத்திற்கு அவர் கொண்ட கருததறிந்தின் புறற்பாலது. ஒருவன் குலத்தாற் சண்டாளனுக விருக்க லாம். குணத்தாற் சாதி வேதியனுக விளங்கலாம். ஆகவே, பிறவியில் சண்டாளத் தன்மை கூறுவது தவ றென்றும், குணத்தால் சண்டாளத் தன்மை கூறுதல் பொருத்தமென்றும் கூறியதோடு அமையாது, அக் கருத்தை வைத்துச் சில கீர்த்தனைகள் இயற்றினர். தீண்டாமை யென்னும் பேயை யொழிக்கத் தாசரும் தம் மால் ஆனவரை முயன்றுர் என்பதறிகின்ருேம்.

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்று திருவள்ளுவர் கூறியுள்ளபடி பிறப்பினுல் உயர்வு தாழ்வு கற்பித்தல் தவருகும். ஒழுக்கத்தால் உயர்ந்த குடியினன் என்றும், ஒழுக்கமின்மையால் இழிந்த குலத் தினன் என்றும் நாம் உணர வேண்டும்.

புரந்தரதாசர் தம் வாணுள் முழுவதும் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து, பொதுவாக நமது நாடாம் இந்திய நாட்டையும், சிறப்பாகக் கருநாடாக நாட்டையும் அன்பெனும் அளப்பருஞ் சலதியில் ஆழ்த்திஞர்.

இப் பெரியார் இவ்வுலகிற்கு வந்த காரியம் முடிந்தது. கி. பி. 1564-ல் இவர் வீடு பேறெய்திஞர்.

## ஒன்பதா மதிகாரம்

# அரிதாசரின் அருங்கருத்துக் களிற் சில

தாசர், பல் வேறு சமயப் பெரியார்கள் கண்ட வுண்மைகளை யெங்ஙனம் உலகினர் உய்யும் பொருட்டுக் கூறிப் போந்தனரோ, அங்ஙனமே தாம் கண்டவற்றை யுலகினர்க்கு எடுத்தியம்புகின்றார். அரிதின் வருந்திப் பெற்ற அனுபவங்களை ஆன்மகோடிகள் உய்யும் வண்ணம், அவர்கள் பாலுள்ள அளவற்ற கருணையால் எளிய நடையில் இசையுடன் கலந்தளித்திருப்பது நாம் அறிந்தின்புறற்பாலது. அவர் கூறியுள்ளவற்றில் ஒரு சில மாத்திரங் கூறுகின்றேன்.

யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை முதலிய வற்றைப் பற்றி தாசர் கூறியுள்ளார். இவ் வுடலில் உள்ள உயிர், இவ் வுடலை விட்டு நீங்கிப் போகுங்கால், மாடுஞ் சுற்றமும், மனைவியும் மைந்தரும் பின் தொடரா மாட்டார்கள் என்னும் உணமையைக் கீழ்வருமாறு கூறி யின்றார்.

"ஓ! தெய்வமே! நீ என்னைக் காத்தருள்க. இப் பொழுது எளியேனைக் காப்பாற்ருவிடினும், இறக்கும் போதாவது காப்பாற்ற வேண்டும். எனக்குச் சகோதரர் கள், மைந்தர்கள் மனைவி யுண்டு. நிறைந்த செல்வமும் உண்டு. எண்ணற்ற சுற்றத்தாரும் உளர். யான் முடிவாக மயானங் குறுகும்போது, இவருள் யாரும் என் பின்

தொடரமாட்டார்கள். உயிர் விடுங்கால் உன்னுமம் என்னுவில் இருந்து உறு துணையாய் விளங்கும். ஆகவே, நீயே என்னைக் காப்பாற்றுவாயாக.''

இக் கருத்தினை, பாரனைத்தும் பொய்யெனவேயெனத் துறந்த பட்டினத்தடிகளின் பாசுர மொன்றிற் கண்டு மகிழ்வோமாக.

'கட்டி யணைத்திடும் பெண்டிரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கு மரம்போல் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டி யடிவைப் பரோஇறை வாகச்சி யேகம்பனே!''

என்ற பாசுரமாகும்.

மராட்டிய நாட்டு மாபெருங் கவியாம் இராம தாசரைப் போலவும், தமிழ் நாட்டுத் தெலுங்குக் கவியாம் தியாகராசரைப் போலவும், மனதினை முன்னிலைப் படுத்தி அதற்கு அறவுரை வழங்குகின்றார் நமது தாசர்.

''ஓ! மனமே! இவ் வுடலில் ஏன் மயக்கங் கொண்டிருக்கின்றாய்? வாசுதேவனை யெண்ணி யெண்ணி மகிழ்வாயாக. பற்களும் ஆடிவிட்டன. யாவரும் வெறுக்குமாறு முதுமையுற்ற வுடலில் உனக்கென்ன மோகம்? ஆகவே, மனமே, ஆண்டவனை நினைப்பாயாக. கண்களும் ஒளி மழுங்குகின்றன. இளமை கழிவுற்றது. உடல் நீர் மேற் குமிழிபோல் விரைவில் மறையும் இயல்பிற்று. ஆதலால், அழிதன் மாலையதாகிய மண், பெண், பொன்— இவற்றின்கண் இயல்பாயெழும் ஆசையைத் துறந்துவிடு. புரந்தர விட்டலரைச் சேர்வாயாக. அங்குமிங்கும் அலையாது ஆண்டவனைத் தியானித்து வாளாவிரு'' என்பதாகும்.

தாசர் இறைவனிடம் முழுப் பொறுப்பையும் விட்டு விடுவது கருதத் தக்கது, அவர் கூறுகின்றார்.

"ஓ! தெய்வமே! நான் உன்னையே முழுதும் நம்பி யுள்ளேன். ஆதலால், எனது குற்றங்களைப் பொருட் படுத்தாமல் என்னைக் காப்பாற்ற வேண்டும். எனது கருத்துக்கள் பிரமலோகம் வரையிற் செல்லுகின்றன. ஆனால், எனது மனமோ என் மனைவியிடம் எப்பொழுதும் சென்றுகொண்டிருக்கின்றது. கடவுளை ஒரு தடவைகூட என் கருத்தில் இருத்தியதில்லை. ஆதலால் இத் துயர் களைப் போக்கி யெளியேனைக் காத்தருள்க! அன்புநெறி காட்டி யாண்டருள்வாயாக! உனக்கஞ்சாமல், அறியாமை யில் மூழ்கி யெனது வாணாள் முழுவதும் கொன்னே கழித் தேன். ஒரு தாய் தனது குழந்தையைப் பராமரிப்பது போல எளியேனைப் பராமரிப்பாயாக!"

இஃது இறைவன்பால் அடைக்கலம் புகுவதாகும். இறைவனிடம் சரணாகதி யடையப் பெற்றோர்க்கு யாதொரு கவலையும் இல்லை. ஆண்டவன் அத்தகைய அன்பர்களை நிச்சயமாகக் காப்பாற்றுகின்றான்.

இவ் வாழ்க்கையில் கவலைகள் பலவுண்டு என்பதை யொரு கீர்த்தனையில் கூறுகின்றார்:

"எப்பொழுதும் இவ் வாழ்வில் கவலையே ஆனால் திருவரங்கன் மனத்தின்கண் குடி புகுந்து விட்டால் எல்லாக் கவலைகளும் போய்விடும். அவன் குடிபுகும் வரை யில் கவலைகள் எண்ணத்தொலையா. மணமாகும் வரையில் நல்ல மனைவி வாய்க்க வேண்டுமே யென்ற கவலை. பின்னர் குழந்தைகள் இல்லாவிடில் குழந்தைகளில்லையே யென்ற கவலை. குழந்தைகளிருப்பின் அவர்களைப் புரக்கும் கவலை.

பின்னர் பணத்தைச் சேர்ப்பதிற்கவலை. அதைக் காப்பாற்றுவதிற் கவலை. ஏழையாயிருந்தால், ஏழையென்னுங் கவலை. செல்வராயிருந்தால் செல்வத்தைப் பெருக்குவதாலுண்டாகுங் கவலை. ஆகவே, இவ் வாழ்வில் எப்பொழுதுங் கவலையே"

நமது பட்டினத்தார்

"அன்ன விசாரம் அதுவே விசாரம் அதுவொழிந்தால்
சொன்ன விசாரம் தொலையா விசாரம் நற்றேகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரம் இப்பாவி நெஞ்சுக்கு
என்ன விசாரம் வைத்தாய்? இறைவா! கச்சி யேகம்பனே"

என்று கூறியுள்ளார். இச் செய்யுளை ஒத்திட்டுப் பார்த்து மகிழ்வோமாக!

இக் கவலைகளைப் போக்குவதற்குச் சிறந்த வழி நமது வள்ளுவப் பெருந்தகையார்,

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

என்னும் குறளின் மூலம் தெரிவிக்கின்றார். தாசர் வாழுமுறைபற்றிச் சில அறவுரைகள் வழங்கியுள்ளார். அவை வருமாறு "முயற்சியின்றி வீடு பெறுதல் ஒண்ணுமோ? கடவுள் நாமத்தை யுச்சரிக்காது அன்பு நெறியை யடைய முடியுமோ? மனத்திடை உறுதி வேண்டும். கெட்டவர்கள் உறவை நீக்கவேண்டும்: ஐயங்களை விலக்குதல் வேண்டும். சிந்தனையை இறைவனுக்கே ஆக்குதல் வேண்டும். காமத்தையும், கோபத்தையும் நீக்கவேண்டும். அரிநாம கீர்த்தி பேசவேண்டும். பொன்னாசையை நீக்க வேண்டும். இறைவனிடத்தில் இணையற்ற உறவுகொளல் வேண்டும். தாமத குணத்தை நீக்கவேண்டும். சுற்றத்தார் கூட்

டுறவை விட்டுவிடு. பிறர் கோபமூட்டிய ஞான்றும் மகிழ வேண்டும். கடவுள் ஒருவரே பரம்பொருளென்றும், பெருங்குருவென்றுங் கருதவேண்டும். இவ்வுடல் நிலையற்ற தெனக் கருதவேண்டும். வீண்செயல்களை விட்டொழித் தல் வேண்டும். புரந்தர விட்டலை நம்புதல் வேண்டும். பாவங்களினின்றும் விலகுதல் வேண்டும். ஞானத்தில் எப் பொழுதும் நிலைத்து நிற்கவேண்டும்".

இப்பொன் மொழிகளில் சீரிய கருத்துக்கள் அடங்கி யிருக்கின்றன. "சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்" என்னும் அழகுபற்றி நம்மனோர் கடைத்தேறும் வண்ணம் கூறியுள்ளனவற்றை நன்கறிந்து அவற்றின் வழி நின்றால், வீடுபேறெய்தல் ஒருதலையாகும்.

வாழ்க நம் புரந்தரர்!

வாழ்க நந்தாய் மொழி!

★

# 2. கண்ணப்பர்

## முதலதிகாரம்

## பிறப்பும் வளர்ப்பும்

திருக்காளத்திக் கண்ணப்பர் என்று ஆன்றோர்களால் புகழப் பெறும் அடியார் வாழ்ந்த நாடு பொத்தப்பி நாடு என்பதாகும். அந்நாட்டில் உடுப்பூர் என்பது அவர் அவதரித்தபதியாகும். அந்நாட்டில் வாழ்பவர்கள் குன்றவராகிய வேடர்கள். இவர்கள் வேட்டையாடுந் தொழிலுரிமை பூண்டவர்களாகையால், வேட்டையாடுதற்குதவியா யிருக்கும் பார்வை மிருகங்கள் வைத்திருந்தனர். பார்வை மிருகம் ஒரு மிருகத்தைப் போலச் செய்து வைத்துக்கொண்டு அதைக்காட்டி அதன் இன விலங்குகளைப் பிடித்தல் வழக்கம். இவர்கள் வீடுகளின் முன்புறத்தில் உள்ள விளா மரங்களில் வார்வலை தொங்கும். பன்றி, புலி, கரடி, கடமை முதலிய இனங்களின் பார்வை மிருகங்கள் அங்கே கட்டப் பட்டு உணங்கிக் கிடக்கும். முன்னே காணக்கிடக்கும் பாறைகளில் மலைநெல் காயும். அங்குப் புலிக்குட்டி, யானைக்கன்று என்றிவற்றோடு வேடர்களது புன்றலைச் சிறுமகார்கள் விளையாடுவார்கள்.

வேட்டுவச் சிறுமிகள் அன்புடன் வந்து சேருகின்ற பெண்மான்களோடு விளையாடிக் களிப்பார்கள். அவ் வேடர்கள் தம்மை யெதிர்த்தோரை வெல்லுகின்ற படை களைத் தாங்குவார்கள். கொல், எறி, குத்து என்னும் வன்கண்மை நிறைந்த வார்த்தைகளை யுடையவர்கள். அவர்களது உடுக்கை, கொம்பு, சிறுபறை முதலியவற் றின் ஓசையெங்கும் பரந்தொலிக்கும். கல்லெனும் ஒலி யுடன் ஓடும் மலையருவிகளின் ஓசையும் எங்கும் கேட்கப் பெறும்.

வேடர்களின் வாழ்க்கை ஆறலைத் துண்பதாகும். அயற்புலங்களினின்றும் ஆனிரைகளையும் ஆனைகளையும் கவர்ந்து வருவர். இம் மறவர் மைக்குழம்பு திரண்டது போன்ற உடம்பினையுடையவர். கொடுந் தொழிலன்றி வேறறியார். அச்சமும் அருளும் இன்னதென்றறியா மாந்தர். மலைகளிற்றேடி யெடுக்கும் மலைத்தேனும், மிருகங் களின் மாமிசமும், மலை நெல்லின் சோறும், இவர்கட் குண வாகும்.

இம்மற வேடர்கட்கு அரசனாய் விளங்கியவன் நாகன் என்பவன். கண்ணப்பரை மகனாகப் பெறுதற்கு முற் பிறவியில் மிகுந்த தவம் புரிந்தவன். எனினும் தான் பிறந்த குலம் வேடர் குலமானதால் அதற்குரிய குற்றத் தையே குணமாக்கொண்டு வாழ்பவன்; கொடியவன்; விற் றொழிலிற் சிறந்த வீரம் பொருந்தியவன். கொடிய கோபத்தையுடைய ஆண் சிங்கத்தை யொத்தவன். அவனது வாழ்க்கைத் துணையாகிய தத்தை யென்பாள் வேடர்தம் பழங்குடியில் வந்தவள். பெரிய புலியினது பல்லாலாகிய தாலியின் இடையிடையே சங்கு மணிகளைக் கோர்த்துக் கழுத்தின் புறமாகிய முதுகு முதலிய விடங்

THE MADURA TAMIL SANGAM



களில் அலையும்படித் திரிந்தவள். அச்சந்தரும் பெண் சிங்கம் போன்றவள்.

ஒப்பற்ற சிறப்புடைய அவர்களுக்கு நீண்டகாலம் புதல்வர்ப் பேறு இல்லாமல் இருந்தது. அவர்களுக்கு வயது அதிகமாய் இருந்தபடியால், இனி மகப்பேற்றிற்கு வழியில்லை யென்று எவரும் சொல்லலாயினர். ஏனைய செல்வங்களிருந்தும், தமக்குப் பிற்காலத்தில் வேடர் குடி மக்களைப் புரத்தற்குத் தலைவனின்றிப் போவது குறித்து நாகனும் தத்தையும் மனக் கவலை கொண்டு பெரிதும் வருந்தினர். பிள்ளை யில்லாத பாக்கியம் பெற்றிருந் தென்ன சிலாக்கியம் என்று ஏங்கினர். உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றித் தவிக்கும் ஏழையரேனும் குழந்தை யின்றேல், அதன் பொருட்டுக் கவல்வார்க ளெனின், செல்வமிக்கு வாழும் செல்வர்களும், அரசர் களும் மகப் பேறின்மைக்கு வருந்துவதில் ஆச்சரியமில்லை. இவ்விஷயத்தில் அரசனும் ஆண்டியும் ஒன்றே.

நாகனும் தத்தையும் மகப்பேற்றின் பொருட்டு அடியார்கள் முன்னியதை முடித்துத் தரும் பெருமானாகிய முருகப் பெருமானது திருமுன்றிலிற் சென்று பராவுக் கடன் பலவுஞ் செய்து வழிபட்டனர். வாரணச் சேவலும் வரிமயிற் குலங்களும் விட்டனர். தோரணமணிகள் தூக் கினர். மலர் மாலைகள் தொங்கவிட்டனர். குரவைக் கூத்துடன் அணங்காடல் நிகழ்த்தி பெருவிழாச் செய் தனர்.

அன்பர்கள் வேண்டியவற்றை வேண்டியபோதே அளிக்கும் கருணைக் கடலாகிய கந்தவேள் திருவருள் பாலிக்க, தத்தை கருவுற்றாள். இஃதுணர்ந்த நாகன் மாதந்தோறும் பலிகள் போக்கி வெறியாட்டயர்வித்

தான். பத்துத் திங்கள் கழிந்தபின், பான்மதி தன்னை உவரி யீன்றாற்போல, தத்தை ஓர் ஆண் மகவை ஈன்றனள். இஃதறிந்த வேடர்கள் மகிழ்ச்சி மீக்கூர மணிமழை சிந்தித் துடி முதலிய மங்கல வாத்தியங்கள் முழக்கினர். எங்கும் மலர் மழை பொழிந்தது. தேவ துந்துபிகள் முழங்கின. மலைச் சிறார்க்குடிகள் பெருவிழாக் கொண்டாடினர். கருவரை யொன்று காளமேகத்தை யேந்தியது போல நாகன் புதல்வரை எடுத்துக்கொண்டான்.

அப்போது அழகிய அக்குழவி புலிக்குட்டிபோலப் பொலிந்தது. அங்குள வேடர்களது அளவிலே யன்றி உலக முழுதும் போற்றும் நற்குறிகளுடன் விளங்கியது. நாகன் அம்மகவினைக் கையிலேந்தற் கருமையாய்க் கனத்துக் காணப் பெற்றமையால், அதற்குத் திண்ணன் என்ற பேர் வைத்து, திண்சிலை வேடர் தம்மையும் அவ்வாறே அழைக்கும்படிச் சொன்னான்.

புண்ணியப் பொருளாயுள்ள அக்குழவிக்கு வேடர்களது மரபின்படி பல அணிகலன்களை அணிந்தனர். தெய்வங்களுக்குப் பருவந்தோறும் பெருமடையிட்டு வழிபட்டனர். திண்ணனார் ஓராண்டு நிறைவெய்திச் செல்லத் தளர்நடை யிட்டு நடந்தனர்; பின், நாட்செல்லக் குதலை மொழி பேசிப் பெற்றோர்க்குவகை யூட்டினர்.

"குழலினிது யாழினி தென்ப தம்மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்"

என்ற பொதுமறைப்படி, நாகனும் தத்தையும் அரிதின் தவங்கிடந்து பெற்ற புதல்வரின் மழலைத் தீஞ்சொல் செவி மடுத்தின்புற்றார். அவர்தம் மெய் தம்மெய்யினிற் பட்டுத் தாங்கரும் மகிழ்வெய்தினர். பின் குறுநடை கொண்டு சிறுதுடிக் குறடு உருட்டி விளையாடினர்.

ஐயாட்டைப் பிராயம் அடைய, சீறூர்ப் புறத்து உழலை வேலியின் புறச்சிறு கானிற் சென்று, முயல், காட்டுப் பன்றி, புலி, செந்நாய் முதலிய கொடிய விலங்குக் குட்டிகள் பலவற்றைக் கொணர்ந்து வீட்டின் முன்புறத்திலுள்ள மரங்களிற் கட்டி வளர்த்தனர். ஒருநாள் திண்ணனார் புலிப்பார்வையின் பெரிய வாயைக் குகை யென்றெண்ணி, அவ்வாயினுட் கையை நீட்டினார். இதைக் கண்ட நாகன் அக்குழந்தை யவ்வாறு செய்ய வொட்டாமற் றடுக்கவேண்டி பைந்தழை கைக்கொண்டு ஓச்சினார். அது பொறுக்கமாட்டாமல் திண்ணனார் கண்ணீர் முத்து முத்தாக வடித்தார். இக்குழந்தை யழுவதைப் பார்த்து, தத்தை யோடிவந்து முத்தமளித்து மகவின் துயரினை மாற்றினார். இந்நிகழ்ச்சியினை,

"பொருபுலிப் பார்வைப் பேழ்வாய் முழையெனப் பொற்கை நீட்டப்
பரிவுடைத் தந்தை கண்டு பைந்தழை கைக்கொண் டோச்ச
இருசுடர்க் குறுகண் தீர்க்கு மெழில்வளர் கண்ணீர் மல்கி
வருதுளி முத்த மத்தாய் வாய்முத்தங் கொள்ள மாற்றி"

என்று சேக்கிழார் சித்திரித்துக் காட்டுதலைக் கண்டின்புறுவோமாக!

இச்செய்யுளில் "இருசுடர்க் குறுகண் தீர்க்கும் எழில் வளர்கண்" என்ற அடியினால், திண்ணனாருடைய கண்கள் சாதாரண மனிதர்களுடைய கண்களைப் போன்றன வல்ல, இறைவனுடைய திருநயனங்களாகத் திகழுகின்ற சூரிய சந்திரர்கட்கு ஏற்படப்போகும் ஊறினை (இரத்தம் சொரியப்போவதை), தமது கண்களையப்பிப் போக்கப் போகிறார் என்ற குறிப்பை இவ்வடியில் சேக்கிழார் வைத்துள்ளமை யறிந்தின்புறத் தக்கது.

★

# இரண்டாமதிகாரம்

## திண்ணனின் விற்பயிற்சி

திண்ணனர் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து வந்தார். இவரைப் பார்த்துக் கொள்ளுவதற்கு செவிலித்தாய் ஒருத்தி வேடர் குலக்கொடி, திண்ணனரை மிக அருமையாக வுண வூட்டி, விளையாடும் விளையாட்டில் விளையாடும்படி விட்டு, வளர்த்து வந்தாள். இவ்வாறு விளையாட்டுப் பருவம் கழிந்தது. பனிரண்டாம் ஆண்டு பிறந்தது. இப்பருவத்தில் வில்வித்தை பயிற்ற நாகன் எண்ணினன். தனது மனைவியாகிய தத்தையிடம் அக் கருத்தைத் தெரிவித்தான். அவளும் மகிழ்ந்தாள். கல்விப் பயிற்சி ஐந்தாண்டில் தொடங்கப் பெறுதல் மரபு. வில் வித்தைக்கு உடல் வளம் வேண்டும். ஆகவேதான் பனிரண்டாமாண்டில் இவ்வித்தை தொடங்கப் பெறுவது வழக்கம்.

சிலைத்தொழிலே வேடர்க்குரிய சிறந்த வித்தையாம். இத்தொழிற் பயிற்சியின்றேல் வேடர்குலத் தலைமை பூணத் தகுதியுள்ளவனகான். நாகன் தனதுமரபிற் சிலைத் தொழில் பயில்விக்கும் முதிய ஆசிரியர்கட்கு ஆள் விடுத்தான். நல்லநாளில் எக்காரியத்தையும் ஆரம்பிக்க வேண்டுமென்னும் நியதி யிருக்கின்றமையால், நல்லதினம் பார்த்து அத்தினத்தில், "வேடர்களுடைய அரசனுகிய நாகன் வெற்றியையுடைய முருகப் பிரான் திருவருளால் பெற்ற

அறிவுடையாரினும் மிக்குச் சிறந்த செயலையுடைய திண்ணனார் விற் பிடிக்கின்றார்'' என்று, வெற்றி தரும் இயல்பினையுடைய உடுக்கை ஒலிப்பித்து அறிவித்தான். அரசாங்கத்தார் பெருநிகழ்ச்சிகளைப் பலரறியச் செய்யுங்கால், முரசறைந்து குடிமக்கட்குத் தெரியப்படுத்துவது வழக்கம். அதுபோல்வே நாகனும் வேடர்குலத் தரசனாமையால் இளவரசாகிய திண்ணனாரின் வில் விழாவை மக்களறியும் படிச் செய்தான்.

நாகன் தவஞ்செய்து பெற்ற திண்ணனார் வில்விழாவினைக்கேட்ட வேடர்கள், தத்தம் மக்கட்கு வில்வித்தை பயிற்றுங்கால் ஏற்படும் மகிழ்ச்சியினும் பன் மடங்கு மகிழ்ச்சி யுடையராய், மலை நாட்டுக் கருப்பொருள்களாகிய மணியும், பொன்னும், முத்தும், புலித்தோலும், யானைக் கொம்பும், மயிற்பீலியும், தேனும், ஊனும், பழங்களும் கிழங்கு மாகியவற்றைச் சுமந்து கொண்டு நாகன் வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். நாகன் அவற்றைப் பார்த்து மகிழ்ந்தவனாய் அவர்களை மிகமகிழ்ச்சியோடு வரவேற்றுப் பந்தரின் கண் அமரச் செய்தான். "பல இளைஞர்கள் கூடிப் பாராட்டத் தெய்வத்திற்குப் பராவுக்கடன் பலவுஞ் செய்து வில் விழா எடுப்பீராக!'' என்று நாகன் கூறினான்.

விழாச் செய்து பிடிக்கும் பொருட்டுத் தனியானதொரு வில் தக்க வினைஞராற் சமைக்கப்பட்டதைக் காப்புச் செய்தார். சிலைத் தொழிற்பயிலும் திண்ணனாருக்கும் காப்பிட்டார். இக்காலத்தார் இச்சடங்கினை ரக்ஷாபந்தனம் என்னும் வட சொல்லால் வழங்குவர். மஞ்சள் தடவிய நூற்கயிற்றால் கட்டுவது வழக்கம். நமது திண்ணனாருக்குக் கட்டியது, "திண்புலி நரம்பிற்செய்த நல மிகு காப்பு'' என்று கூறப்படுகின்றது. காப்பணிந்தபோது

வாத்தியங்கள் முழங்கின. வேடர்களனைவரும் மரபுக்குரிய வாழ்த்துக்களை எடுத்துச் சொல்லி வாழ்த்தினர்கள்.

வில் விழா நாளில், வந்திருந்த வேடர்களனைவருக்கும் மலை நெற் சோறும், வெவ்வேறு வகையான புல்லரிசிச் சோறும், அட்டிற்றொழில் வல்ல வேடர்கள் சமைத்து அவற்றோடு கலந்த ஊனும் கிழங்குகளும் சேரச் செய்குன்றைப்போற் குவித்தனர். வேடர்கள் விலாப்புடைக்க உண்டு மகிழ்ந்தனர். விழாக்காலமாதலால் வேடர்களிற் சிலர், செந்தினைமாவும் தேனும் கூட்டியுண்டனர். சிலர் இறைச்சியைத் தேனிலே தோய்த்து உண்டனர். வேறு சிலர் விளாம் பழத்தைத் தேன் கலந்து பிசைந்து கவளமாக்கி உட்கொண்டனர். இறந்த ஈசல் உண்டியை ஆசையோடு மிசைந்தார் பலர்.

இவ்வாறு உடுப்பூர் வேடர் வேடிச்சியர், பக்கமலைச் சாரற் புலத்தினின்றும் போந்த இருபாலாரும், அவர்தம் மிச்சையின் வழியே உணவினைத் தின்று தேக்கெறிந்தனர். அதன் பின்னர் பலவகை நறவு மாந்தி மயல் பொருந்திய களியாட்டத்திற் பொருந்தினர். பலவகை மலர்களைப் பறித்து மாலை தொடுத் தணிந்து மகிழ்ந்தனர்.

தொண்டகச் சிறுபறையும், கொம்பும், உடுக்கையும், புல்லாங்குழலும் எட்டுத்திக்கிலும் நிறைந்து எழுந்து ஓசைபட, திண்ணிய வேடர்களின் ஆரவாரமுங் கலந்து திருவிழாவைச் சிறப்பித்தது. ஊரினை வலப்புறமாகச் சுற்றி வந்தனர்.

வேடர்கள் வரிக்கூத்து ஆடினர். வேடிச்சிகள் துணங்கைக் கூத்து ஆடினர். மிக்க மகிழ்ச்சியோடு அச்சந்தரும் தெய்வப் பெண்களும் அவ்விழாவின் போது

ஆடினர். வெற்றி தரும் வில் விழாவை நாடோறுங் கொண்டாடி வந்து, ஏழாம் நாள் முன்னை நாள்களைவிட இருமடங்கு அதிகமாகக் கொண்டாடினர் வேடர்கள். இம்மாதிரி கொண்டாடப் பெற்ற விழாவின் இறுதி நாளாகிய ஏழாம் நாளில், நண்பகற் பொழுதில், எங்கும் மங்கல வாழ்த்து மல்க, பல்லியங்கள் ஆர்ப்பெழ, வேடர் குலத் தொல்லாசிரியர் ஒருவர், தனுத் தொழிலிற் சிறந்தவர் பால், திண்ணனாரைப் போர்புரிய வல்லதாகிய வில்லினைப் பிடிப்பித்தார்கள். அன்று முதல் திண்ணனார் விற்றொழில் செவ்வனே பயின்று அக்கலையில் வல்லவராயினர்.

★

## மூன்றுமதிகாரம்

# திண்ணனார் மலையாளும் உரிமை சூட்டப் பெறுதல்.

நமது திண்ணனார் கலைவளர் திங்களைப்போல, விற்கலையுடன் வேறு படைப் பயிற்சியும் கைவரப் பெற்று பதினாறுண்டுப் பிராயம் எய்தினார். அப்பொழுது நாகனுக்கு வயது சுமார் எண்பது இருக்கலாம். திண்ணனார் திருவவதரித்த போதே நாகனுக்குச் சுமார் அறுபதுக்குமேல் இருந்திருக்குமென்று எண்ணுதற்கு ஆதாரம் உள்ளது. நாகன் உடல் வலிமை யுடையவனா யிருந்தமையால் திண்ணனார் பிறந்த பிறகு கூட பல்லாண்டுகள் தளர்ச்சியின்றி வேட்டையாடி வந்தான்.

அவ்வாறு வேட்டையாடிவந்த நாகனுக்கு அதிக வயதாகவே வேட்டையாட முடியாது போயிற்று. மாதந்தோறும் வேட்டையாடுவது நின்று போயினமையால், கரடி, புலி, காட்டுப் பன்றி, காட்டுப் பசு, மரை, மான்கள் முதலிய விலங்குகள் அதிகரித்து, புனங்களை யழித்தன. வேடர்களையும் வருத்தின. வேடர்களெல்லாரும் திரண்டு சென்று நாகனிடம் முறையிட்டார்கள். அவர்தம் முறையைச் செவி மடுத்த நாகன் வேடர்களை நோக்கி, "வேடர் குடிமக்களே! எனது மூப்பினால் முன்புபோல் வேட்டையாட முடியவில்லை. உடல் மிகவும் தளர்ந்துவிட்டது. என் மகன் தக்க பருவம் அடைந்துளான். அவனை யுங்கட்குத் தலைவனாகச் செய்ய எண்ணுகின்றேன்" என்றான்.

இவ்வார்த்தையைக் கேட்டதும் வேடர்கள் தமது தலைவனது மூப்பு நிலைமையினையும், அது காரணமாக அவன் தமது தலைவனுந் தன்மையினின்று நீங்குவதனைப் பற்றியும், மனமிரங்கினர். ஆனால், மேன்மையுடைய தலைவனுகத் தனது மகனைச் செய்வதுபற்றி மகிழ்ந்து, "அத்தனே! இத்தனை காலமும் உனது சிலையாட்சியின் கீழ்த் தங்கி இனிதுண்டு தீங்கின்றி வாழ்ந்தோம். இன்னும் உனதருள் வழியே நிற்பதல்லால் வேறு வழியுண்டோ? அதுவேயுமன்றி, உடல்வலிமை மிக்க திண்ணனை உன் மரபிலே மிகவும் மேன்மையடையவே பெற்று அளித்தாய்; விளங்கும் மேன்மை வைத்த வில்லினை யேந்திய உன் மைந்தனை இங்கே யழைத்து உங்கட்குரிய மலையாட்சி யுரிமையை அவனுக்குக் கொடுத்தருள்வாயாக." என்று வேடர்கள் மகிழ்ந்து கூறினர்.

வேடர்கள் இங்ஙனம்கூற நாகன் திண்ணனுரை வரும்படிச் சொல்லி யனுப்பித்தான். தேவராட்டிக்கும் ஆள் விடுத்தான். அவளும் விரைந்து வந்து சேர்ந்தாள்.

நாகன் நரை மூதாட்டியாகிய தேவராட்டியைப் பார்த்து, "அன்னையே! நீ வறுமை நீங்கிப் பெரிதும் இனிது வாழ்ந்து வருகின்ருயா?' என்று கேட்டான். தேவராட்டி நாகனை வாயார வாழ்த்தி, மெல்லிய மாமிசமும் ஈயலும் தேனும் மலைபடு வளங்களும் நீ வகுத்தபடியே பெற்று வாழ்ந்து வருகின்றேன். என்னை அழைத்த பணி யாது?" என்று கேட்டாள்.

நாகன் தேவராட்டியை நோக்கி "அன்னையே! எனது கோதிலாக் குணமைந்தன் என் குலத்தலைமை யான் கொடுப்ப, அவன் வேடர்களைக் காக்கும் மலையாட்சி பெறப் போகின்ருன். அவனுக்கு என்றும் எனக்கு மேலாக வேட்

டைத் தொழில் வாய்க்கும்படியும், அயற் புலங்களைக் கவருதலில் வெற்றி வாய்க்கும்படியும் வனத்துறை தெய்வங்கள் விரும்பி யுண்ணக் காடுபலி யூட்டுவாயாக" என்று கூறினன். அவ்வார்த்தைகளைக் கேட்ட தேவராட்டி மிக மகிழ்ந்து, "இங்கு வரும்போது என்றுமில்லாத சுப சகுனங்கள் தோன்றின. அதனால் உன் மைந்தன் உன்னை விடச் சிறந்து விளங்குவான்" என்று வாழ்த்தி காடுபலி யூட்டுதற்குரிய பொருள்களைக் குறைவறப் பெற்றுச் சென்றாள்.

தேவராட்டி போன பிறகு, திண்ணனார் வந்து தமது திருத்தாதை கழல் பணிந்து நிற்ப நாகன் அரும் பெறற் புதல்வனரை அணைத்துத் தழுவி ஒருபுலித்தோலாசனத்தில் வீற்றிருக்கும்படி வைத்தான். பின்னர் நாகன் திண்ணனாரைப் பார்த்து "மைந்த! மூப்புவந்தெய்தினேன். இனி வேட்டையாட என்னால் இயலாது. ஆகவே, இவ் வேடர் குலத் தலைமை பூண்டு பகைப் புலங்களை வென்று விலங்கு வேட்டையாடி, உனது மரபுரிமையைத் தாங்குவாயாக," என்று ஆசி கூறித் தன் அரசாங்க அடையாளமாகிய உடை தோலையுஞ் சுரிகையையும் அவர் கையில் அப்பொழுதே கொடுத்தான். திண்ணனார் தமது தந்தையின் தளர் நிலையறிந்து, மறுக்காமல், தந்தையளித்ததைப் பெற்று மகிழ்ந்தார். நாகன் திண்ணனாரைப் பார்த்து "மைந்தனே! நம்முடைய குல வேடர்கள் யாதொன்றானும் நலிவுறாமல், அவர்கட்கு நன்மையே செய்து, பகைப் புலங்களைக் கவர்ந்து அதனிற் பெறும் வளங்குன்றாச்சிறப்பில் வாழ்வாயாக! நல் வேட்டைகளும் உனக்கு வாய்க்கும். இனிக் காலந் தாழ்க்காமல் இவ்வேடர்களோடு வேட்டைமேற் செல்வாயாக!" என்று விடை கொடுத்தான்.

★

# நான்காமதிகாரம்

## கன்னி வேட்டை

திண்ணனார் தந்தையின் திருவடிகளிற் றாழ்ந்து வணங்கி விடைபெற்றுக் கொண்டு வெளிப்போந்து வேடர்களோடும் போய் மங்கல நீர்ச்சுனை படிந்து, பின் வீட்டிற்றங்கி, வைகறையில் வரிவிற்சாலை புகுந்து வேட்டைக்குப் புறப்பட, வேட்டைக்கோலம் புனைந்தார். தலையிற் குஞ்சியை நிமிரக்கட்டினார். தளிர்களாற் கட்டப் பெற்ற கொண்டைமாலையும், அதில் மயிலிறகும் அதன் மேல் முல்லை மாலையும், குறிஞ்சி வெட்சிப்பூக்களும் சூடினார். நெற்றியில் குன்றிமணிகளை இடையிடை வைத்துப் புரித்த மயிர்க்கயிறு சாத்தினர். காதுகளில் வெண் சங்கத் தோடுகள் தரித்தார். கழுத்தில் பலகறை மாலையும் சன்ன வீரமும் பூண்டார். யானைத் தந்தத்தாற் செய்யப் பெற்ற மாலையை மார்பில் அணிந்தார். தோள்களில் வாகு வலயங்களும், முன் கைகளிற் கங்கணங்களும் விரல்களுக்குக் கைக் கோதையும் பூட்டினர். இடுப்பில் புலித் தோலாடை சாத்தினர். உடைதோல் வீக்கினர். அதன் மேல் சுரிகை பூண்டார். காலில் வீரக்கழலும், திருப்பாதங்களில் நீடு செருப்பும் அணிந்தார். பாரப்பொரு வில்லினைப் பணிந்து தாள்மடுத்து ஏந்திச் சிறு நாணொலி கொண்டு தக்க அம்புகளையும் தெரிந்துகொண்டார். பல வேடர்கள் வில்லேந்திய கையினராய், அவர் பக்கம் வந்து சேர்ந்தனர்.

அப்போது காடுபலி யூட்டிய தேவராட்டி வந்தாள். திண்ணனார் பக்கத்துச்சென்று அவரது திரு நெறறியில் அட்சதை சாத்தி,

"உன்றந்தை தந்தைக்கு மிந்நன்மைக ளுள்ளவல்ல
நன்றும்பெரி துன்விற னம்மௗ வன்றிதென்றுள்"

தம்மை யாசீர்வதித்த, தேவராட்டிக்குச் செய்யவேண்டிய சிறப்பினைச்செய்து அனுப்பிய பின்னர், திண்ணனார் வேட்டை மேற்கொண்டெழுந்து போந்தார்.

திண்ணனாருடன் பல வேடர்கள் தொடர்ந்தனர். பல வேட்டைநாய்கள் பின் தொடர்ந்தன. புலி முதலிய பெருமிருகங்கள் தப்பியோடாமல் அகப்படும்பொருட்டு நீண்ட வலைகளையும் வார்களையும் குன்றவர்கள் சுமந்து முற்பட்டுச் சென்றனர். இன்னும் எண்ணிலாத பார்வை மிருகங்களைக்கொண்டு சென்றார்கள். இறைவரைத் தமது நீண்டபார்வை ஒன்றுகொண்டு காணும் அன்பராகிய திண்ணனார்முன் வேடர்கள் இங்ஙனம் கணக்கில்லாத பார்வை மிருகங்களைக் கொண்டுசென்றார்கள் என்று பின்னிகழ்ச்சியை யுட்கொண்டு சேககிழார்,

"நண்ணி மாம றைக்கு லங்கணுட வென்று நீடுமத்
தண்ணி லாவடம்பு கொன்றை தங்குவேணி யார்நமைக்
கண்ணி னீடு பார்வை யொன்று கொண்டு காணு மன்பர்முன்
எண்ணில் பார்வை கொண்டு வேடரெம் மருங்கு மேகினர்"

என்று மிக அழகாகக் கூறிப்போந்தார்.

கொம்புகள் ஒலிக்கவும், சிறுபறைகள் முழங்கவும், பம்பை கொட்டவும், வேட்டுவக்கூட்டம் சென்றது. இவ்வாறு ஆரவாரத்தோடு சென்ற வேடர்கள் வேட்டைக் காடு வளைத்தனர். காட்டில் எங்கு மிருகங்கள் இருக்கின்

றன வென்பதையறிந்து சொல்லும் ஒற்றர்கள், பன்றிகளும் மான் கூட்டங்களும் நெருங்கியுள்ள இடங்களை அவற்றின் அடிச்சுவடுகொண்டு அறிந்து சொன்னார்கள். வலிய வேடர்கள் நாற்புறமுஞ் சென்று, காட்டின் மரக்கிளைகளை வார்போக்க ஒழுங்குகாண வேண்டி, அவற்றை வெட்டிப்போக்கி, யோசனை அளவுள்ள காட்டின் பரப்பு முற்றும் வலைகட்டி, காட்டைக்காவல் செய்தபின்னர், வேடர்கள் திண்ணனாரிடம் வந்து சேர்ந்தனர். திண்ணனாரும் ஏனைய வேடர்களும் அக்காட்டினுள் வேட்டைநாய்களைப் பல புறமும் அட்டமாக விட்டுச்சென்றனர். வேடர்கள் துடி, பம்பை முதலிய வாத்திய ஓசைகளினால் காட்டினுள் பதுங்கியிருந்த மிருகங்களை எழுப்பினர். பன்றிகள், மானினங்கள், யானை, காட்டுப்பசு முதலியன வேடர்தம்மேல் வெகுண்டெழுந்து பாய்ந்தன. அவற்றினை வேடர்கள் சீறி அம்புகளினாற் கொன்றனர். பல காலறுபட்டன. தலைகள் துமியப்பெற்றன. சில மிருகங்களின் குடல் சரிந்தது. சில மான்கள் அம்பு தைக்கப்பெற்றுத் துள்ளி விழுந்தன. வேட்டையின் விரைவையும், அதன் நிகழ்ச்சியினையும் நம்மனக்கண் கண்டுமகிழ, அதற்கேற்ற சந்தத்தில் சேக்கிழார் எழுதிக்காட்டும் தன்மை அறிந்தின்புறற்பாலது. ஓசையே பொருளைக் கொடுக்குமென மேனாட்டார் கூறுவர். அத்தகைய அழகு டென்னிசன் என்னும் கவியாண்டிருப்பதை ஆங்கிலம் படித்த அறிஞர் கூறுவர். ஆங்கிலத்தில் மிக அருகிவருமிவ்வழகு நமது தமிழிலக்கியத்தில் பரக்கக் காணலாம். ஒன்று மாத்திரம் கீழே தரப்படுகின்றது.

'தாளறுவன இடைதுணிவன தலைதுமிவன கலைமா;
வாளிகளொடு குடல்சொரிதர மரிவனசில மரைமா;

நீளுடல்விடு சரமுருவிட நிமிர்வன மிடைகடமா;
மீளிகொள்கணை படுமுடலெழ விழுவனபல வுழையே"

இச் செய்யுளைச் சந்தத்தோடு படித்து மகிழ்ந்தாற்ருன் இதனினிமை விளங்கும்.

பல சிங்கங்களும், யானைகளும், புலிகளும் பட்டன. பலபுறமும் வெருவியோடிய மிருகங்களை, நாய்கள் பற்றிக் கவர்ந்தன. இதைக் கூறவந்த கவிஞர் பெருமான் சேக்கிழார் கருத்தில் ஓர் உண்மை உலகிற்குச் சொல்லவேண்டு மென்று பட்டதுபோலும். அதையப்படியே யெடுத்துச் சொல்லுகின்ருர்.

" பலதுறைகளின் வெருவரலொடு பயில்வலைபற நுழைமா
வுலமொடுபடர் வனதகைவுற வுறுசினமொடு கவர்நாய்
நிலவியவிரு வினைவலையிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
புலனுறுமன னிடைதடை செய்த பொறிகளினள வுளவே "

பிறப்பிறப்புக்களிற் கட்டுப்பட்டுச் சுழல்கின்ற மக்கள், நல்வினை தீவினை யென்னும் வலையினிற் பட்டு, தங்நிலை கலங்கிச் சுழலும்போது நன்னெறியில் தம் மனத்தைச் செலுத்துவார்களே யாயின், அவர் தம் ஐம்புலன்களாகிய நாய்கள் அம்மனத்தைப்பற்றி யீர்த்துத் தம்வசப்படுத்து கின்றன.

ஐம்புலன்களை நாயினுக் குவமித்தற்குரிய காரண மென்ன வென்ருல், நாய் தசையற்ற எலும்பைக் கடித்துத் தன் வாயினின்றும் வழியும் இரத்தத்தை எலும்பி னிரத்த மாக எண்ணி மகிழும். உண்ணற்குரிய பல பொருள்களி ருக்க அவற்றை யுண்ணுமல் இழிந்த தொன்றை யுண் ணும். தான் தின்று கக்கியதை தானே மீண்டும் உண் ணும். இத்தகைய தன்மைகள் மாந்தர்களிடம் காணப்

படுகின்றன என்பதை யுட்கொண்டு, அவர் தம் புலன்கள் மேலேற்றிச் சொல்வது கவி மரபு. இங்கு மக்கள் கேடு தரும் அனுபவங்களை யின்பமென மயங்குவதையும், அனுபவத்திற்குரிய நல்ல சிவானுபவமிருக்க அதை விடுத்து, துன்பத்திற்குரிய உலகானுபவங்களை மீண்டும் மீண்டும் அனுபவிப்பது முதலியன கருதி பெரியோர்கள் அறிவுரை கூறுவதியல்பு.

இங்ஙனம் வேட்டையாடுகின்ற காலத்தில் வேடர்கள் வேட்டையின் நீதி முறை கையாண்டனர்.

> "துடியடியன மடிசெவியன துறுகயமுனி தொடரார்
> வெடிபடவிரி சிறுகுருளைகண் மிசைபடுகொலை விரவார்,
> அடிதளர்வுறு கருவுடையன அணைவுறுபிணை யலையார்
> கொடியனவெதிர் முடுகியுமுறு கொலைபுரிசிலை மறவோர்"

இப்பாட்டில், யானைக் கன்றுகளையும், விலங்குக் குட்டிகளையும், கருவுடைய பெண் விலங்குகளையும் வேடர்கள் துன்புறுத்தாது விட்டனர். பழந் தமிழர் போர்புரிவதற்கு முன்னால், பசுக்கள், அறவோர், சிறுவர், பிணியாளர், பெண்கள், பொன்போற் புதல்வர்ப் பெறுதோர், படையெடாதோர் முதலியவர்களை, பறை சாற்றி அவர் தம் காப்பிடம் போமாறு செய்தனர். இஃது அறப்போராகும்; மறப்போரன்று. இத்தகைய உயர்ந்த நீதி முறையினை மறக்குல வேடர்கள் கொடிய விலங்குகளை வேட்டையாடுங்கால் கையாண்டது, அவர் தம் மறப்பண்பினிடையே அறப்பண்பும் நின்று மிளிர்ந்தது என்பதைக் காட்டுகின்றது. கருத்தரித்த பெண் விலங்குகளையும், குட்டிகளையும் வேட்டையில் அலைக்காது விடும் கருத்துக் கருணையை அடிப்படையாகக் கொண்டதன்றோ? எவ்

வுயிர்க்கும் உயிராய் நின்றிலங்கும் இறைவனதருட்குண மாகும். மறமே புரிந்தொழுகும் ஆறலைக்கள்வரை, அறவடிவாக மாற்றினும் மாற்றுவான் மாபெருங் கருணையான். அடியாராகச் செய்வதும், ஆழ்வாராகச் செய்வதும் அவனதருளன்றோ? அன்றொரு நாள் காட்டில் ஆறலைத்து வந்த திருமங்கை மன்னனைத் திருமங்கையாழ்வாராகச் செய்யவில்லையா? விலங்கு வேட்டையாடப் புகுந்த திண்ணனரைச் சிறந்த அடியாராகச் செய்யவில்லையா? அவனிச்சை வழி இவ்வுலகம் அடங்கி யொடுங்கி நடக்கும்.

நீதியோடு வேட்டை நடத்தினர் வேடர்கள்.

★

## ஐந்தாமதிகாரம்

# வேட்டையிற் பன்றி தப்பி ஓடுதலும் திருக்காளத்திச் சாரல் சேர்தலும்

இவ்வாறு வேட்டையாடும்போது கருமேகம் போன்ற தொரு காட்டுப்பன்றி மேகத்தைப்போலக் கருச்சித்து வலைகளையறுத்து வேடர்களையும் நாய்களையும் தப்பி மிக்க வேகத்தில் ஓடிற்று. அப்பன்றி ஓடியதை யொருவரும் காணவில்லை. திண்ணனர் மாத்திரம் பார்த்து அதன் பின் தொடர்ந்தார். திண்ணனரைப் பிரியாத மெய் காவலர்களாகிய நாணன், காடன் என்ற இருவரும் அவரைத் தொடர்ந்து ஓடினர்.

அப்பன்றி மிகவும் முரட்டுப் பன்றியாகையாற்றன் வலைகளை யறுத்தோடிற்று. ஒருவராலும் பின்தொடர முடியவில்லை. நாய்களும் அதனைப் பிடிக்கமுடியாது போயிற்று திண்ணனர் மாத்திரந் தொடர்ந்தோடினர். காரணம் என்னவென்றால், நமது திண்ணனர் முற் பிறவியில் அர்ச்சுனனகவிருந்தார். அப்போது இமையர் முக்கணெம்பெருமானை நோக்கி, பாசுபதாஸ்திரம் பெறத் தவங்கிடந்தஞான்று, துரியோதனன் சூழ்ச்சியால் வந்த பன்றியை அர்ச்சுனன் அடித்துக்கொன்றான். வேடர் வடிவத்தில் வந்த சிவபெருமான் அப்பன்றியை தாமடித்த தாகக் கூறினர். அர்ச்சுனனுக்கும் சிவபெருமானுக்கும் பன்றியையடித்தது பற்றிக் கலகம் நிகழ்ந்தது.

அக்காலத்தில் அருச்சுனன் தனது வில்லால் சிவபெருமான் திருமுடி மீது தாக்கினன். உடனே கருணையங்கடலாகிய சிவபெருமான் உமாதேவி சமேதராய், விடையின் மேல் காட்சி கொடுத்தார்.

அருச்சுனன் தான் செய்த குற்றத்தினை மன்னிக்கும்படி வேண்டினன். பின்னர் தனக்கு மோட்சமளித்தருளப் பிரார்த்தித்தான். உலக பிதாவாகிய உமாமகேசுவரன் அருச்சுனனை நோக்கி அருள்சுரந்து "விஜயனே! நீ யஞ்சற்க. உன் மொழியனைத்தும் எமது குமரனது மொழியாகக் கொண்டோம். இப்பொழுது உனக்குப் பாசுபதமளிக்கின்றோம். முத்தி, பொன்முகலி யாற்றங்கரையில் காளத்தி மலையில் மறு பிறப்பில் வேடனகப் பிறந்து எம்மை அருச்சிக்கும்போது தருவோம்" என்று பாசுபதாஸ்திரம் மாத்திரம் கொடுத்து மறைந்தார்.

அருச்சுனனாக விருந்தபோது இறைவனைக் காணும் பேறு ஒரு பன்றியின் மூலம் திண்ணனார் பெற்றார். இப்பிறவியிலும் ஒரு பன்றியின் மூலந்தான் காளத்தி நாதரைக் கண்டார். முற்பிறவியில் பல கலைகள் பயின்றவர். இப்பிறவியில் வில்வித்தை தவிர வேறொரு வித்தையும் பயின்றறியாதார். அங்ஙனமிருந்தும் நமது ஆளுடைய நம்பிகள், "கலை மலிந்த சீர்க் கண்ணப்பர்க் கடியேன்" என்று கூறியிருப்பதால், முற் பிறவியில் சிவபெருமானை வழிபட்டவர்; பல கலைகள் பயின்றவர்; சிறப்பாகச் சிவகலையுடையவர். ஆகவேதான் பண்டை வாசனையாலும், புண்ணியத்தாலும், திண்ணனார் மாத்திரம் நெடுந்தூரம் பன்றிபின் சென்றார்.

அப்பன்றி காட்டில் நெடுந்தூரம் ஓடி மேற்செல்ல மாட்டாமற் களைத்து ஒரு மரச்சூழலில் நின்றது. அப்பன்றியை அம்பினாற் கொல்லத் திண்ணனார் எண்ணினாரில்லை. ஏனெனின் அப்பன்றி தம்மேற் பாயுமென்று நினைத்தார். ஆகவே தம்முடைய வாளை யுருவினார். அப்பன்றியைக் குத்தி இரு துண்டுபடுத்

தினர். அது கண்டு அவ்விரு வேடர்களும் அவரைப் புகழ்ந்து, அவரடி வீழ்ந்து, "நெடுந்தூரம் ஓடி வந்ததனால் எமக்குப் பசி வந்து வாட்டுகின்றது. கிடைத்த இப் பன்றியைத் தீயில் வதக்கித் தின்று தண்ணீர் குடித்துப் பின் வேட்டைக் காட்டுக்குப் போவோம்" என்றார்கள். திண்ணனாரும் களைத்துப் போயிருந்தமையால் நாவறட்சி யுடையவராய் அவர் தம்மைப் பார்த்து, "எனக்கு நீர் வேட்கை மிக்குளது. எங்கு நீர் கிடைக்கும். தவிர, பன்றியைத் தீயில் வதக்கி யருந்தும்போது குடிப்பதற்கு நன்னீர் வேண்டுமே. எங்கு கிடைக்கும்?" என்று கேட்டார்.

அவர்கள் திண்ணனாரைப் பார்த்து, "எங்குலக் கொழுந்தே! இதோ அண்மையிற் காணும் தேக்குமரச் சோலையைத் தாண்டினால் ஒரு மலை தோன்றும். அதனருகே பொன்முகலியாறு என்னும் நதி யொன்று ஓடுகின்றது" என்று கூறினார்கள். திண்ணனார் மலையைப் பற்றியும், நதியைப் பற்றியும் கேட்டவுடன் அவ்விடம் போக விரும்பினார். "நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழி" என்ற அருள் வாக்குப்படி ஆன்மாக்களைப் பக்குவ மறிந்து ஆண்டவன் தன்பால் இழுத்துக் கொள்வான்.

திண்ணனாரின் உள்ளத்தே நின்று இறைவன் மெதுவாக நீர் வேட்கையினிமித்தம் இழுத்தான். திண்ணனார் நாணனையும், காடனையும் நோக்கி "இப் பன்றியைத் தூக்கிக் கொள்ளுமின். நாம் அந்நதி யருகே போவோம். அந் நதிக்கரையில் இதனையறுத்துப் பக்குவப் படுத்துவோம்" என்றார். அவர் கட்டளையின்படி அவ்விருவரும் பன்றியைத் தாங்க, திண்ணனார் பின் செல்ல, திருக்காளத்தி மலைச்சாரற் சோலையைக் கண்ணுற்றார்கள்.

★

# ஆறுமதிகாரம்

## திண்ணனார் திருக்காளத்தியாரின் திருவருட்பேறு பெற்றமை.

இங்ஙனம் மூவரும் திருக்காளத்தி மலைச்சாரலைக் கண்ணுற்றபோது, திண்ணனார் "நாணனே! இங்கே தோன்றும் குன்றின்மேற் செல்ல விரும்புகின்றேன். போவோம்" என்றார். இதைக்கேட்ட நாணன் அவர தாணைக்குட்பட்டு, "அத்தனே! அங்ஙனே ஆகட்டும். அவ்வாறு நீ காணும் பொருட்டுச் செல்வாயானால், அது நல்ல காட்சியாக விளங்கும். அவ்வானளாவிய திருக்காளத்தி மலையின் மீது கோயில் கொண்டெழுந்தருளியுள்ள தேவாதிதேவர், குடுமித்தேவர் இருப்பர். அவரைக் கும்பிடலாம்" என்றான்.

இதனைக் கேட்ட திண்ணனார் மலைமீது செல்ல விரும்பியவராய், மலையை நோக்கி நடந்துசென்றார். "செல்லுந்தோறும் என் மேலுள்ள பாரம் குறைவது போலத் தோன்றுகிறது. ஆசை மென்மேலும் பொங்குகின்றது. காணவேண்டு மென்னுமாசையே யன்றி இன்னதென் றறியப்படாத மற்றோர் விருப்பமும் பிடர்பிடித்துத் தள்ளுகின்றது. அங்கே தேவரது இருப்பிடம் எங்கே?" என்றார்.

இங்ஙனம் சொல்லிக்கொண்டே விரைந்துசெல்ல, நாணனும் காடனும் கூடவேசென்று, பொன்முகலி நதியினைச் சேர்ந்தார். அவ்வாற்றின் கரையோரமாக ஒரு மர

நிழலில் பன்றியுடலை யிடுவித்து, காடனைப் பார்த்துத் திண்ணனார் மரத்தினால் தீக்கடைகோல் செய்து இங்கு நீ நெருப்புண்டாக்குவாயாக; நாங்கள் இந்த மலையிலேறி கண்டுவந்து சேருவோம்" என்று சொல்லி நாணனும் தாமும் சென்றார்கள்.

திருக்காளத்தி மலையை நோக்கிய வண்ணம் நடந்து சென்று பொன்முகலி நதியிலிறங்கினர். அந்நதி மிகவும் தெளிந்த நதி. அந்நீரினைத் தொட்டமாத்திரத்தில் அது தொட்டவர்தம் மயல் தீர்த்து மனந்தெளிவிக்குந் தன்மை வாய்ந்தது. ஆகவே, திண்ணனார் சிந்தையும் தெளிவுற்றது. சிந்தை தெளிந்ததும் மகிழ்ச்சி மிக்கவராய், அம் மலையைக் கண்டுகொண்டே, குளிர்ச்சி பொருந்திய அந்நதியின் ஊடேபோய் அவ்வுயர்ந்த மலைச்சாரலிற் சேர்ந்தனர். அப்பொழுது கதிரவன் வான வீதியில் உச்சியை யடைந்தான். அவ்வேளையில், தென்கைலையெனத் திகழுந் திருக்காளத்தி மலையில், பிரமன் முதலிய தேவர்கள் வந்து சிவபெருமானை வழிபடுவார்கள். தேவ துந்துபி யென்னும் தேவ வாத்தியம் முழங்கப்பெற்றது.

பூர்வ புண்ணிய விசேடத்தால் திண்ணனார் அவ் வோசையைக் கேட்டார். உடனே நாணனை நோக்கி, "இவ் வோசை யென்கொல்?" என்றார். இவர் கேட்டது போன்ற சிவ புண்ணியமில்லாத நாணன் "பெருந்தேனைச் சூழ்ந்து கொண்டு, தேன் பொருந்திய மலர்களிலிருந்து வரும் தேனீக்கள் மொய்த்துப் பின்பு பக்கங்களிலே மீள எழுகின்றதால் உண்டாகும் ஓசை" யென்றான்.

முன்பு செய்த தவத்தின் பெருக்கம் முடிவில்லாத அன்பினைத் திண்ணனாருள்ளத்தி னின்றும் எடுத்துக் காட்ட, அதனால் அளவில்லாத ஆசைபொங்க, எலும்பும்

நெக்குருகுமாறு உள்ளெழுந்த பெருவேட்கையோடும் திருக்காளத்தி மலையை நோக்கிச்சென்றார். நாணனும் அன்பும் முன்பு வழிகாட்ட, ஏறிச்சென்று பேணுதத்துவங்க ளென்னும் படிகளேறி, ஆணையாம் சிவத்தை யடைபவர் போல் திண்ணனார் நீண்ட மலையை ஏறி நேர்படச் சென்றார். அவ்வாறு சென்றவர் காளத்தி நாதரைக்கண்டதும் அவரது அருட்டிரு நோக்கம் இவர்மேற் பதிந்தது. முற்பிறவிகளிற் சார்ந்துவரும் மலமாயை கன்மங்கள் இவரை விட்டகன்றன. இறைவன்முன் ஒப்பிலாத அன்புருவமாயினார். அந்நிலையில்,

"மாகமார் திருக்கா ளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள
ஏகநா யகரைக் கண்டார்; எழுந்தபே ருவகை யன்பின்
வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விரைவி னோடு
மோகமா யோடிச் சென்றார்; தழுவினார்; மோந்து நின்றார்."

இவ்வாறு காந்தத்தாலிழுக்கப் பெறும் ஊசிபோல, திண்ணனார் திருக்காளத்தியார் பால் இழுக்கப் பெற்றவராய், தலையன்பிற் சிறந்த தாயானவள், நெடிதுநாள் பிரிந்த தன் மகவினைக் கண்டபோது எங்ஙனம் கட்டித் தழுவி உச்சிமோந்து நிற்பாளோ அப்படியே அனைத்துயிர்க்குந் தாயாய் விளங்குந் தயாபரனைக் கட்டித் தழுவினார்.

நெடுநேரம் பெருமூச்சுவிட்டார். மயிர்க்கால்தோறும் புளகம் கொண்டார். கண்களில் நீர் அருவிபோலப் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. "அடியனேற் கிவர்தாமிங்கே யகப்பட்டாரச்சோ!" என்று ஒப்பிலாத அன்பு ஒருவடிவங்கொண்டு நின்றதுபோல் நின்றார். அன்புருவமான பின்னர் அன்புரைகளைத் தவிர வேறொன்றும் அவர் மொழிந்தாரில்லை. இறைவன் உலகிலுள்ள கொடிய

விலங்குகளையும் படைத்தவன் என்பதையும், அவ்விலங்குகள் அவன் திருமேனிக்கு ஊறுவிளைக்கா என்பதையும் மறந்தவராய்த் திண்ணனூர் இறைவரைப் பார்த்து "ஐயரே, கொடிய விலங்குகள் சஞ்சரிக்கும் இக்காட்டில் நீர் தனியாக இருக்கலாமா? உமக்குத் துணையில்லையே!" என்று மிக நைந்தார். இந்த நிலையில், அவர் கையினின்றும் வில் கீழே வீழ்ந்தது. அதையும் அறிந்தாரில்லை. ஆண்டவன் மேல் பூவும், பச்சிலையும் போடப்பட்டு, நீரும் வார்த்திருப்பதையும் திண்ணனூர் பார்த்தார். "இங்ஙனம் செய்தவர் யாரோ?" என்றார். அருகில் நின்ற நாணன், "ஐய, இதனை யான் அறிவேன். முன்னொரு காலத்தில் உன் தந்தையும் நானும் இங்கு வந்திருந்தபோது, ஒரு வேதியர் குளிர்ந்த நீரால் இவரையாட்டி, பூவையும் இலையையும் போட்டு, உணவையும் ஊட்டி, சில மொழிகளுஞ் சொன்னார். ஆகவே அவர்தான் இன்றுஞ் செய்திருத்தல் வேண்டும்" என்றான்.

திண்ணனூர் நாணன் கூறியதைக் கேட்டார். திருக்காளத்தி நாதருக்குப் பூவும், நீரும், பச்சிலையும் உவப்பையளிக்கும் பொருள்களென்பதை யுணர்ந்தார். அதைச் செய்ய விரும்பினார். இறைவருணவினுக்கு நல்ல இறைச்சி கொணர வேண்டுமென்று தீர்மானித்தார். நல்லிறைச்சிக்கு வேட்டையாட விழைந்தார். ஆனால் ஆண்டவனை விட்டுப்பிரிய மனமில்லை. அவர் பசித்திருப்பதைப் பார்க்கச் சகிக்கவுமில்லை. அவர் பசி தீர்ப்பதே முக்கிய கடமையெனக் கொண்டு புறப்பட்டார்.

"போதுவர்; மீண்டு செல்வர்; புல்லுவர்; மீளப்போவர்;
காதலி னோக்கி நிற்பர்; கன்றகல் புனிற்றுப் போர்வர்;

**நாதனே யமுது செய்ய நல்லமெல் லிறைச்சி நானே**
**கோதறத் தெரிந்து வேறு கொண்டிங்கு வருவே னென்பார்"**

சேக்கிழார் இச்செய்யுளால் அவர் மனோ நிலையை நன்கு சித்தரித்துக் காட்டுகின்றார். சிறிது பிரிந்து போனார் இறைவனைப் பிரியமாட்டாது சிறிது தூரஞ் சென்று மீண்டு வந்து பார்த்தார். சிறிது பிரிந்தமையால் ஆசை யதிகரிக்கவே, அதன் விளைவால் ஆண்டவனைக் கட்டி யணைத்துக்கொண்டார். அங்கிலையில் கன்றினைப் பிரியும் பசுப்போன்றார். அண்மையில் கன்றீன்ற பசுவுக்குத்தான் தன்னிளங் கன்றிடம் அதிக அன்பிருக்கும். அக்கன்றை வேறொருவர் தொடக்கூட விடாது. தொட்டால் முட்டும். அவ்வளவு அன்புண்டு பசுவுக்கு. கன்றினையுடைய பசுவைக் "கற்றா" என்பர் பெரியோர்.

இத்தகைய பசுவின் மனம் எங்ஙனம் கன்று விஷயத்தில் அன்பினால் கரைகின்றதோ, அத்தகைய அன்பு ஆண்டவன் விஷயத்தில் தமக்கு வேண்டுமென்று விரும்பிய நமது வாதவூரடிகள்,

**"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்**
**கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்**
**குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தா! உன் குரைகழற்கே**
**கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"**

என்று திருக்குற்றால நாதரிடம் வரம் வேண்டுங்கால், இறைவன் திருவடிகட்கு கன்றையீன்ற ஆவாகிய 'கற்றா' வின் மனம்போல் அன்பினால் கசிந்துருகத் தக்கநிலை தமக்கு வேண்டுமென்கிறார்.

வாதவூரையன் வாஞ்சித்த அன்பினைத் திண்ணனார் பெற்றமையால், ஆண்டவன் விஷயத்தில் புனிற்றுப்

போன்றார். ஒருவாறு துணிந்து போர்கும்போது ஒரு குழந்தையிடம் ஒரு தாய், "அப்பா, நீ தனியாக இருக்கின் றாய்; சீக்கிரம் வந்துவிடுவேன்" என்று சொல்லிப் போவது போல், திண்ணனாரும் "ஐய, நீர் தனித்திருக்கப் பிரிந்து போகமாட்டேன். ஆனால் நீர் பசித்திருக்க இங்கு நிற்கவுமாட்டேன்" என்று கூறிப் பிரியும்போது பிரிவுத் துயரால் கண்ணீர் வடித்தார்.

"அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"

என்ற பொதுமறைப்படி, அவர் உள்ளத்தில் ஆழ்ந்த அன்பின் பெருக்கிற்கு அறிகுறியாகத் துன்பக் கண்ணீர் உகுத்தார். வில்லைக் கையிலேந்தியவராய் ஆண்டவனை மீண்டு மொருமுறை பார்த்துக் கும்பிட்டு விடைபெற்று விரைந்து சென்றார்.

★

## ஏழாமதிகாரம்

# திண்ணனாரின் முதல்நாட் பூசை

இங்ஙனம் அரிதின் நீங்கிய திண்ணனார் உலகிலுள்ள எல்லாத் துறைகளின் வேட்கை முற்றும் நீங்கப் பெற்றார்.

"பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனு மவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னும் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்த முண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்"

என்ற மாணிக்க வாசக சுவாமிகளின் வாக்குப்படி, புல் வரம்பாய பல துறைகளில் கட்டவிழ்ந்து மட்டற்ற ஆசையோடு செல்லும் ஐம்புல அவாவினையும் அழித்து ஆண்டவனிடம் மாத்திரம் ஆசையைச் செலுத்தினார். அப்படிப்பட்ட சாயா அன்பினால் உந்தப் பெற்ற திண்ணனார், திருமுகலியாற்றினைக் கடந்து அக்கரையிற் சோலையைச் சேர்ந்தார்.

நாணன், திண்ணனார் — இவ்விருவர்தம் வரவினையெதிர்நோக்கி யிருந்த காடன் எதிரில் வந்து தொழுது, "தீக்கடைந்து வைத்தேன்; பன்றியின் உறுப்புக்களையெல்லாம் உங்கள் குறிப்படி சரிபார்த்துக் கொள்ளுங்கள்; ஏன் இவ்வளவு நேரம் காலந்தாழ்த்து விட்டீர்கள்?" என்றான்.

இதனைக் கேட்ட திண்ணனார் ஒன்றும் பதில் கூறினாரில்லை. அவர் செவியில் இவ்வார்த்தைகள் நுழையவில்லை. ஏனெனில் அவர் சிந்தை யெல்லாம் திருக்காளத்தி நாதர் மேலிருந்தது. நாணன் காடனை நோக்கி "காடனே, நமது திண்ணனார் குடுமித்தேவரைப் பார்த்ததிலிருந்து அவரைப் பிடித்துக்கொண்டு, வங்கினைப் பற்றி நீங்கா வல்லுடும்பு போல நின்றான். நம் குலத்தலைமை விட்டான். தேவர்க்கே யாட்பட்டான். இங்கு வந்தது கூட அத்தேவர் தின்பதற்கு இறைச்சி கொண்டுபோக வந்துளான்" என்றான்.

நாணன் கூறியதைக் கேட்ட காடன் "திண்ணா! என்ன காரியஞ் செய்தாய்? என்ன மயக்கங் கொண்டாய்? நீ நமது குலமுதல்வனல்லவா?" என்றான். திண்ணனார் அவன் முகத்தைக்கூடப் பாராதவராய்ப் பன்றியைத் தீயில் வதக்கினார். நல்ல தசைப் பகுதிகளை வேறு வேறாக அம்பினால் அரிந்து கோலிற் கோத்துக் காய்ச்சினார். தேக்கிலைகளைத் தைத்து ஒரு பெரிய தொன்னையைப்போலச் செய்து கொண்டார். காய்ச்சிய மாமிசத்தை வாயினாற் சுவைபார்த்து நல்ல சுவையுள்ள மாமிசத்தை மாத்திரம் அந்தத் தொன்னை போன்றதொரு கல்லையில் வைத்துக் கொண்டார். சுவையற்ற மாமிசமனைத்தையும் வெளியிலே உமிழ்ந்தார். பக்கத்தில் நின்ற நாணனும் காடனும் "இவன் மயக்கம் முதிர்ந்தான்; நல்ல இறைச்சியைக் காய்ச்சி அதுக்கி உமிழ்கிறான். பசி மிகவுடையவனே யாயினும் பேசாதிருக்கின்றான். இவன் தேவுமால் கொண்டான். இதனைத் தீர்க்கும் வழியறியோம். ஆகவே யுடனே சென்று நாகனையும் தேவராட்டியையும் கூட்டிவந்து இதனைத் தீர்க்கவேண்டும். வேட்டைக் காட்டிற்குச் சென்று ஏனை

ஏவலாட்களையும் கூட்டிச் செல்வோம்'' என்று தங்களுக் குள் எண்ணி முடித்துப் போய்விட்டார்கள். அவர்கள் போனதுகூடத் திண்ணனுருக்குத் தெரியாது. அவர் கருமமே கண்ணுயினுர். விரைவில் இறைவனுக்காகும் ஊனமுதத்தைக் கல்லையில் அமைத்துக் கொண்டார். திருமஞ்சனமாட்டப் பொன்முகலியின் நல்ல நீரைத் தமது தூய வாயினில் முகந்து கொண்டார். தூய மலர்களையும், தூய பச்சிலைகளையும் பறித்துத் தமது குடுமிமேற் செறி யும் வண்ணம் வைத்துக்கொண்டார். ஒரு கையில் வில்லைத் தாங்கினுர், மற்ெறுரு கையில் ஊனமுதக் கல்லையும் ஏந்தினர். குடுமித்தேவர் மிகப் பசித்திருப்பார் என்று இரங்கி மிக விரைவாக நடந்து மலையையடைந்தார். பசியால் ஆண்டவன் இளைத்திருப்பார் என்று பரபரப்புடன் அவர் முடிமேலிருந்த மலர்கள் நிர்மாலியமானதால் அவற்றைத் தமது செருப்புக்காலால் மாற்றினுர். பின்னர் அபிஷேகஞ் செய்ய விரும்பியவராய், வாயிற் கொண்ட திருமஞ்சன நீரை விளைத்த அன்பை உமிழ்வார் போல அவரது திருமுடியில் விட்டார். தம் குஞ்சியிலே கொணர்ந்த திருப்பள்ளித் தாமத்தை அவரது திருமுடியிலே வணங்கிச் சாத்தினர். ஊனமுதக் கல்லையைத் திருமுன்னர் வைத்துக்,

“ கொழுவியதசைகளெல்லாங் கோலினிற் றெரிந்து கோத்தங்
கழலுறு பதத்திற் காய்ச்சிப் பல்லினுல் அதுக்கி நாவிற்
பழகிய இனிமை பார்த்துப் படைத்தஇவ் விறைச்சி, சால
அழகிது நாயனீரே! யமுதுசெய் தருளும்'' என்றுர்.

இங்ஙனம் திண்ணனுர் காளத்தியப்பருக்குப பூசை புரிந்தார். இதனை நமது வாதவூரடிகள் பாராட்டுகின்ற

முறையில், இக் கோலத்தைச் சொல்லோவியமாக எழுதிக் காட்டுவதைப் பார்ப்போம்.

"பொருட் பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல் விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விரும்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்கு
அருள் பெற்று நின்றவா தோணுக்கம் ஆடாமோ."

என்ற திருவாசகம் நாம் படித்தின்புறுவோமாக.

இவ்வாறு பூசை செய்த திண்ணனார் மேலும் இறைச்சியை அவருக்கு ஊட்டவேண்டும் என்று ஆசை கொண்டார். அதுகண்டவன்போலச் சூரியன் மலையிற் ருழ்ந்தான். அந்திமாலையும் வந்தணைந்தது. இரவில் கொடிய விலங்குகள் வந்து இறைவருக்கு ஊறுவிளைக்கும் என்று அஞ்சியவராய் அவர் பக்கத்தே உண்மையன்பு தாங்கிக் கையிற் சிலையுந் தாங்கிநின்ருர். இரவு முழுதும் உறங்காது காவல் புரிந்தார். இதேபோல இலக்குவன் இராமனும் சீதையும் காட்டில் தங்கியிருந்தபோது காவல் புரிந்ததாகக் குகப்பெருமான் வாக்கில் வைத்துக் கம்பர் அவனதடிமைச் சிறப்பை யெடுத்துக் காட்டுகின்ருர்.

"அல்லையாண் டமைந்த மேனி யழகனு மவளுந் துஞ்ச
வில்லை யூன்றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்ததோளாய் கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்ரு னிமைப்பிலன் நயன மென்ருன்."

இதனைப் படித்து இன்புறுவோமாக. இன்னும் திண்ணனார் இறைவன் பக்கலில் நின்ற நிலையைச் சேக்கிழார் எழுதிக் காட்டியிருப்பதைப் பார்ப்போம்.

" சார்வருந் தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமுங்
கார்வரை யடவி சேர்ந்துங் காணுநற் கரியார் தம்மை

ஆர்வமுன் பெருக ஆரா வன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்ருர் நீளிரு ணீங்க நின்ருர் "

இச் செய்யுளின் பொருள் என்னவென்ருல், சார்தற் கரிய விரதம், யோகம் முதலிய தவங்கள் புரிந்தும், மலை களையும் காடுகளையும் அடைந்தும், முனிவர்களும் தேவர்களும் காண்பதற்கரியராகிய சிவபெருமானை ஆசை முன் பெருக ஆராத வன்பினுலே கண்டுகொண்டபடியே, நேரே நோக்கி நின்ருர். நீண்ட இருள் நீங்குமாறு நின்ருர் திண்ணனுர் என்பதாகும்.

அதாவது இறைவனை யடைதல் எளிதன்று. எத் தனையோ பேர் பல அரிய தவங்கள்புரிந்துங் காணப் பெருராய் வருந்தினர். சிலர் தவம் புரியுங்கால் அவர்தம் பக்கலிலும், அவர்மேலும் புற்று வளர்ந்துவிடும். மரம் வளரும். உண்டியின்றிப் பல நண்பகல் கழிப்பர். காற்றைப் புசிப்பர். இப்படிப்பட்ட கடுந்தவம் புரிந்தவருங் கடவுளைக் காணுது தவிப்பர்.

இதனை மாணிக்கவாசகர்,

" புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே உண்டியாய் அண்ட
வாணரும் பிறரும்
வற்றி யாரும்நின் மலரடி காணு மன்ன என்னை யோர்
வார்த்தையுட் படுத்துப்
பற்றினுய் பதையேன் மனம்மிக உருகேன் பரிகிலேன்
பரியாவுடல் தன்னைச்
செற்றிலேன் இன்னுந் திரிதரு கின்றேன் திருப்பெருந்
துறைமேவிய சிவனே "

என்று திருவாய் மலர்ந்தருளியிருப்பது நோக்கத்தக்கது.

திண்ணனுர் திருக்காளத்தி நாதரைக் காவல்புரிந்து நின்ற இரவு முழுதும் முத்துக்களும், நாகரத்தினங்களும்

ஒளி வீசின. தீப மரங்களும் மணி விளக்கொளிகளும் விளக்கஞ்செய்தன. மந்திகள் கற் பொந்துகளில் தமக்காக வைக்கப்பெற்ற முத்து மணிகள் பிரகாசஞ் செய்தன. மாறி நின்று மயக்கிடும் வஞ்சப் புலனைந்தும் வென்ற பெரியோர் தியானவொளியுடன் சோதி விரித்தனர். ஆகவே, எந்தையாரது காளத்தி மலையில் இரவொன்று மில்லை. திண்ணனாரது அன்புத் தொண்டு இங்ஙனம் மிளிர்ந்தது.

★

# எட்டாமதிகாரம்

## இரண்டாநாட் சிவகோசாரியார் பூசை

### (ஆகமப் பூசை)

**வை**கறைப் பொழுதில் திண்ணனார் வில்லேந்திய கையினராய் வேட்டையாட 'வேண்டி, திருக்காளத்தியப்பரை வணங்கிப் புறப்பட்டுப் போயினர். கீழ்த் திசையில் சிறிதுநேரத்தின் பிறகு சூரியன் தனது கதிர்களைப் பரப்பி உதயஞ்செய்தான். அப்போது, காளத்திநாதரை ஆகம விதிப்படி அன்புடன் பூசித்துவரும் சிவகோசாரியார் என்னும் தவமுனிவர் வழக்கம்போலப் பூசை செய்யும் பொருட்டுப் பூவும் நீருங் கொண்டணைந்தார். சிந்தனை சிவனுக்காக்கிய வேதியர் இறைவன் திருமுன்பு போனவுடன் வெந்த இறைச்சி கண்டு மனம் வெதும்பினர். எலும்பினைக் கண்டு மனம் ஏங்கினர். இறைச்சியினையும் எலும்பினையும் கண்ணுற் காணவுங் கூசும் மறையவர் இறைவன் சந்நிதியிற் கண்டால் என்னபாடுதான் படமாட்டார். அவர் ஆண்டவன் நினைவோடு சென்றமையால் அவர் அறியாமலே மாமிசத்தையும் எலும்பினையும் மிதித்துவிட்டார். உடனே அஞ்சியவரா யோடினர். "அந்தோ! கெட்டேன்! இந்த வநுசிதம் செய்தார் யாரோ? அஞ்சாத நெஞ்சு படைத்த வேடரே இவ்வாறு செய்திருத்தல்வேண்டும். தேவாதி தேவனே! இத்தகைய அநியாயம் புரிந்து அவர் பிழைத்துப் போகவொண்ணுமோ? இங்ஙனம் அவர் புரிந்தது உமது திருவுளச் சம்மதமோ?" என்று பலவாறு புலம்பியழுதார். சோகத்

தால் ஆகந்தளர்ந்து அடியற்ற மரம்போல் நிலமிசை விழுந்தார்; அலமந்தார்.

ஒருவாறு தேறியெழுந்து இறைவனது பூசையைத் தாழ்க்கவொண்ணுது என்றெண்ணி, யுடனே திருவலகால் இறைச்சியையும், எலும்பையும் செருப்படியையும் நாயடியையும் மாற்றினுர். பொன்முகலி நதியிற் புகுந்து முழுகினுர். ஆண்டவன் சந்நிதியில் பழுது நேர்ந்தது தீர்ப்பதற்குப் பவித்திரமாஞ் செயல்களாகிய யாகங்கள் புரிந்து, பிறகு தூய பூசனை தொடங்கி, திருமஞ்சன முதலிய பூசைகளனைத்தும் வழுவின்றி முடித்து முதல்வனுர் கழல் பணிந்தார்.

பணிந்து எழுந்த சிவகோசாரியார் வேத மந்திரங்களாகிய, விசுவகாரணன், விசுவரூபன், விசுவாதிகன், விசுவசேவியன் என்பன முதலியவற்றைப் பன்முறை கூறி மனம் ஒருவாறு அமைதிகொண்டு, அங்கணர்பால் விடைகொண்டு தபோவனத்திடைச் சேர்ந்தார். சிவகோசாரியார் ஐம்புலன்களை வென்றவர். சிறந்த முனிவர். சிவாபராதம் பொருதவர். சிவபெருமானே முழுமுதற் கடவுளெனக் கொண்டவர். வடமொழி நன்கு கைவரப் பெற்றவர். வேதம் ஓதியதன் வழி நின்ற பெரியார். பரம்பொருட்பற்றே யவருக்குப்பற்று. வேறு பற்றற்றவர்.

“ பற்றுக பற்றற்முன் பற்றினை ; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு ”

என்ற வள்ளுவர் வாக்குப்படி சிவகோசாரியார் இறைவன் பற்றை யொழிய ஏனைய பற்றெல்லாம் அற்ற பெரியார். இவர் தமது தவச்சாலைக்குச் சென்முர்.

★

## ஒன்பதாமதிகாரம்

# திண்ணனாரின் அன்புப் பூசையும், சிவ கோசாரியார் ஆகமப் பூசையும்

திண்ணனார் பெருமலைச் சாரலில் மேய்ந்த மான்முதலிய மிருகங்களை வேட்டையாடினர். தீக் கடை கோலால் நெருப்புண்டாக்கி வதக்குவனவற்றை வதக்கி, முன்பு போல்ச் சுவை பார்த்து ஒரு கல்லையில் எடுத்து வைத்துக் கொண்டார். தேன் கொணர்ந்தார். அதனையும் இறைச்சியுடன் கலந்து எடுத்துக் கொண்டு, முன்பு போல வாயில் நீரும் தலையிற் பூவுங் கொண்டு இறைவன் திருமுன்பு சென்று செருப்புக் காலால் நிர்மாலியங்களை மாற்றி வாய்க் கலசத்தால் திருமஞ்சன மாட்டி கல்லையிற் கொணர்ந்த ஊனமுதைக் காளத்தியப்பர் முன் வைத்து "ஐயனே, இது நேற்றுக் கொணர்ந்த ஊனமுதை விடச் சிறந்தது. ஏனத்தினோடு மரை, மான், கடமை முதலியவைகளின் இறைச்சியாகும். அடியேனும் சுவை கண்டேன். தேனும் உடன் கலந்துள்ளது. தித்திக்கும்" எனமொழிந்து அன்போடு தேவரை அமுது செய்வித்தார்.

திண்ணனார் இங்ஙனம் தமது ஒப்புயர்வற்ற அன்புத் தொண்டு புரிந்தொழுகுவாராய், இரவில் உறங்காது காளத்திநாதர் திருமுன் காவல் புரிந்தார். பகற் போதில் வேட்டையாடுவதும் இறைவனை யிரவில் காவல் செய்வதுந் தான் திண்ணனார் வேலையாகும். சிவகோசாரியாரும் நாடோறும் வந்து பார்த்து வருந்துவதும், கோயிலுக்குப்

பவித்திர விழாச் செய்வதும் பூசையியற்றுவதுமா யிருந் தார். ஆகமப் பூசையையும் அன்புப் பூசையையும் ஆண்ட வன் ஏற்றான்.

இஃதிவ்வாறாக, நாணனொடு காடனும் போய் நிகழ்ந்த வற்றையெல்லாம் நாகனிடம் சொன்னார்கள். அவன் அச் செய்தி கேட்டது முதல் ஊண் உறக்க மின்றித் தேவராட் டியைக் கூட்டிக்கொண்டு ஓடி வந்தான். அவர்களுக்குத் தெரிந்த முறையெல்லாம் கையாண்டார்கள். உடுக்கை யடித்துக் குறி பார்த்தார்கள். தேவதைகட்குப் பூசை போட்டுப் பார்த்தார்கள். ஒரு வகையாலும் திண்ணனா ரைத் தம் வசப்படுத்தவும், இனி யொன்றுஞ் செய்யவும் முடியாதென்று போய் விட்டார்கள்.

திண்ணனார் மனோ நிலையைச் சேக்கிழார்,

"முன்புதிருக் காளத்தி முதல்வனா ரருணோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்யாக்கை
தன்பரிசும் வினையிரண்டும் சாருமலம் மூன்றும்அற
அன்புபிழம் பாய்த்திரிவா ரவர்கருத்தி னளவினரோ ?"

என்ற பாசுரத்தால் மிக அழகாக விளக்குகின்றார். திருக் காளத்தி நாதரின் அருட்பார்வையால் திண்ணனாரது நல் வினை தீவினை யிரண்டு மொழிந்தன. ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் ஒழிந்தன. அன்பு வடிவம் பெற்றார். இரும்பு எங்ஙனம் இரதகுளிகையால் பொன்னாக மாறுகின்றதோ, அங்ஙனமே நமது திண்ணனார் இறைவன் அருணோக்கால் அன்புருவமாயினார். உணர்ந்த ஞானியர் தம் கண்பட்ட மாத்திரத்தில் ஒருவனது புணர்ந்த பாவம் போமென்றால், உலகெலாம் உணர்ந்தோதற்கரிய பெருமான் கடைக்கண் பார்வை பட்டால் அதன் பெருமையைக் கூற முடியுமோ ?

திண்ணனார், சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாகும் பூசை புரிந்து வந்தார். ஐந்தாம் நாள் சிவகோசாரியார் ஆகமப்படி பூசித்து "என்னுடைய நாயகனே! இது செய்தாரைக் காணேன். இத்தீமையை யுனது திருவருளால் ஒழித்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்துப் போயினர். ஆண்டவன் அடியார் கவலையை யொழிக்காதிரான். பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப் பரிவுடையனன்றோ? ஆகவே அன்றிரவு முனிவரது கனவில் சிவபெருமான் எழுந்தருளி, "அவனைச் சாதாரண வேடுவன் என்று எண்ணாதே! அவன் செயல்களை யாம் உரைக்கக் கேள். அவன் வடிவமெல்லாம் நம்மிடத்துக் கொண்ட அன்பேயாம். அவன் அறிவு முழுதும் நமையறியும் அறிவேயாம். அவன் செருப்புக் காலால் நிர்மாலியங்களை மாற்றும்போது எமது சிவக்கொழுந்தாம் செந்திறபதி புரக்கும் செவ்வேளின் அடிபட்டால் எங்ஙனம் எம்மெய் குளிரும், அங்ஙனம் குளிருகின்றது. அவன் வாயினால் உமிழும் நீர் அன்பினை யுமிழ்வதொக்கும். அவன் ஊனமுதினையிட்டு அதனை யுண்ணுமாறு கூறும் வார்த்தைகள் வேத மந்திரங்களைக் காட்டிலும் இன்புறுத்துகின்றன, அவனது முழு அன்பினை நாளை நாம் காட்டுகின்றோம். நீ ஒளித்திருந்து பார்ப்பாயாக. உன் மனக் கவலை விட்டொழிவாயாக" என்றருளிச் செய்து மறைந்தருளினார்.

★

# பத்தாமதிகாரம்

---

## திண்ணனூர் கண்ணப்பரானமை

முனிவர் கனவு நீங்கிய பின்னர் விழித்தெழுந்து இறைவனது அருளிப்பாட்டினை எண்ணி வியப்பும் அச்சமும் ஒருங்கே யெய்தினர். மீண்டும் நித்திரை செய்யாமல் காளத்தி யெம்கண்ணுதலைத் தியானித்த வண்ணமிருந்து, விடியுமளவில் பொன் முகலி சென்று மூழ்கி, மலர் பறித்துக்கொண்டு இறைவனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தார். திண்ணனூர் ஆறுவது நாள் அதிகாலையில் முனிவர் வருவதற்கு முன்பு போய் வேட்டையாடி வழக்கம் போல ஊனமுதங் கொண்டு, நல்ல மலர்களும் பறித்தெடுத்துக் கொண்டு இத்தனைநேரந் தாழ்ந்தேன் என்று மிக விரைவாகத் திருக்காளத்தி யப்பரிடம் வந்தணைந்தார். அவர் வரும்போது பல அபசகுனங்கள் தோன்றின. அவற்றைக் கண்ட திண்ணனூர் "என்னே! ஒரு நாளும் இல்லாமல் இன்று தீச்சகுனங்கள் காணப்படுகின்றனவே. இவை உதிரங் காட்டுகின்றனவே! ஓ, கெட்டேன்! என் அத்தனுக்கு என்ன நேர்ந்ததோ?" என்று திண்ணனூர் கூறிக்கொண்டே சென்றூர்.

திருக்காளத்தி நாதர் அவ்வேளையில் தமது சிவலிங்கத் திருமேனியில் முகமும் மூன்று கண்களுமாகக் காட்டி அக்கண்களுள் வலத் திருக்கண்ணில் உதிரம் பாயக் காட்டியிருந்தார். இதனைத் தூரத்திற் கண்ட திண்ணனூர் வல் விரைந்தோடி வந்தார்.

"வந்தவர் குருதி கண்டார், மயங்கினர்; வாயி னன்னீர்
சிந்திடக் கையி லூனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமம் குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை யலங்கன் மார்பர் நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்"

"விழுந்தவ ரெழுந்துசென்று துடைத்தனர் குருதி வீழ்வது
ஒழிந்திடக் காணர்; செய்வ தறிந்தில ருயிர்த்து மீள
அழிந்து போய் வீழ்ந்தார் தேறியாரிது செய்தா ரென்று
எழுந்தனர்; திசைகளெங்கும் பார்த்தனர்; எடுத்தார் வில்லும்"

"எனக்குப் பகையாய் இம்மலையிற் கொடிய வேடுவர் செய்தாரோ? சிங்கம் முதலிய கொடு விலங்குகள் செய்தனவோ? பார்த்துத் தண்டிப்பேன்" என்று அக் குன்றச் சாரலில் நெடுந்தூரமும் பக்கத்திலும் ஓடித்தேடினர். வேடர்களையும் விலங்குகளையும் காணவில்லை. மீண்டும் திருக்காளத்திநாதரிடம் வந்து அவரது பாதங்களைத் தழுவிக் கட்டிக் கொண்டு கண்ணீர் வாரப் பின் வருமாறு கதறினர்.—

"பாவியேன் கண்ட வண்ணம் பரமனர்க் கடுத்த தென்னே?
ஆவியி னினிய வெங்க ளத்தனர்க் கடுத்த தென்னே?
மேவினர் பிரிய மாட்டார் விமலனர்க் கடுத்த தென்னே?
ஆவதொன் றறிகி லேன்யா னென்செய்கேன்" என்று பின்னும்.

"என்ன செய்தால் இது தீருமோ? இத்தீங்கு செய்தாரைக் காணேன். வேடர்களது அம்புப் புண்களைத் தீர்க்கும் மூலிகைகளைத் தேடிக் கொணர்வேன்" என்று மலைப்பக்கம் போனர். பல விடங்கட்குப் பரிந்து சென்று பச்சிலைகள் பறித்துக் கொணர்ந்தார். இறைவன் திரு நயனத்தில்* அவ்விலைகளைப் பிழிந்து வார்த்தார். இரத்தம் நிற்கவில்லை. இனி இதற்குச் செய்யவேண்டிய

தென்ன என்று எண்ணிப்பார்த்தார். "ஊனுக்கு ஊனிடல் வேண்டும்" என்ற பழமொழி அவர் நினைவிற்கு வந்தது. வரவே அவர் தமது வலக் கண்ணைக் கூரிய அம்பினுற் றோண்டி முதல்வர் கண்ணில் அப்பினூர். குருதி வராமல் நின்றது கண்டார். உடனே ஆனந்த மிகுதியால் குதித்தார். தோள் கொட்டி யாரவாரஞ் செய்தார்; கூத்தாடினூர். "நான் செய்த இந்தமதி மிக நன்று" என்று நகைத்தார்; உன்மத்தர் போலானூர்.

வலக்கண்ணிற் கண்ணப்பிய வள்ளலாராகிய திண்ணனூரின் அன்பின் திறத்தை யின்னும் காட்டவேண்டி காளத்திநாதர் தமது இடக் கண்ணிலும் இரத்தம் வருமாறு செய்தார். அதனைக் கண்டபோது, "ஆ! கெட்டேன்! எனது நாயகரது ஒரு கண் குருதி நிற்க, மற்றைக்கண்ணில் இரத்தம் பொங்குகிறதே. இதற்கு அஞ்ச மாட்டேன். இதற்கு மருந்து கண்டேன்." என்று திண்ணனூர் தமது இடக் கண்ணினை யெடுத்து அப்புவதற்குத் தயாராகி, இறைவரது இடக் கண்ணில் தமது இடக்காலை ஊன்றிக் கொண்டு, உண்ணிறைந்த விருப்பத்தோடும் ஒப்பற்ற தனிப்பகழி கொண்டு தமது இடக்கண்ணில் ஊன்றினூர். காளத்திநாதர் இச்செயலைப் பார்க்கச் சகியாதவராகி அவரது திருமேனியில் முளைத்தெழுந்த கை அன்பரது திருக்கையினை அன்புடன் பிடித்துக் கொண்டது. அதற்கு முன் அவரது அமுத வாக்கினின்றும் "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத் தோன்றல், நில்லு கண்ணப்ப!" என்று மும் முறை எழுந்து தடுத்தது. இவை முழுதும் சிவகோசாரியார் கண்டார். பெரு வியப்பும் அச்சமும் எய்தினர். வேதங்கள்

முழங்கின. பிரமன் முதலிய தேவர்கள் கற்பகப் புதுப்பூ மழை பொழிந்தனர்.

> பேறினி யிதன்மே லுண்டோ? பிரான்திருக் கண்ணில் வந்த
> ஊறுகண் டஞ்சித் தங்க ணிடந்தப்ப உதவுங் கையை
> ஏறுயர்த் தவர் தங்கையாற் பிடித்துக் கொண்டென் வலத்தின்
> மாறிலாய் நிற்க வென்று மன்னுபேரருள் புரிந்தார்.

என்ற சேக்கிழார் வாக்குப்படி திருக்காளத்தி நாதர் திண்ணனார் என்ற பெயரை மாற்றிக் கண்ணப்பர் என்ற பேரிட்டுத் தமது வலப் பாகத்தில் என்றும் நின்று நிலவு மாறு அருள் புரிந்தார். இத்தகைய பேறு யார் பெற்றார்? யார் பெறப்போவார்? ஒருவரும் இல்லை. அறிவாற் சிவனே யென்றும், அன்பிற் சிறந்தவர் என்றமையால் அன்பர் என்றும் போற்றப்படும் மாணிக்க வாசகர்,

> " கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
> என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
> வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
> சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ "

என்று தமது திருவாசகத்தில் அன்பின் சிகரமாக வைத்துப் போற்றுவாராயினர். சங்கராசாரியாரும், நக்கீரர் முதலிய பெரியார்களும் கண்ணப்பரின் அருஞ் செயலைப் போற்றி மகிழ்ந்தார்கள். இன்றும் திருக்காளத்தி மலையில் குடுமித் தேவரருகே நமது கண்ணப்பர் நிற்கும் காட்சியானது கன்னெஞ்சினரையும் மனங்கரைவிக்கு நிலையில் இருக்கின்றது. கண்ணப்பரின் அன்புத் தொண்டு காசினியில் சிறப்பதாக!

பொங்கு மங்களம் எங்குந் தங்குக!

★

# 3. மகாத்துமா காந்தியடிகள்

## முதலதிகாரம்

### பிறப்பும் வளர்ப்பும்

**கா**ந்தியடிகள் உலகப் பெரியார்களிற்றலைசிறந் தவர். இவர் 1869-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண் டாந்தேதி பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த போர்பந்தர் என்னும் சிற்றூரில், கரம்சந்து காந்தியாருக்கும் புத்தளி பாய் என்னும் புனிதவதியாருக்கும் திருமகனாகத் திரு வவதரித்தார். இவர் பிறந்த நேரத்தைப் பரிசீலனை செய்த சோதிடர், பாண்டவரின் பொருட்டு கௌரவர்பால் நாடு கேட்பான் வேண்டிக் கண்ணன் தூது சென்ற நேரம் என்று கணித்தார். அங்ஙனமே பிற்காலத்தில் பாரத மக்களாகிய பாண்டவரின் பொருட்டு, கௌரவராகிய ஆங் கிலேயரிடம் நாட்டின் சுதந்தரத்திற்காகப் போராடி வென றூர் என்பது உலகப் பிரசித்தி. அதனுல் பாரத மக்களின் பரம பிதாவென்று பாராட்டப்படுகின்றூர்.

இவரது தந்தையாகிய கரம்சந்து காந்தியார் இராஜ கோட்டை ராஜ்யத்தில் பிரதம மந்திரியாக வாழ்ந்தார். தனது கடமையைச் சரிவரச்செய்து முடித்தார். ஒருமுறை அவர் கடமையைச் செய்து முடித்தமைக்கு மன்னர்பிரான் பெருநிலப் பரப்பினைத் தரவிழைந்தார். கரம்சந்து காந்தியார் வேண்டாமை யென்னும் விழுச் செல்வமுடையவ ராதலால், தமக்கொன்றும் வேண்டாமென்று மறுத்தார். பின்னர் அரசனது வற்புறுத்தலின் பேரில் ஒரு சிறிய பாகமுள்ள நிலத்தை மட்டும் அவரது திருப்திக்குப் பெற்று மகிழ்ந்தார்.

"தம்முயிர்க் குறுதி யெண்ணர் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங் கால
மும்மையு முணரவல்லா ரொருமையே மொழியு நீரார்"

என்று அயோத்தி மன்னன் அமைச்சரது பண்புகளைக் கவிச் சக்கரவர்த்தி கம்ப நாட்டாழ்வார் எங்ஙனம் கூறிப் போந்தனரோ, அங்ஙனமே கரம்சந்து காந்தியார் மந்திரிப் பதவி வகித்து நடத்தினர். நல்ல உலகியல் அறிவு வாய்க்கப் பெற்றவர். கீதையை நன்குகப் படித்து வந்தார்.

ஒரு முறை இராஜகோட்டையிலிருந்த பிரிட்டிஷ் அரசாங்க அரசியல் அதிகாரி ஒருவர், இராஜகோட்டை மன்னரை இகழ்ந்ததைச் சகிக்காது கரம்சந்து காந்தியார் கண்டித்துப் பேசினர்.

'இம்' மென்றால் சிறைவாசம் ஏற்பட்ட காலமாகையால் அவ்வதிகாரி அமைச்சரை மன்னிப்புக் கேட்குமாறு கேட்டார். இன்றேல் சிறைவாசமென்றார். மனச்சான்றின் வழி நின்ற மந்திரியாராகையால் மன்னிப்புக் கேட்க மறுத்துவிட்டார். அதன் பொருட்டுச் சில மணி நேரம்

காவல் தண்டனை யேற்றார். இங்ஙனம் உண்மை போற்றும் உயரிய ஒழுக்கமும், குற்றங்கண்ட வழிக் கடிதலும், முதலிய நற்பண்புகளை நமது காந்தியடிகள் தந்தையாரிடமிருந்து பெற்றார்போலும்!

இவரது தாய் புத்தளிபாய் அம்மையார், கொண்டாரின் குறிப்பறிந்து நடக்கும் குலக்கொடி. இறைவனிடம் இடையறா வன்புடையவர். ஏழைகட் கிரங்கும் ஏந்திழையார். தவஞ் செய்வார் தங்கருமம் செய்வார் என்பது போல, அம்மையார் சாந்திராயணம் முதலிய பெரிய நோன்புகளை விடாது கடைப்பிடித்து வந்தார்.

இத்தகைய தாய் தந்தையர் ஆற்றிய தவத்திடைத் தோன்றிய காந்தியடிகட்கு "மோகனதாஸ்" என்ற பிள்ளைத் திருநாமம் சூட்டப்பெற்றார். பிற்காலத்தில் குடிப்பெயரும் தந்தையார் பெயரும் சேர்ந்து "மோகன்தாஸ் கரம்சந்து காந்தி" என்று அடிகளார் பெயர் வழங்கலாயிற்று. இவர் "பனியா" என்ற வைசிய மரபைச் சேர்ந்தவர்.

இவர் இளமையில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சிறிது காலம் கல்வி பயின்றார். ஆரம்பக் காலத்தில் இவரது அறிவு மந்தமாகவே இருந்தது. இராசகோட்டையில் நடுத்தரக் கலவிச் சாலையிற் சேர்ந்து படித்த போது இவரது அறிவு சுடர்விட்டுப் பிரகாசிக்க வாரம்பித்தது. அதன் பலனாக வகுப்பில் பல பரிசுகள் பெற்று மகிழ்ந்தார். பத்தாம் வகுப்பில் பயிலும்போது அரசாங்கத்தார் உபகாரச் சம்பளம் கொடுத்து உதவினர்.

அடிகளாருக்குப் பதின்மூன்றும் ஆண்டிலேயே மணமாய்விட்டது. அவர் பெயர் "கஸ்தூரி பாய்" என்பதாகும். இவ்வம்மையார் சிறந்த வொழுக்கம் வாய்ந்தவர். காந்தி

யடிகள் பெரியநிலை யடைவதற்கும், நாட்டிற்கு நற்றொண்டு ஆற்றுவதற்கும் உறுதுணையாய் நின்ற உத்தமி. இளமையிலேயே காந்தியடிகள் மிகுந்த நாணமுடையவராயிருந்தார். இந்த நாணம் பெண்களுக்கு இயற்கையாய் ஆடவரைக் கண்டாலெழும் கூச்சம் அன்று. பிறர் பழியும் தம் பழிபோ லெண்ணி வெட்கமுறும் பண்பு. இந்த நாணம் ஆடவர்கட் கிருக்குமானல் அவர்கள் பெரியதொரு நிலை யெய்துவர் என்பது சான்றோர் துணிபு. காந்தி யடிகள் இக்குணம் படைத்தவர். ஒருமுறை தீய மாணவன் சேர்க்கையால் விலைமகள் வீடு சென்ருர்: இவரது எல்லையிலா நாணம் இவரைப் பேச வொட்டாது தடுத்தது. அதனுல் வேசியர் தம் முயக்கில் ஈடுபடாது வீடு திரும்பினுர்.

அடக்கம் அமரருள் உய்க்கும் பண்பன்றோ? அத்தகைய அடக்கத்தை யுடையவராய் விளங்கினுர். பள்ளியில் படிக்கும்போது பிறர் விஷயங்களில் தலையிடாமலும் அவர்களைப் பற்றி யறிந்துகொள்ள விழையாமலும் பாடத்திற் கவனஞ் செலுத்தி வந்தார். பாடம் முடிந்ததும் நேரே வீடு சென்றுவிடுவார். அடக்கமும் அன்பும் உடையவராய்த் திகழ்ந்த காந்தியாரிடம் ஆசிரியர்கள் பரிவு காட்டி வந்தனர்.

இளமை தொட்டே அடிகளார் தமது ஒழுக்கத்திற் கண்ணுங்கருத்துமா யிருந்தார். தவறிழைத்துவிட நேர்ந்தால், அத்தவற்றிற்குக் கழுவாயாக மனம் வருந்தியழுவார். இதனைக் கழிவிரக்கமென்பர். இஃது சீரியதொரு பண்பாகும். மாசற்ற ஏசுநாதரைப் பின்பற்றுகின்ற கிறித்தவ மதத்தில், ஒருவன் ஒரு குற்றம் புரிந்தால் குருமாராக விளங்கும் பாதிரியாரிடம், தான்செய்த குற்றத்தைக்கூறி

மனம் வருந்தி பாவமன்னிப்புக் கேட்பதுண்டு. மாணிக்க வாசகர் மாந்தர்கள் தவறிழைப்பரேல் இங்ஙனம் ஆண்டவனிடம் ஒத்துக்கொண்டு அழுதால், அவன் அதை மன்னிப்பதோடு அருளும் புரிவான் என்ற குறிப்பினைத் தருவதுபோல்,

"யானே பொய்; என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே"

என்றருளியிருக்கின்றார்.

காந்தியடிகள் தண்டனை பெறுவதுபற்றி வருந்தியதில்லை. தவற்றைத் தவறென்றே யொப்புக்கொள்ளும் உயர்குணச் செம்மல். இவர் புலால் அருந்தாத குடியில் பிறந்தவர். ஒரு கெட்ட நேசனது கூட்டுறவால் மாலை வேளையில் புலால் அருந்திவந்தார். இரவு வீட்டிற்கு வந்ததும் தமக்குப் பசியில்லையென்று தாயிடம் பொய் சொல்லிவந்தார். இங்ஙனம் பொய்கூறுவது அவருடைய மனத்தைச் சுட்டது,

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்பது பொய்யா மொழியன்றோ? ஆகவே அன்னையிடம் பொய் புகலுவதைக் காட்டிலும் புலாலுணவை விட்டிடுதல் நலமென்று விட்டார். அவர் புலாலுணவு புசித்தமைக்குரிய காரணம், அதனையுண்டு உடல் வலிமைபெற்று போராடி வெள்ளையர் ஆட்சியினின்றும் தாய்நாட்டை மீட்பதற்காக அதனையுண்டார். இளமையில் அவர் தோழர் இத்தகைய போலி நியாயங்காட்ட, அடிகளார் நம்பி அதனைப் புசித்தார். பிறகு அதனால் விளையும் தவறினையுணர்ந்தும் தாயாரிடம் பொய்கூற அஞ்சியும் புலாலுணவை விட்டார்.

தீய நட்பினுல் அடிகளாருக்கு இளமையில் விளைந்த இன்னல்கள் பல. புகைச் சுருட்டுப் பிடித்தறியாதார் அதனையுஞ் செய்தார். தமது செலவுக்குப் பணமின்மையால், சகோதரரது பொற்காப்பில் சிறிது திருடி விற்று புகைச்சுருட்டு வாங்கினுர். அவருடைய மனம் அவரைக் கண்டித்தது. ஒருநாள் தாம்செய்த தவறுகளனைத்தையும் ஒரு கடிதத்தில் எழுதி தமது தந்தையிடங் கொடுத்துத் தேம்பித் தேம்பி யழுதார். அவர் அழுதைதப் பார்த்து அவரது தந்தை யவரை மன்னித்து விட்டார். அவரது அழுகையே அவரது குற்றத்தைப் போக்கியது. அது முதற்கொண்டு இத்தகைய குற்றம் புரியவில்லை.

அவர் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போது, கல்வி இலாகா மேலதிகாரி பள்ளியை மேற்பார்க்க வந்தார். வந்தவர் ஆங்கிலத்தில் சில வார்த்தைகள் கூறி எழுதச் செய்தார். நமது அடிகளார் ஒரு வார்த்தையைத் தவருக எழுதினுர். இதைப் பார்த்த இவரது ஆசிரியர் இவரருகே வந்து காலால் அடிகளாரது காலை மிதித்துப் பக்கத்துப் பையனைப் பார்த்து எழுதும்படிக் குறிப்புச் செய்தார். ஆனுல் அங்ஙனம் புரிவது தவறென்றுணர்ந்து ஆசிரியர் குறிப்புக்குட்படாது வாளா விருந்தார்.

இளமையில் இவர் "சிரவண பித்ரு பக்தி நாடகம்" என்னும் நூலைப்படித்தார். அந்நாடகத்தில் சிரவணன் தாய் தந்தையர்களைக் காவடி கட்டி யாத்திரைக்காகச் சுமந்து செல்வது கூறப்படுகின்றது. அதைப் போலத் தமது பெற்ருேர்களிடம் நடக்கவிரும்பினுர். ஒரு முறை அரிச்சந்திர நாடகம் பார்த்தார். அரிச்சந்திரன் சத்தியத்தை நிலைநாட்டும் பொருட்டு நாடு, நகர், மனைவி, மகவு

முதலிய எல்லாவற்றையும் இழந்ததைக் காந்தியடிகள் மனத்தில் பதித்துக் கொண்டார்.

"கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற வள்ளுவர் வாய்மொழிக் கிணங்க கற்றுங்கொழு கினர் அடிகள். வாணாள் முழுதும் உண்மைக்கே பாடுபட்டார். தமது கொள்கைகளைக் கடைப்பிடித்தார். அவற்றை நிலைநாட்டத் தமதுடல் பொருள் ஆவியனைத்தையும் அர்ப்பணஞ் செய்தார். ஒருமுறை அடிகள் குஜராத்திப் பாட்டொன்றைப் படிக்க நேர்ந்தது. அதன் பொருள் வருமாறு:—

"உனக்கு மோர் கொடுத்து உன் தாகத்தைப் போக்கினவனுக்கு வயிறு நிரம்ப உணவு கொடுப்பாயாக. உன்னைச் சிரிப்புடன் வரவேற்றவனைக் கீழே வீழ்ந்து வணங்கு. ஒரு காசு கொடுத்துதவியவனுக்குத் தங்க நாணயங்களைக் கொடு. துன்பத்தில் ஊன்று கோலாய் உதவினவனுக்கு உயிரையுங் கொடுத்துதவுக. ஒரு நன்மை செய்தவனுக்குப் பத்து நன்மைகள் செய்வது தான் உன் அறன். தீமைக்குப் பதில் நன்மை செய்பவர் தாம் உண்மையில் வாழ்பவர் ஆவர்" என்பது. இப்பாட்டை யடிக்கடி படித்து மனத்திடைப் பதித்துக் கொண்டார். "தீமை செய்தவருக்குத் தீமை செய்யவொண்ணாது, நன்மை செய்வதே தகுந்த மாற்றாகும்" என்ற வுண்மையைக் கடைப்பிடித்தார். இக் கருத்தினை வள்ளுவர்,

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்று கூறுகின்றார். அடிகளார் கொண்ட கருத்தும் வள்ளுவர் கருத்தை யொட்டியே யிருக்கின்றது.

இளமையிற் படியுங்கருத்துக்கள் சிலையிலெழுத்துப் போல் படியுமல்லவா? அவ்வண்ணமே நமது அடிகளார் மனத்திடைச் சிரிய கொள்கைகள் பதிந்தன. "தந்தை யறிவு மகனறிவு" என்பதுபோல இவரது பெற்றோர்கள் சிவன் கோயிலுக்கும், விஷ்ணு கோயிலுக்கும் போவ துண்டு. பார்சி நண்பர்களிடமும், முகம்மதிய நண்பர்க ளிடமும் கலந்து பழகுவார்கள். அந்தப் பரந்த நோக்கு மும், மதச் சகிப்பும் அடிகளிடம் ஏற்பட்டன.

★

# இரண்டாமதிகாரம்

## காந்தியடிகளின் கல்விப் பயிற்சி

அடிகளார் ஆயிரத்தெண்ணூற்று எண்பத்தேழாம் ஆண்டில் உயர்தரப் பள்ளி இறுதிநிலை வகுப்பில் தேர்வு பெற்றார். பின்னர் பவநகர்க் கல்லூரியில் சிறிதுகாலம் பயின்றார். முதல் வருஷப் படிப்பு முடிந்ததும் அதை நிறுத்திவிட எண்ணினார். அப் படிப்பில் விருப்பமில்லை. ஆகவே அதை நிறுத்தி வீடு திரும்பினார்.

இவரது குடும்ப நண்பருள் ஒருவராகிய மாவ்ஜீதவே என்பவர், அடிகளாரை ஆங்கில நாட்டிற்கனுப்பி மேற் படிப்புப் படிக்கவைத்தால் சிறந்த பதவியடைவார்; பாரிஸ்டர் பரீட்சையில் தேறி வந்தால் குடும்பத்திற்குப் புகழுண்டாகும்; நல்ல ஊதியமும் கிடைக்குமென்று கூறினர். அடிகளாரது தமையனார், தம்பியாரைப் பிரிய மனமிலராய் இவ் யோசனையை முதலில் அங்கீகாரஞ் செய்யவில்லை.

அடிகளின் அன்னையார் இதைக் கேட்டதும் மனம் வருந்தினர். பிரிவாற்றாமை கருதி மாத்திரமல்ல, தம் மைந்தர் ஆங்கில நாடு சென்றால் அந்நாட்டாரின் பழக்க வழக்கங்களாகிய மதுபானம் அருந்தல், புலாலுண்ணல், மாதர் முயக்கம் என்னும் தீப்பண்புகள் ஏற்படும் என்று அஞ்சினர். அடிகளார் இளமையில் ஆங்கில நாடு செல்ல முனைந்து நின்றார். பேசார்ஜீ சுவாமி யென்ற சமணத் துறவி யாருடன் கலந்தாலோசித்து, அம்மையார் தமது மகனை

ஆங்கில நாட்டிற்கு மூன்று சத்தியங்கள் செய்யும்படிச் செய்து பின்னர் அனுப்புவதாகத் தீர்மானித்தார். அங்ஙனமே அடிகளார் புலால், குடி, மாதர் — என்ற மூன்றிடமும் ஈடுபடுவதில்லை யென்று சூளுரை செய்து கொடுத்தார்.

அன்னையாரிடம் சத்தியஞ் செய்து கொடுத்து 1888-ம் ஆண்டு செப்டம்பர்மீ நான்காம் தேதி, பம்பாயில் கப்ப லேறிப் புறப்பட்டார். கப்பலில் யாருடனும் அதிகமாகப் பேசுவதில்லை. அவருக்குப் பழக்கமான வழக்கறிஞர் மஜூம்தார் என்பவரோடு மட்டும் பேசுவார். செப்டம்பர் மாதம் இறுதியில் இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார். இங்கி லாந்தின் வாழ்க்கை முதலில் பிடிக்கவில்லை. நாளாவட் டத்தில் அந்நாட்டவர்போல நடையுடை பாவனைகளை மாற்றிக்கொண்டார். கொஞ்சம் நடனக் கலை பயின்றார். பிடில் வாசிக்க அறிந்தார். நன்றாக ஆங்கிலம் பேசுவதற்குப் பழகிக்கொண்டார். ஆனால் அன்னையாரிடம் கொடுத்த வாக்கினை மறந்தாரில்லை.

ஒரு முறை அடிகளாருக்கு மிகவும் வேண்டியவரான டாக்டர் பிராண ஜீவன் மேத்தா, ஒரு நாடகத்திற்கு அவரையழைத்துச் சென்றார். நாடகம் பார்ப்பதற்கு முன் ஓர் உணவு விடுதியில் பெரு விருந்து நடந்தது. அவ் விருந்தில் இருவரும் உட்கார்ந்த பின்னர், அங்கு பரி மாறப் பெறும் உணவு இன்னதென்று அறிய அவாக் கொண்டார். முயன்று அவ்வுணவு புலால் உணவென அறிந்தார். உடனே அவ்விருந்தை விட்டு வெளியே புறப்பட்டார். அடிகளார் நடந்து கொண்டது சரியல்ல வென்றும், அநாகரிகமான தென்றும் அங்குள்ளவர்கள்

[stamp]

நினைத்தார்கள். அவ்வாறே பேசினார்கள். ஆனால் அடிகளார் அன்னைக் களித்த வாக்கைக் காப்பாற்றுவதே தமது கடமையெனக் கொண்டொழுகினர்.

இதைவிடக் கடுமையான மற்றொரு சோதனை 1896-ம் ஆண்டில் "போர்ட்ஸ் மௌத்து' என்னும் இடத்தில் மரக்கறி உணவாளர் மகாநாட்டிற் கலந்து கொள்ளச் சென்றிருந்தபோது ஏற்பட்டது. அங்கே வரவேற்புக் கழகத்தார் வருகின்றவர்கள் தங்க ஒரு வீடு தயார் செய்திருந்தனர். அவ்வீட்டில் இவருந் தங்கினர். அவ்வீட்டிலுள்ள பெண்களில் ஒருத்தி ஒழுங்கீனமான வள். வரவேற்புக் கழகத்தாருக்கு இவ்விஷயம் தெரியாது. முதல் நாள் கூட்டம் முடிந்ததும் இரண்டு நண்பர்கள் சீட்டாடினர்கள். அவ்வாட்டத்தின் மத்தியில் அவ் வொழுங்கீன மாது கலந்துகொண்டு கேலிப்பேச்சுப் பேசத் தொடங்கினள். அடிகளாரும் அவ் விளையாட்டிற் கலந் திருந்தார். பேச்சு வெறுக்கத்தக்க நிலையில் மாறிற்று. சீட்டுக்கட்டை யொருபுறம் வைத்துவிட்டு, அவள் மாய வலையில் விழுந்தருணத்தில் அடிகளார் நண்பரொருவர் "இப் பேயினுக்கு இரையாகாதே! ஓடிப்போ" என்றார். உடனே அடிகளாருக்குத் தாம் தாயினுக்குக் கொடுத் திருந்த வாக்கு நினைவுக்கு வந்தது. உடனே அவிடத்தை விட்டுத் தப்பியோடிவிட்டார்.

அடிகளார் பிரமஞான சபையார் தொடர்பால் பகவத் கீதை படிக்கத் தலைப்பட்டார் அதன் போதனையில் மனத்தைப் பறிகொடுத்தார். ஓய்வு நேரங்களில் கீதை படித்தின்புற்றார். கிறித்தவ அன்ப ரொருவருடைய தொடர்பால் விவிலிய நூலாகிய பைபிளைப் படித்தார். இரண்டையும் நன்றாகப் படித்தார். ஏசுநாதருடைய

"மலைப் பிரசங்கம்" அடிகளார் மனத்தைத் தம்வசப் படுத்தியது. இளமையிற் படித்த குஜராத்திப் பாட்டும் இவர் மனத்தை விட்டுப் போகவில்லை. "வலது கன்னத்தில் அடித்தவனுக்கு இடது கன்னத்தையும் காட்டு" என்ற ஏசுநாதரின் உபதேசம் அவர் மனத்திடை நன்கு பதிந்து இன்பத்தை யளித்தது.

இங்கிலாந்தில் எளிய வாழ்வு வாழ வேண்டு மென்பதை யுணர்ந்து, அடிகளார் தாமாகவே சமைத்துச் சாப்பிட்டார். அதிக நேரம் படித்தார். ஏழெட்டு மைல் தூரம் நடக்கவும் பழகிக் கொண்டார். எளியவர்களிடம் மனங்கலந்து பழகினர். தாம் மேற்கொண்ட காரியத்தை கண்ணுங் கருத்துமாய் ஒன்பதுமாத காலம் ஓய்வின்றி யுழைத்துப் படித்துப் பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் தாய் நாடு 1891-ம் ஆண்டு ஜூன் மீ 12உ வெற்றியுடன் மீண்டார்.

★

# மூன்றுமதிகாரம்

## தாய்நாட்டிற்குத் திரும்பியது

காந்தியடிகள் தமது படிப்பு முடிந்ததும் இந்தியா விற்குத் திரும்பினுர். கப்பலில் ஏடன் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டபின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றியெண்ணிக்கொண்டே வந்தார். கடலில் அலைகள் அதிகமாக அடித்தன. பெரும்புயற் காற்று வீசிற்று. இஃது புறத்தே நிகழ்ந்த செயல். காந்தியடிகளின் அகத்தே பல எண்ண அலைகள் மோதின. கல்வித்துறை முற்றிய பின்னர் மாணவர்கள் உத்தியோகம் பெறு மளவும் கவலையுறுவ தியல்பு.

இங்கிலையில் இந்தியாவிற்குக் காந்தியார் வந்து சேர்ந் தார். அவரது தமையனுர், தம்பியார் வரவெதிர் நோக்கி நின்றுர். வந்ததும் மார்புறத் தழுவி மகிழ்ந்தார். இருவரும் வீடு நோக்கிப் போந்தனர். வீட்டிற்குச் சென்றதும், காந்தியார் தம்மிடம் சத்தியம் பெற்ற தாயா ரைப் பார்க்க விழைந்தார். தாயார் இவர் இங்கிலாந்தில் இருக்கும் போது, விண்ணுலகடைந்து விட்டார். இவ் வவலச் செய்தியைத் தெரிவிக்க மன மிலராய்க் காந்தியார் தமையனுர் வாளா விருந்து விட்டார். இப்பொழுது அறிந்ததும் காந்தியார் மனம் வருந்தினுர். தாம் மூன்று விரதங்களை முறையே காப்பாற்றி வந்தமையைப் பார்த்து மகிழ்வதற்குத் தாயார் இல்லாது போய் விட்டாரே யென்று நினைத்துக் கண்களில் நீர்ததும்ப நின்றுர்.

முற்றத்துறந்த பட்டினத்தடிகளே தமது தாயார் இறந்து போன போது கொள்ளி வைத்து,

"முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
அந்திபக லாச்சிவனை யாதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்"

என்ற பாடலைப் பாடி வருந்துவாரேயாயின் மற்றவர்களைப் பற்றி யென் சொல்லுவது? காந்தியார் ஒருவாறு மனந்தேறினர்.

கொஞ்ச காலம் பம்பாய் நகரில் தமது வக்கீல் தொழிலை நடத்தினர். தமையனரின் செல்வாக்கால் ஓரளவிற்கு வருமானமும் வரப்பெற்றார். ஆனால், வக்கீல் தொழிலுக்கு வேண்டிய சாமர்த்தியம் காந்தியாரிடம் இல்லை. அதாவது வழக்குக் கொண்டுவந்து விடுபவர்களுக்குக் கைக்கூலி கொடுத்தல், வழக்குகளைச் சமயோசிதம் போலக் கற்பனை செய்து கட்சிக்காரர்கட்குப் பாடங் கற்பித்தல், அதையே நீதிபதி முன் ஒப்பிக்கும்படிச் செய்தல்—இவை யெல்லாம் சாதாரணமாக வக்கீல் தொழில் நடத்துகின்றவர்கட்கு இருக்க வேண்டிய பண்புகள். காந்தியாரிடம் இப்பண்புகள் இல்லை. உண்மையான வழக்குகளைத்தான் பெற்று வாதமிடுவார். பொய் யென்று தெரிந்தால் வழக்குகளைப் பெற மறுத்து விடுவார். ஒருகால் அத்தகைய பொய் வழக்குகளைத் தாமறியாமல் பெற்று விட்டால் எந்த நேரத்தில் தெரிந்தாலும் அவற்றை விட்டு விடுவார். அவர் கொண்ட விரதம் பொய் சொல்லாதிருத்தல். ஆகவே பொய் வழக்கினுக்காகப் பாடுபட மறுத்தார்

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்று வள்ளுவர் கொண்ட கருத்தினைத் தமது வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டார் காந்தியார். ஏழைகளின்மேல் எல்லையற்ற கருணை யுடையவர். அவர்கள் வழக்கிற்குப் பணம் வாங்க மறுப்பார். பம்பாய் நகரை விடுத்துச் சிறிது காலம் இராஜ கோட்டையில் வழக்கறிஞர் பணியாற்றினர்.

காந்தியடிகள் இராஜ கோட்டையிலிருந்த போது, தென்னாப்பிரிக்காவிலிருந்து அப்துல்லா சேட்டு என்பவரிடமிருந்து, அடிகளாரின் தமையனுருக்கு ஒரு செய்தி வந்தது. பாரிஸ்டர் காந்தியாரைத் தென்னாப்பிரிக்காவிற்கு அனுப்ப வேண்டு மென்றும், அவர் கான் முகமது என்பவருக்கு எதிராக நின்று நாற்பதினாயிரம் பவுன் வர வேண்டிய வழக்கு ஒன்றை நடத்துவதில், உதவ வேண்டு மென்றும் அச் செய்தியில் கண்டிருந்தது. தென்னாப்பிரிக்காவில் ஓராண்டு தங்கி வழக்கை நடத்திக் கொடுப்பதற்குப் போக்கு வரவு செலவு போகவும், உணவுச் செலவு நீங்கவும், ஊதியம் நூற்றைந்து பவுன் அளிப்பதாகவும் எழுதியிருந்தார் அப்துல்லா சேட்டு. காந்தியார் அதை மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார். 1893-ம் ஆண்டு இந்தியாவினின்று காந்தியடிகள் ஆப்பிரிக்காவிற்குப் புறப்பட்டார்.

அப்துல்லா சேட்டு காந்தியடிகளை வரவேற்பதற்காக நேட்டால் துறை முகத்தில் காத்துக் கொண்டிருந்தார். அடிகள் அங்குப் போய்ச் சேர்ந்தார். அப்துல்லாவும் அன்புடன் வரவேற்றுத் தனது அறைக்குப் பக்கத்தில் ஓர் அறையை யொழித்துக் கொடுத்து அதில் தங்க

வசதியளித்தார். ஆப்பிரிக்காவில் வெள்ளையர் நிற வேற்றுமை பாராட்டி இந்தியர்களை இழிவாக நடத்தி வந்ததைக் காந்தியடிகள் கவனித்தார். அங்கிலையைப் போக்கவேண்டுமென்று மனத்தில் எண்ணினர்.

அப்துல்லா சேட்டு, காந்தியடிகளை டிரான்ஸ்வாலில் நடந்துகொண்டிருந்த வழக்கு சம்பந்தமாக நீதி ஸ்தலத்திற்கு அழைத்துச் சென்றார். இந்தியர்கள் நீதிமன்றத்துக்குள் நுழையும்போதே தமது தலைப்பாகைகளை நீக்கி விட வேண்டுமென்பது விதியாக விருந்தது. இவ்விதியைக் கவனிக்காமல் உள்ளே போனர் காந்தியார். நீதிபதி அவரைப் பார்த்துத் தலைப்பாகையை நீக்கவேண்டுமென்று பணித்தார். காந்தியடிகள் அவ்வாறு செய்ய மறுத்து நீதிமன்றத்தை விட்டு வெளியே போய்விட்டார். இதைப்பற்றி அந்நாட்டுப் பத்திரிகைகள் அடிகளைத் தாக்கி யெழுதின. இதனல் அவர்தம் பெயர் எங்கும் பரவிற்று.

இதற்கு நடுவில், அப்துல்லா சேட்டிற்குப் பிரிட்டோரியாவிலிருந்து செய்தியொன்று வந்தது. வழக்கு சம்பந்தமாக அவரை வரும்படி ஒரு வக்கீல் எழுதியிருந்தார். அப்துல்லா அடிகளாரிடம் வழக்கின் முழு விபரங்களையுஞ் சொல்லி அவரையே பிரிட்டோரியாவிற்கு அனுப்பினர். அவர் அங்கு ஓராண்டிற்குமேல் தங்கினர். அங்குள்ள இந்தியர்களோடு நெருங்கிய தொடர்புகொண்டார். பல கிறித்தவர்களோடு சேர்ந்து பழகினர். விவிலிய நூலை ஐயந்திரிபறக் கற்றார். இந்திய மக்களின் நலங் கருதி ஒரு சங்கத்தை யேற்படுத்தினர். இங்குத்தான் பொதுநலத் தொண்டிற்கு அடிகளாரின் உள்ளத்தில் விதை இறைவனல் போடப்பட்ட தென்னலாம். ஏனெ

னின் அவ்விதைதான் முளைத்து மரமாகிக் காய்த்துப் பழுத்து இந்தியர்களுக்குச் சுதந்தர மென்னுங் கனியை நல்கிய தென்னலாம்.

அங்குப் பல வழக்கறிஞர்களுடன் பழகினர். தாம் மேற்கொண்ட வழக்கு மிகவும் சிக்கலானது. ஆகவே அவ்வழக்கினை மனோராசியின்மேல் சமாதானம் செய்ய விரும்பினர். அவர் எண்ணிய வண்ணமே யரும்பாடு பட்டு "முப்பத்தேழாயிரம் ரூபாயைத் தவணை முறையிலே டயாப்ஜி என்பார் செலுத்தவேண்டும்" என்று முடிவு செய்தார். இருதரத்தாரும் ஒப்புக்கொண்டனர். இரு சாராரும் அடிகளாரைப் போற்றிப் புகழ்ந்தனர். இதற்குப்பின் அவர் டர்பனுக்குத் திரும்பினர்.

அடிகள் தென்னப்பிரிக்காவில் இருபதாண்டுகட்கு மேல் தங்கியிருந்தார். இந்தியாவினின்று தென்னப்பிரிக்காவிற்கு முதன் முதல் சென்றபோது அப்துல்லா சேட்டின் வழக்கைத் தீர்த்துப் பொருளீட்டும் மனப்பான்மையுடன் அங்கு சென்றார். ஆனல் அங்கு சென்றதும் ஆங்கிலேயர்கள், இந்தியச் சகோதரர்களை நடத்தும் இழிவைப் பார்த்து இரத்தங் கொதிக்கப்பெற்றார். அடிகளார் மேடைமீது நின்று பேசும்போது அனைவரையும் "சகோதரர்களே, சகோதரிகளே!" என்று பேசி, பிறகு பேச்சு முடிந்ததும் "அவர் யாரோ, நாம் யாரோ" என்று போய் விடும் பிரபுக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவரல்லர். பாரதத் தாய் ஈன்ற மக்களனைவரிடமும் பரிவுகாட்டினர். அவர் கட்கு மானக்கேடுவந்தால், தமக்கு வந்ததாக எண்ணி மனம் புழுங்குவார்.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்"'

என்பது பொதுமறையன்றோ? இந்தியர் தம் இழிநிலையைப் போக்கவேண்டும். இத்தொண்டிற்கு அடிகளார் தம்மையே கொடுத்துவிட வேண்டுமென்னும் எண்ணத்தை மனத்திடை வைத்துக்கொண்டார். வாழ்க்கையின் குறிக்கோள், "தனக்கென வாழாப் பிறர்க்கென வாழ்வது' என்பதேயாகும். இதனை உறுதியாகப் பிடித்தார். நன்மை கடைப்பிடித்தலில் நமது அடிகளாரைப்போல் நாம் யாரையும் காணமுடியாது. மனவுறுதிப்பாடு உடையவர்கள்.

தவறுகண்டபோது அஞ்சாது நின்றெடுத்துக்காட்டி இடித்துப் புத்தி புகட்டும் பெரியார்.

இயற்கையிலேயே ஒரு நாட்டு மக்களுக்குத் தலைவராக விளங்குதற்குரிய பண்புகளும், இவ்வுலகினுக்கு வழிகாட்டத் தக்கத் தகுதியும் காந்தியடிகளின்பால் அமைந்திருந்தன. தென்னாப்பிரிக்காவில் பெயருக்கு மாத்திரம் வக்கீல் தொழில் நடத்தினர். பொய்கலந்த வழக்குகட்குத் தாம் ஆதரவளிக்க மறுத்தார். வருமானத்தைப் பற்றி வருந்தவில்லை. எளியவர்களிடம் மிகக் குறைவான ஊதியம் பெற்று வழக்காடி வெற்றிகாண்பார்.

ஏழைமக்கள் அடிகளார்பாலுள்ள அன்பினால் அதிகத் தொகையளித்தால் அதைத்திருப்பிக் கொடுத்துவிடுவார். அவ்வெளியார் தம் பிற்காலத்தில் அடிகளாருக் குற்றதுணையாய் விளங்கினர்கள்.

ஒருமுறை ஜோகன்ஸ்பர்க்கு என்னுமிடத்தில், ஒரு வழக்கைப்பெற்று நடத்தினர் நமது காந்தியடிகள். அவ்வழக்கு மிகவுஞ் சிக்கலானது. அதை நடத்திவருங்கால் அதிலுள்ள பொய்யான பாகம் வழக்கறிஞராகிய அடிகட்

குத்தெரிந்தது. உடனே அதனை நீதிபதியிடம் தெரிவித்துவிடவேண்டுமென்றார். இவருடன் இருந்த மற்றொரு வழக்கறிஞர் இஃதை வெளிப்படுத்தினால் "நாமே நமக்கு விலங்கிட்டுக் கொள்ளுதல் போலவாகும்" என்றார். அடிகளார் உண்மையை மறைக்க மனம் ஒருப்பட்டாரில்லை. கட்சிக்காரர்கள் என்ன செய்வதென்று தோன்றாமல் விழித்தார்கள். கடைசியாக, காந்தியடிகளின் இஷ்டப்படி ஏனையர் இணங்கினர். அடிகளார் நீதிபதியிடம் தாம் வழக்கிடைக்கண்ட இழுக்கினை யெடுத்துக் காட்டி, வழக்கைத் தள்ளிவிடும்படிக் கூறினர். நீதிபதி இவர்தம் நடுவு நிலைமையைப் பாராட்டி, நேரிய முறையில் தீர்ப்பளித்தார். நடுவு நிலைமை யென்பது சான்றோர்க் கணியன்றோ? ஆகவே நமது ஒப்பிலாச் சான்றோர் அதனைப் பூண்டார்.

'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

என்று நட்பினுக்கு வள்ளுவர் வகுத்தார் ஓரிலக்கணம். நட்புச் செய்தல் ஒருவரோடு சேர்ந்து சிரிப்பதற்காகவல்ல, அவர் நடுநிலை தவறி யநீதி மார்க்கத்திற் செல்லுங்கால் அவரை யங்ஙனம் செய்ய வொட்டாதபடி இடித்துப் புத்தி புகட்டும் பொருட்டுத்தான் நட்புச் செய்யவேண்டும் என்றார். இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்கியவர் காந்தியடிகள்.

அடிகளாரிடம் மிகுந்த தொடர்புடன் விளங்கினார் "பார்ஸிருஸ்டம்ஜி" என்னும் சீரிய செல்வர். அவர் சிறந்த செல்வமும் செல்வாக்கு முடையவர். நமது அடிகளாரின் பொதுநலத் தொண்டிற்குப் பொருளளித்துதவிய புனிதர். இவர் பலவிடங்களிலிருந்து கொண்டு

வந்த சரக்குகளில், பெரும்பகுதிக்குச் சுங்கம் கட்டாது வந்தார். வரி வசூலிக்கு மிடங்களிலுள்ள அதிகாரிகள் மிகவும் இவருடன் பழகியவர்கள். அதனால் இவர் காட்டும் பட்டியலை யொட்டியே வரி வசூல் செய்து வந்தார்கள்.

"பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்" என்பது போல, ஒரு தடவை ருஸ்டம்ஜி ஒரு அதிகாரியிடம் அகப்பட்டுக்கொண்டார். அதனாலென்ன விளையுமோ வென்றஞ்சி காந்தியடிகளிடஞ் சென்று உள்ளதை யொளிக்காம லெடுத்துக் கூறினார். அடிகள் இதை யறிந்ததும் அவர் செய்த பிழைக்காக அவரைக் கடிந்தார். சுங்கம் வசூலிக்கும் அதிகாரியிடம் குற்றத்தை யொப்புக் கொள்ளுமாறும், அதனால் தண்டனைவரின் ஏற்பதுதான் அத்தவறினுக்குரிய பிராயசித்தமாகும் என்றும் மிக அழுத்தமாகப் புத்திமதி கூறினார்.

ருஸ்டம்ஜியும் காந்தியடிகள் கூறியதை யேற்றுக் கொண்டு அங்ஙனமே சுங்கவரி யதிகாரியிடம், தான் செய்த குற்றத்தை யொப்புக்கொண்டார். அவ்வதிகாரி, ருஸ்டம்ஜியிடமிருந்து வரவேண்டிய தொகைக்கு இரட்டிப்பு மடங்கு அபராதம் விதித்தார். அவரும் அதைக் கொடுத்துவிட்டுப் பிறகு அத்தகைய தவறிழைக்கா திருந்தார்.

காந்தியடிகள் ஆப்பிரிக்காவில் எளிய வாழ்க்கையை மேற்கொண்டொழுகினர். ஆடம்பர வாழ்வினால் பிறர் வருந்துவார்கள் என்றறிந்தார். அதாவது அழுக்காற்றினால் மனம் வருந்துவார் என்பதில்லை. அவருடைய தத்துவம் என்னவென்றால் இவ்வுலகமே ஒரு குடும்பம். இதன் தலைவன் ஆண்டவன். இவ்வுலகிலுள்ள மக்க

ளனைவரும் அவனது பிள்ளைகள். இப்பிள்ளைகளிடமுள்ள செல்வமனைத்தும் இறைவன் தந்த செல்வம். ஒரு சிலரிடம் அதிகச் செல்வம் கிடைத்துவிட்டது. பெரும் பாலோரிடம் செல்வம் கிடைக்காமல் வறுமையடைந்துளார். ஆகவே, செல்வர்கள் தாம் பெற்ற செல்வத்தினால் இன்பக்களியாட்டிலிறுமாந்து, வானளாவப் புகைச் சுருட்டால் புகை விடுத்துத் திரிய வொண்ணது. இவர் மாத்திரம் அஞ்சு வேளையுண்டு அஜீரண ரோகத்திற்காளாகக்கூடாது. ஏனையர் பிடியன்னமின்றி பசிப்பிணியால் வதங்கக் கூடாது. செல்வர்கள் ஏழையர்தம் முகங்கண்டிரங்கி ஆவன செய்யவேண்டும். அவ்வாறு உதவுவதற்கு எளிய வாழ்வு வாழ்ந்தாற்றான் எஞ்சிய பொருள்களை ஏழையர்க் களிக்க முடியும். அங்ஙனம் உதவக்கூடிய அறிவும் இரக்கமும் ஏற்படும் என்று கருதினர். ஒரு குடும்பத்தில் ஐந்து சகோதரர்கள் பஞ்சவர்போல் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். பஞ்சவரில் ஒருவன் கல்வி கற்றும் பெரிய நிலையில் மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிப்பதாக வைத்துக் கொள்ளுவோம். ஏனையர் கல்வியறிவில்லாமையாலும், பிதிராச்சித சொத்து இன்மையாலும் வறுமையால் வாடுவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது மாதமாயிரம் வேதனமாகப் பெற்று வாழும் சகோதரன் தனது ஆடம்பரச் செலவைக் குறைத்துக் கொண்டாற்றான், அவனது ஏனைய சகோதரர்கட்குதவ முடியும். அங்ஙனமின்றி ஆயிரம் போதாமல் ஆயிரம் கடன்வாங்கி ஆடுவதும் பாடுவதுமாக வாழ்க்கையை நடத்துவானேயாகில் அவன் எங்ஙனம் ஏனைய சகோதரர்களுக் குதவமுடியும்? இக்குடும்பத்தின் உதாரணத்தை வைத்துக்கொண்டு உலகத்தைப் பார்த்தால்

நமக்கு அடிகளாரின் வாழ்க்கைத் தத்துவம் விளங்கும். செல்வத்திற்கு நம்மைப் பாதுகாவலாளியாகப் பரமன் படைத்துள்ளான். அதனைத் துர்விநியோகஞ் செய்ய நமக்குரிமையில்லை. செல்வத்தை நமக்களித்த ஆண்டவன் கருத்து, அதைக் கொண்டு ஏழையருக்குதவ வேண்டும் என்பதாகும்.

அடிகளார் எளிய வாழ்க்கை நடத்தியதற்குரிய காரணம் நன்கு தெரிந்தாற்றான் நாமும் அங்ஙனம் வாழ முடியும். அதிகமான செல்வத்தைச் சேர்த்து வைப்பவனைத் திருடன் என்று அடிகள் கருதினர். ஏனையருக்குப் போய்ச் சேரும் பணத்தை இவர் ஓரிடத்திற் சேமித்து வைப்பதால் அப்பணத்தாலடைய வேண்டிய நன்மைகளை ஏழையர்கள் அடையாது போகின்றனர். அவர் தமக்கும் உரிமையுண்டல்லவா? அதிகமாக வுண்பவன் பிறரைப் பட்டினி போடுகின்றான் என்பர் அடிகள். ஏனெனின் அன்றன்றைக்குரிய வுணவை யளந்து ஆண்டவன் அளிக்கின்றான். அவ்வுணவைப் பங்கீட்டுப்படி யுண்டால் எல்லாருக்கும் உணவு கிடைக்கும். ஒரு மகோதரன் நிறைய வுண்டுவிட்டால், பலர் பட்டினி கிடக்க நேரும் என்பது காந்தியடிகள் கண்ட வுண்மையாகும்.

" சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல் "

என்றது பொய்யா மொழி. பிறர்க் குபதேசம் மலையளவு செய்பவர்கள், தினையளவு நடந்து காட்டினால் அவர்கள் நம் பாராட்டிற் குரியவர்களே. அத்தகையோர் மிகக் குறைவு. நமது காந்தியடிகள் பேசுவது தினையளவேனும் பனையளவாக நடந்து காட்டுவார். அடிகளார் சொல்வீரரல்லர்; கரும வீரர். அதிலும் நிஷ்காமிய விரதம் பூண்டவர்.

ஒருமுறை தென்னப்பிரிக்காவினின்று அடிகளார் தாய்நாடு திரும்பியபோது இவர்பால் அன்பு பூண்டவர்கள் பல பரிசுகள் வழங்கினர். ஐம்பது கினி பெறத்தக்க மாலை யொன்று அடிகளாரின் மனைவியாருக் களிக்கப்பட்டது. அப்பரிசினைப் பெற விரும்பவில்லை. எனினும் அன்பர் கள் மனம் புண்ணடையச் செய்ய விரும்பாதவராய்ப் பரிசு பெற்றார். பரிசு பெற்ற இரவு எண்ணாத எண்ணமெல் லாம் எண்ணினர். "இப்பரிசுகள் பெற்றதால் யான் செய்த தொண்டுகள் பயன் கருதிச் செய்தனவாக அல் லவா முடியும்?" என்று எண்ணி யேங்கினர். மனைவி மக் களுடன் கலந்து அப்பரிசில்களனைத்தும் அறத்திற்காக வொதுக்கி வைத்து விட்டார்.

★

## நான்காம் அதிகாரம்

# தென்னுப்பிரிக்காவில் அடிகளார் ஆற்றிய தொண்டு.

---

**கா**ந்தியடிகள் தென்னுப்பிரிக்காவுக்குச் சென்ற போது அவருக்கிருந்த கருத்துவேறு. ஓரளவுக்குப் பணம் சம்பாதிக்கவும், தாம் படித்துவந்த சட்டப் படிப்புக்கு ஒரு பிரயோசனத்தையும் தேட வெண்ணினுர். ஆனல் தன் னலங் கருதிச் சென்ற அடிகள் நெஞ்சில் அருள் பூத்தது. அவருள்ளத்தில் அன்பு கனிந்தது. அது பழுத்து அரு ளாக மாறிற்று. தென்னுப்பிரிக்காவின் சூழ்நிலை இவர் தம் தொண்டினை யெதிர்பார்த்தது. ஆண்டவன் அடிக ளாரை அன்பர் பணிக்கு ஆளாக்கி விட்டான் என்று கூற லாம். "ஆட்டு வித்தால் ஆரொருவர் ஆடாதாரே, அடக்கு வித்தால் ஆரொருவர் அடங்காதாரே?" என்பது நமது ஆளுடைய அரசின் அருமைத் திருவாக்கன்றோ?

தென்னுப்பிரிக்காவில் குடியேறி அங்கு கூலிவேலை செய்த இந்தியன் முதல் பெரிய வேலையில் வாழ்ந்த இந்தி யன் வரையில் எல்லாரும் " இந்தியக் கருப்பர்கள்" என்று கருதப்பட்டனர். வெள்ளையர் நிறத்திமிரால் இவர்களை விலங்கினும் இழிவாக நடத்தினர். இந்தியாவில் சாதி சமய வேறுபாடு இருக்கிறதென்று குறைகாணும் வெள் ளையர்கள் தாங்கள் வெண்மை நிறத்தால் உயர்ந்தவர்க ளென்றும், இந்தியர்கள் கருநிறம் படைத்தவர்களாத லால் இழிந்தவரென்றும் எண்ணுவது நீதியோ? "ஒன்றே

குலமும் ஒருவனே தேவன்" என்று கூறிய திருமூலர் அவதரித்த நாடு இந்திய நாடு தானே. சாதி யிரண் டொழிய வேறில்லை யென்றும், அவ்விரண்டு சாதிகளும் எவையெனின், இரப்போர்க்கு இட்டார் பெரியோர் என் றும், இடாதார் இழிகுலத்தோரென்றும் அறவுரை பகர்ந்த ஔவையார் பிறந்த நாடும் இந்நாடே. ஆகவே நமது அடிகள்பால் ஆன்மநேய ஒருமைப் பாட்டுணர்ச்சி நின்று ஊற்றெழுந்து ஓடியது வியப்பன்று.

நேட்டால் நீதிஸ்தலத்தில் சட்டைமுதலியன மாட்டி வைக்கும் சட்டை தாங்கி அல்லது தலைப்பாகை தாங்கி யில். அடிகளார் தமது தலைப்பாகையை மாட்டி வைத்து உட்சென்றார். அத்தலைப்பாகை தாங்கியை வெள்ளையர்கள் தாம் உபயோகிக்கலாமென்றும் அதில் இவர் மாட்டியது தவறென்றும் அடிகளாரது தலைப்பாகையை யெடுத்து விடுமாறு கட்டளை யிட்டான் ஒரு வேலையாள். இதைக் கண்டு அடிகளார் "என்னே இந்தியர்தம் இழிநிலை" என்று நெஞ்சம் வருந்தினர்.

நேட்டாலிலிருந்து பிரிட்டோரியாவுக்கு வழக்கினிமித் தம், முதல் வகுப்புப் பிரயாணச் சீட்டு வாங்கிக்கொண்டு இரயிலில் இரவில் பிரயாணம் செய்தார். நடுவழியில் நள் ளிரவில் சில வெள்ளையர்கள் முதல் வகுப்பினில் இடந் தேடி வந்துகொண் டிருந்தவர்கள் நமது காந்தியடிகளைக் கண்ணுற்றார்கள். அவர் ஒரு வழக்கறிஞர். ஒரு பாரிஸ் டர் என்று எண்ணினார்கள் இல்லை. அவரைக் "கூலி பாரிஸ்டர்" என்று எண்ணி யிருந்தனராகையால், அவரை முதல் வகுப்பினின்றும் இறங்குமாறு பணித்தனர். அடி கள் இறங்க மறுத்தார். பின்னர் அவ்வெள்ளையர்கள் போலீஸார் உதவிகொண்டு அடிகளைக் கீழே இறக்கி

விட்டுப் போய்விட்டனர். என்னே! அவர்தம் நிறத் திமிர்! என்னே! அவர்தம் இரக்கமற்ற தன்மை!

அடிகள் பனியால் நனைந்து குளிரால் வருந்தினர். அவர் பட்டபாடு ஆரறிவார்; ஆண்டவன் தானறிவான். அன்றிரவு அங்குத் தங்கியிருந்து மறுநாட் காலையில் ஒரு குதிரை வண்டியில் "ஜோஹன்ஸ்பர்க்கு" என்னும் இடத்திற்குப் போகத் துணிந்தார். அவ் வண்டியிற்கூட அடிகளையுள்ளே யுட்காரக் கூடாதென்று தடுத்தான் அவ் வண்டியின் சொந்தக்காரன். வண்டியோட்டுகின்றவன் பக்கத்தில் இருக்கும்படிக் கட்டளையிட்டான். அங்ஙனமே அடிகள் அமர்ந்தார். ஆனால் வண்டியோட்டுபவனுக்குப் புகைச் சுருட்டுக் குடிக்க அசௌகரியமாயிருக்கின்றதெனை, அவரை மிதிபடியில் உட்காரும்படிச் சொன்னான். அடிகளார் அதனை மறுத்தார். அதனால் அவன் அவரைக் குப்புறத் தள்ளினான். அடிகள் நல்லவேளையாகக் கம்பியைப் பிடித்துக் கொண்டார். இரக்கமற்ற வெள்ளையரிருவர்கூட அவர்பால் இரக்கங் காட்டினர்.

இந் நிலையில் நடத்தப்பெறும் இந்தியர்களின் உரிமையைப் பறிக்க ஒரு மசோதா நேட்டால் சர்க்கார் கொணர்ந்தது. அம்மசோதா நிறைவேறி விட்டால் சிறிதளவு இருந்து வரும் உரிமையும் போய்விடும். பிறப்புரிமையையிழக்கக் கூடிய சீட்டுக்களில் விரற் குறிகளையும், பெயர்களையும் பொறித்தாற்றான் அங்கு வாழ முடியும். இன்றேல் வாழ முடியாது என்ற நிலைக்கு அம்மசோதா கொண்டு வந்துவிடும் என்பதை யுணர்ந்த காந்தியடிகள் அதையெதிர்த்துப் போராட எண்ணினார்; கிளர்ச்சி செய்தார். பதினாயிரங் கையெழுத்துக்களைப் பெற்று ஒரு சிறந்த மகஜர் தயார் செய்து, இங்கிலாந்தில் குடியேற்ற நாட்டு

மந்திரியாக விளங்கிய ரிப்பன் பிரபுவுக்கு அனுப்பினுர். ஆனுல் அடிகளாரின் முயற்சி பலனளிக்கவில்லே. மசோதா நிறைவேறி விட்டது. இக் கிளர்ச்சியின் பயனுல் இந்தியர்கள் ஒன்றுபட்டனர். அடிகள் "நேட்டால் இந்தியன் காங்கிரஸ்" என்றதொரு சிறந்த சபையை ஏற்படுத்தினுர்.

1896-ம் ஆண்டு அடிகளார் இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்தார். இந்தியாவிலுள்ள பெரியோர்களிடம் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் படும்பாட்டை யெடுத்தியம்பினர். இதைப்பற்றிப் பலவிடங்களிற் பிரசாரம் செய்தார். அப்பொழுது விளங்கிய பாலகங்காதர திலகர், கோபால கிருஷ்ண கோகலே, முதலியவர்களிடம் கூறி யோசனேயும் கேட்டார். இந்தியாவில் காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவின் இந்தியர்கள் நலங் கருதிப் பாடுபடுவதை சிறிது திரித்து தென்னுப்பிரிக்காவிலுள்ள வெள்ளேயர்களேத் தாக்கிப் பிரசாரம் செய்வதாக "இராய்ட்டர் தந்தி நிலேயம்" மிகுத்துக் கூறிவிட்டது. அதனுல் ஆப்பிரிக்காவில் இருந்த ஆங்கிலேயர்கள், அடிகளார்பால் அருவெறுப்புக் கொண்டனர். ஆப்பிரிக்காவிற்கு வரவொட்டாது தடுக்க எண்ணினர். வந்தால் அடிகளே யடித்துத் துன்புறுத்தவும் தீர்மானித்தனர். ஆங்கிலேயர்கள் இந்தியர்களே அடிமைகளாய் எண்ணி அவமானப் படுத்துவதில் அவர்கட்கு அருவெறுப்பில்லே. இதை யெடுத்துக் கூறியதில் அவர்கட்கு இரத்தம் கொதித்தது. குற்றம் செய்தலில் மகிழ்ச்சி பொங்குகின்றது. குற்றத்தை யெடுத்து வெளியிட்டால், ஆத்திரம் பொங்குகின்றது. இஃதுலக வியற்கை. "உள்ளதைச் சொன்னுல் உடம்பெரிச்சல்" என்ற பழமொழியும் இத்தகைய மக்களேக் கருதியே எழுந்தது போலும்.

காந்தியடிகள் இந்தியாவில் ஆறுமாதங்கூடத் தங்க வில்லை. ஆப்பிரிக்கா நோக்கிப் புறப்பட்டார். "குர்லாண்டு" என்னும் கப்பலிற் புறப்பட்டுத் தென்னாப்பிரிக்காவிற்கு மீண்டும் காந்தியடிகள் தம் மனைவி மக்களுடன் வருவ தறிந்த வெள்ளையர் பலவித சூழ்ச்சிகள் புரிந்தனர். 1896-ம் ஆண்டில் இந்தியாவில் "பிளேக்கு" என்னும் கொள்ளை நோய் பரவியிருந்த காரணத்தினால், அங்கிருந்து இந்தியர் கள் தென்னாப்பிரிக்காவுக்குள் நுழைய வொண்ணாது என்று கூறினார்கள். கப்பல் "டர்பன்" துறைமுகம் போய்ச் சேர்ந்ததும், வெள்ளையர் தம் மனக்கொதிப்பை யுணர்ந்த ஒரு அதிகாரி அடிகளைக் கப்பலினின்றும் கீழி றங்க வொட்டாதபடிச் செய்தார்.

அடிகளார் தம் மனைவி மக்களை மாத்திரம் தமது நண் பராகிய "ருஸ்டம் ஜி" யவர்கள் வீட்டிற்கு அனுப்பிவிட் டார். மறுநாள் காந்தியடிகள் கப்பலினின்றும் கீழிறங்கி வருவதைப் பார்த்த வன்னெஞ்சர் "காந்தி! காந்தி" என்று கத்தி அவர்மேல் முட்டை ஓடுகளை வீசி யடித்த னர். பிடித்துக்கொண்டு நையப் புடைத்தார்கள்; மிதித் தார்கள்; பலவாறு துன்புறுத்தினர். அப்பொழுதுதான் அடிகளார்தம் பற்களிலிரண்டு கீழே விழுந்துவிட்டன.

அதன் பிறகு அடிகளை ஆஸ்பத்திரியிற் கொண்டு சேர்த்து சிகிச்சை செய்து குணப்படுத்தினர் அவர் நண் பர்கள். காலஞ் சென்ற சேம்பர்லேன் பிரபு அடிகளை யடித்தவர்கள் மீது வழக்குத் தொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். இந்தியர்கள் திரண்டு வந்து அடித்துத் துன்புறுத்தியவர்கள் இன்னாரென்று கூறினால் அவர் களைப் பழிக்குப்பழி வாங்குவதாகச் சொன்னார்கள். நமது சாந்த மூர்த்தியவர்கள் ஏசுநாதர் சிலுவையி லறையபட்ட

ஞான்றும் "பரமபிதாவே! இத் துன்பத்தைச் செய்கின்றவர்கள் அறியாமையாற் செய்கின்றனர். அவர்களை மன்னியுங்கள்" என்றது போலவே, காந்தியடிகளும் அடித்தவர்களை மன்னித்து விடும்படிக் கூறினர்.

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

என்று வள்ளுவர் கூறியவண்ணம் நமது வடநாட்டு வள்ளுவராகிய காந்தியடிகள் பொன்றாத புகழ்பெற்றார்.

காந்தியடிகள் இந்தியர்கள் நன்மதிப்பினைத் தம் முழைப்பால் பெற்றார். 1896-ம் ஆண்டு போயர் யுத்தம் மூண்டது. அந்தப்போரில் ஆங்கிலேயர்கட்குப் பாங்குடன் உதவ முன்வந்தார் அடிகளார்.

"இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்ற வள்ளுவர் வாய்மொழிப்படி, தீங்குசெய்து துன்புறுத்திய வெள்ளையர்கட்கும் காந்தியடிகள் இந்தியர் தம் இணையற்ற தலைவர் என்ற முறையில் உதவியளித்தார். இந்திய வைத்தியப்படையென்று ஒன்று அமைத்துக் கொண்டு அதன் தலைவராய்ப் போர்க்களஞ் சென்று காயப்பட்டவர்கட்குச் சிகிச்சைசெய்து உதவினர். புண்பட்டவர்களைச் சுமந்து ஏழெட்டு மைல் தூரம் சென்றார்கள்.

1904-ம் ஆண்டில் ஜொகன்ஸ்பர்க்கு என்னுமிடத்தில் பிளேக்கு என்னும் கொள்ளைநோய் ஏற்பட்டது. பல மக்கள் அந்நோய்க் கிரையாகினர். அடிகள் அந்நோய் நீக்கும் பணியை மேற்கொண்டுழைத்தனர். டாக்டர் பூத்து என்பவரது மருத்துவசாலைக்குச் சென்று, நோயாளிகட்கு

இலவசமாக மருந்துகொடுக்கும் பணி மேற்கொண்டார். ஒரு தடவை முடவனான குஷ்ட நோயாளி ஒருவன் தம்மிடம் வந்தான். அவனை யடிகள் தம்மறையில் வைத்துக் கொண்டு புண்ணைக்கழுவி மருந்திட்டு உதவிசெய்தார். இத்தகைய பொதுநலத் தொண்டில் ஈடுபட்ட காந்தியடிகள் தமையனுருக்கொரு கடிதம் வரைந்தார். அதில் அவர் குறிப்பிட்டதாவது:- "இதுகாறும் ஈட்டியதில் எஞ்சியதை உங்கட்கு அனுப்புகின்றேன். இனிமேல் என் வருவாயெல்லாம் நாட்டின் பொது நலத்திற்கென்றே செலவழிக்கத் தீர்மானித்துளேன்" என்பதாகும்.

அடிகள் ஆப்பிரிக்காவில் தமது மனைவி மக்களுடன் வாழ்ந்தபோது நடந்த நிகழ்ச்சி இவண் குறிக்கத்தக்கது. அடிகள் இளமையிலிருந்தே தீண்டாமையை வெறுத்து வந்தார். இந்துமதத்திற்கு இஃதொரு கறையென்பர். அத் தீண்டாமையை யொழிக்கத் தம்மால் ஆனவரை பாடுபடக் கங்கணங் கட்டிக்கொண்டார். ஒருநாள் அடிகள் வீட்டில் ஒரு "ஹரிஜன்" வந்திருந்தார். அவர்கள் வீட்டில் சாதாரண பீங்கான் வைக்கப்பெற்ற கக்கூசு இருந்தது. அந்தத் தீண்டாதார் மலஜலத்தை அடிகள் தம் மனைவியராகிய கஸ்தூரிபாயை யெடுக்கச் சொன்னார். அக்காலத்தில் அன்னை கஸ்தூரிபாய் அடிகளைப்போன்ற பக்குவம் இல்லாதவர்களா யிருந்தமையால், அச்செயலை மகிழ்ச்சியுடன் செய்யாமல் சிறிது வருந்திய மனத்துடன் செய்தார்கள். அதைப் பொறுக்காமல் அடிகள் தம் மனைவியாரை நன்ருகப் புடைத்து வெளியில் தள்ளி விட்டார்.

அன்னை கஸ்தூரிபாய் மிகவும் தைரியம் வாய்ந்தவர். தம் கணவனுரைப் பார்த்து "உங்கட்கு அறிவில்லையா?

வெட்கமில்லையா? நீங்கள் உங்களையே மறந்துவிட்டீர்களா? நான் எங்கேபோவது? எனக்குப் புகலிடம் இவ்வூரில் தங்களைத் தவிர வேறுயாருண்டு! என் பெற்றோர்கள் இருக்கின்றனரா? உற்றார்தாம் உண்டா? இப்படிப்பட்ட காட்சியை வேறு யாராவது பார்த்துவிடப் போகின்றார்கள். கதவை மூடுங்கள்" என்று கடிந்து கொண்டார். அடிகளும் தாம் செய்தது தவறெனவுணர்ந்து கழிவிரக்கங் கொண்டார். தாம் எதையுபதேசித்தாலும், அதைத் தம் செயலிற்காட்டிய உத்தமர்.

அடிகட்கு மிகவும் பிரியமான நூல் பகவத்கீதை, விவிலிய நூல், இரஸ்கின் எழுதிய "இந்த முடிவுக்கு" என்னும் நூல் முதலியவையாகும். அடிகள் உழைப்பைப் பெரிதும் போற்றினார். உழவுத் தொழிலையும் நெசவுத் தொழிலையும் சிறந்ததென எண்ணினர். உழவுக்கும் நெசவுத் தொழிலுக்கும் உயர்வளித்தார். வீணில் உண்டுகளித்திருப்போரை வெறுத்தார். இரஷ்யாவின் பெரியாராகிய டால்ஸ்டாய் அடிகளைப் பாராட்டினர்.

1904-ம் ஆண்டில் "இந்தியர் அபிப்பிராயம்" என்னும் வாரப்பத்திரிகைக்கு ஆசிரியரானார். இந்தியர் நலங்கருதி புலனடக்கம், உணவு முதலிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். 1906-ல் "ஜுலுகலகம்" ஆப்பிரிக்காவில் ஏற்பட்டது அதற்கும் அடிகள் ஆங்கிலேயருக்கு உதவினார். அவரது சேவையைப் பாராட்டி அவருக்கு "சார்ஜண்டு மேஜர்" என்னும் பதவியை அரசாங்கம் அளித்தது. அந்தக் கலகத்தில் ஈடுபட்டுதவிய ஞான்று, அடிகள் பிரமசரிய விரதத்தைப்பற்றி நினைத்தார். பொது நலத் தொண்டாற்ற முன்வருபவர்கள் பிரமசரியம் மேற்கொண்டாற்றான் அவர்தம் தொண்டு சிறக்கும் என எண்ணினார். அவருக்கு அப்போது வயது முப்பத்தொன்

பதிருக்கும். அந்த எண்ணம் உதித்தபோதே யதை மேற்கொண்டார்.

1906-ம் ஆண்டில் ஆப்பிரிக்கா சர்க்கார் "ஆசிய மக்கள பதிவுச் சட்டம்" என்னும் ஒரு சட்டத்தைக்கொணர்ந்தது. அதன்படி இந்தியர்களனைவரும் கைதிகளைப் போலப் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். பதிவு செய்து கொள்ளாதவர்கள், குடியிருப்பு உரிமையை யிழப்பார்கள்.

இச்சட்டத்தைப்பற்றி யறிந்த இந்தியர் மனங் கொதித்தனர். அடிகள் சத்தியாக்கிரகம் என்னும் சாத்துவீசப் போரைத் தொடங்கினர். அச்சட்டத்தை மீறிச் சிறை சென்றார். இந்தியர்கள் பலர் அடிகளைப் பின்பற்றிச் சிறைபுக்கனர். ஆசியமக்கள் பதிவுச் சட்டத்தின் பல கொடிய விதிகளை இந்தியர் தலைமேற் சுமத்தினர் இங்கிலீஷ்காரர். இந்தியர்கள் செய்துள்ள திருமணங்கள் யாவும் மாறுபட்டவை என்று சட்டம் ஏற்பட்டது. இந்தியக்கூலிகள் ஒப்பந்தக் காலத்திறகுமேல் அங்கு வாழ விரும்பினால், ஆளுக்கு மூன்று பவுன் செலுத்தவேண்டுமென்னும் விதியும் ஏற்பட்டது.

இந்தச் சத்தியாக்கிரகப் போரில் அன்னை கஸ்தூரி பாயும் பங்கு கொண்டார். அவர் தலைமையில் பல பெண் மணிகள் சத்தியாக்கிரகஞ் செய்தனர். கொழுநன் வழி நிற்பதுதானே குலக்கொடி மடவார்தஞ் செயலாகும்.

இங்ஙனம் அறப்போர் புரிந்த அண்ணலார் வெற்றி பெற்றார். அநீதிச் சட்டங்கள் ஒழிந்தன. இந்தியர் மதிப்பு அடைந்தனர். தென்னாப்பிரிக்காவில் நடத்திய போராட்டத்தின் அனுபவம் அடிகளுக்கு இந்தியாவில் மிகவும் பயன்பட்டது.

★

# ஐந்தாமதிகாரம்

## காந்தியடிகளும் தாய்நாட்டுச் சுதந்தரப் போரும்

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வதிந்த இந்தியர்கள் தலை நிமிர்ந்து ஏனைய சாதியினரோடு சம வுரிமையுடன் வாழ்வதற்கு வழி கோலினார். அவண் பாடுபட்டதின் பலனாக அவர் "மகாத்மா" என்னும் பட்டம் பெற்றார். ஆனால் அடிகள் அப் பட்டத்தை விரும்பவில்லை. தாம் சாதாரண மனிதன்; தவறும் இயல்பினன் என்று கூறிக்கொள்வார். தாய்நாட்டிற்குத் திரும்பவேண்டுமென்று விரும்பினார். இவ் விருப்பத்திற்கு விதை யிட்டவர் கோபாலகிருஷ்ண கோகலே யென்பவர். தென்னாப்பிரிக்காவில் அடிகளார் தொண்டாற்றி வந்த போது கோகலே காந்தியடிகளிடம் இந்திய நாட்டின் அடிமைத் தளையை நீக்கவேண்டுமென்னும் குறிப்புப் படப் பேசினார். அது முதல் காந்தியடிகள் தாம் பிறந்த நாட்டிற்குச் சிறந்த தொண்டாற்ற விழைந்தார். ஆகவே 1914-ம் ஆண்டில் ஆப்பிரிக்காவை விட்டு, மனைவி மக்களுடன் இங்கிலாந்து வழியாகத் தாய்நாட்டிற்கு 1915-ல் வந்து சேர்ந்தார்.

இந்தியாவில் "இந்தியக் காங்கிரசு" என்ற ஒரு சபை வேலை செய்து வந்தது. அது தேசியச் சபையாகும். அச் சங்கத்தின் உழைப்பால் நாம் இன்று சுதந்தரம் அடைந்துள்ளோம். இதனைக் கண்டார் அடிகள். இந்தப்

பேரவை முதலில் சில பிற்போக்கான மிதவாதிகளடங்கிய கூட்டமாக விருந்தது. அரசாங்கத்தாருக்கு மனுப் போடுவது, நாட்டின் பல பாகங்களில் பிரசங்கம் புரிவது, அதிகாரிகளைப் பேட்டி காண்பது ஆகிய இச் செயல்களையே நாட்டின் விடுதலைக்குரிய வழிகளாகக் கொண்டிருந்தது காங்கிரஸ் சபை.

அடிகள் இந்தப் பேரவையின் போக்கை மாற்றினார். நாட்டுப் பணியாற்றும் கழகமாக மாற்ற விரும்பி, உண்மை, அகிம்சை, அன்பு, தேசாபிமானம், பாஷாபிமானம் முதலிய நற்பண்புகளை இச் சங்கத்தில் புகுத்தினர். எளிய வாழ்வினை மேற்கொண்ட காந்தியடிகளைப் பின்பற்றிய தொண்டர்களும் எளிய வாழ்க்கையைக் கடைப் பிடித்தனர். ஆங்கில நாட்டாரின் நடையுடை பாவனையைப் பின்பற்றி யொழுகி வந்த பல படித்த இந்தியர்கள் அடிகளாரின் தூய சுதேச வாழ்க்கைதான் நலம் பயக்குமென்பது கண்டு அதைக் கடைப்பிடித்தனர்.

கற்றவண்ணம் பேசுவதும், பேசியவண்ணம் நடந்து காட்டுவதும் தலைமை பூண விரும்புகின்றவர்கட்கு இன்றியமையாத பண்பாகும். சொல் வேறு மன்னுதொழில் வேறு என்பார் தொடர்பைக் கனவிலும் மக்கள் கருத மாட்டார்கள். கற்றுப் பிறர்க் குரைத்துத் தாம் அவ்வழி நிற்காவிடில் அவர்தம் வெற்றுரைக்கு வலி யுண்டாகுமா? அவர்களை அகிலம் பின்பற்றுமா? ஒருவேளை பின்பற்றினாலும் சில காலந்தான் பின் பற்றும். பின்னர் அன்னாரை விட்டொழித்து நீங்குமென்பது, நாம் கண்ட வுண்மையாகும்.

அடிகளார் இந்தியாவிற்குத் திரும்பும்போதே உலகப் பெரும் போர் மூண்டு விட்டது. இப்பெரும் போரில்

இங்கிலாந்தும் சிக்கி யுழன்றது. இந்த ஆபத்து வேளை யில் இங்கிலாந்திற்கு உதவிபுரிய வேண்டுமென்று அடிகளார் கூறி, கெய்ரா முதலான விடங்களினின்றும் படைக்கு ஆள் திரட்டியனுப்பி யுதவினர். அச் சேவை யைப் பாராட்டி, அடிகளாருக்கு "கேசரி இந்து" பதக்கத் தினை அரசியலார் சார்பில் வைசிராய் அளித்தார். தாய் நாட்டின் விடுதலை கருதி, ஆங்கிலேயருக்குதவி புரிந்தார். 1914-ம் ஆண்டு முதல் 1918-ம் ஆண்டு வரையில் நடந்த உலகப் பெரும்போரில் வெள்ளையர் வீறுடன் வாகை சூடுவதற்கு அடிகளார், ஒல்லும் வகையால், பொருளா லும், சொல்லாலும், படைக்கு ஆட்களாலும் உதவி புரிந்தார்.

1919-ம் ஆண்டில் ஆங்கிலேயர் நமது மாபெருந் தலைவர் காந்தியடிகள் செய்த பேருதவிக்குப் பதிலாகப் பாஞ்சாலத்தில் நிரபராதியர்களாய் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் முன்னெச்சரிக்கையின்றிச் சுட்டுக்கொன் றனர். இதனைப் படுகொலை யென்பர்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற பொய்யாமொழிப்புலவர் வாக்குப் பொய்க்குமா? இத் தகைய நன்றி கெட்ட செயலால் வெள்ளையர் நாட்டை விட்டு வெளியேறினர். காந்தியடிகள் காலத்தாற் செய்த பேருபகாரத்திற்குப் பொல்லாத அரக்கன் டையர் என் பான் பாஞ்சாலப் படுகொலை நடத்தினன். போர் நிகழு முன், அறவோர், பசு, பிணியுடையோர், பெண்டிர், புதல் வர்ப் பெறாதோர் முதலியவர்களைக் கூவி அவர்கள் பாது காவலான இடத்திற்குப் போகுமாறு பறை சாற்றுவது

அரசநீதி. இஃது அறப்போர். பாஞ்சாலத்தில் மக்கள் கூட்டங்கூடி விரிவுரைகள் கேட்டின்புற்றிருந்தனர். சதி செய்யவில்லை. அவர்கள்மேல் வீரத்தைக் காட்டினான் ஒரு வெள்ளையன். இக் கொடுஞ் செயலைக் கண்டித்தனரா ஏனைய வெள்ளையர்? இல்லை, இல்லை. மறவடிவாய்த் திகழ்ந்த டையருக்குத் தங்கவாள் பரிசளித்துப் பாராட்டினர் பாராளு மன்றத்தினர்.

அடிகளார் இவ்வநீதிச் செயலைக் கேட்டு ஏழுநாள் கண்ணீருகுத்தார். மண்ணும் அழுதது, மரமும் கலங்கிற்று. நாடெங்கும் கண்டனக் கூட்டம் போட்டு டையர் செய்ததைக் கண்டித்தனர் மக்கள். பிரிட்டிஷாரிடம் வைத்திருந்த நம்பிக்கையை அடிகளார் இழந்தார். நாட்டின் விடுதலைக்கு "ஒத்துழையாமை ஒன்றே வழி" என்று தீர்மானித்தார்.

ஒத்துழையாமை இயக்கத்தை அறவழியில் நடத்த வேண்டுமென்று உறுதி கொண்டார். உண்மையை முதலாவதாகக் கொண்டார். அமைதி, பணிவு, அன்பு, தீச்செயல் விடுதல், பிறரிடம் பகைமை கொள்ளாமை முதலிய நற்பண்புகளை வற்புறுத்தினர். இவற்றையுபதேசிக்க சபர்மதியில் ஓர் ஆச்சிரமம் அடிகள் ஏற்படுத்தினர்!

இவ்வாச்சிரமம் 1915-ம் ஆண்டில் அடிகள் நிறுவினர். கோகலேயவர்கள் இதை நிறுவுவதற்கு ஆதரவு அளித்தார். முதலில் ஆமதாபாத்தில் நிறுவ எண்ணினர் அடிகள். அங்கு முடியாது போயிற்று. சபர்மதி இதற்குப் பொருத்தமான இடமெனக் கண்டதால் அங்கேயே ஆச்சிரமம் நாட்டத் தீர்மானித்தார். அவ்வாச்சிரமத்தில் பதின்மூன்று தமிழர்கள் இருந்து பயிற்சி பெற்று வந்தனர். தாய்நாட்டின் தொண்டுக்குரிய பயிற்சியளிக்கப்பட்டது.

அங்கே தீண்டாதாரும் சேர்க்கப் பட்டனர். இராட்டினம் செய்தல், நூல் நூற்றல், நாட்டைப் பற்றிய கல்வி கற்றல் முதலியன முறையே ஆச்சிரம வாசிகள் பயின்று வந்தனர். எல்லாரும் சேர்ந்து ஒரு குடும்பம்போல் வாழ்ந்தனர்.

அடிகள் சபர்மதி ஆச்சிரமம் ஏற்படுத்தியமையால், சபர்மதி முனிவர் என்று கூறலாம். பிரமசரியவிரதத்தில் மரண பரியந்தம் நிலைத்து நின்றவர். திரிகரண சுத்தியாய் வாழ்ந்தார். தாய்நாட்டின் விடுதலை கருதி தமது இளமை துறந்தார். அன்றொருநாள் "மாது சொன்ன சூளால் இளமை துறந்தார்" திருநீலகண்டநாயனார். இன்று நம் கண்முன் காந்தியடிகள் இந்தியத் தாயின் இருப்பு விலங்குகளை யறுத்தெறிய வேண்டி இத்தவம் பூண்டார். தவத்திற்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர்,

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்று கூறினர். இதன் பொருள், தன்னை நோக்கி வரும் பசி பிணி முதலிய நோய்களைப் பொறுத்துக் கொள்ளல், உயிர்கட்குத் துன்பம் இழைக்காதிருத்தல்—இவ்விரண்டுந்தான் தவத்திற்கு வடிவம் என்றார். இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாய்த் திகழ்ந்தார் அடிகள்.

நமது காந்தியடிகள் பிரமசரிய விரதம் பூண்டதும், அவ்விரதத்தை நிலை நாட்டவேண்டித் தமது ஆகாரத்தை மாற்றியமைத்தார். முதன் முதலில் மசாலையையும் உப்பையும் விட்டார். ஒரு மனிதனது பண்பு அவன் உட்கொள்ளும் ஆகாரத்தைப் பொறுத்திருக்கின்றது. அறுசுவை யுண்டி யருந்துகின்றவர்க்குச் சாமானியமாக

அரிஷட்வர்க்க மென்னும் "காமம், வெகுளி, இவறன்மை, மயக்கம், மதம், மாற்சரியம்" என்னும் அறு பகைவர்கள் அவர்கள் ஆன்ம லாபத்தையடைய வொட்டாமல் தடுக்கின்றன. இவற்றை உள்ளுறை பகைவர்களென்றும், ஆறலைக் கள்வரென்றும் கூறப் பெறுவர். அடிகள் இவற்றை வெல்ல வேண்டி ஆட்டுப் பாலும், நிலக்கடலையும் தமக்கு உணவாகக் கொண்டார்.

காலையிலும் மாலையிலும் கடவுட் கூட்டுப் பிரார்த்தனை நடத்தினர். இறைவனிடம் எல்லையிலா அன்பு பூண்டார். இடையருத அன்பு கொண்டார். அவரது பேச்செல்லாம் தெய்வ மணங்கமழும். அவரெழுத் தெல்லாம் தெய்வ மணங்கமழும். அரசியல் விஷயங்களில் ஆண்டவன் துணை நாடிய அறிஞர் நமது அடிகளே. தேசப் பற்றோடு, கடவுட் பற்றையும் சேர்த்துக் கொணர்ந்தவர் நமது காந்தியடிகள் தாம். தேச விடுதலையின் நிமித்தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்த உத்தமர். அரைதனில் ஓராடையுடன் விளங்கினர். நாட்டில் உண்ண உணவும் உடுக்க உடையுமின்றித் தவித்த மக்களைப் பார்த்து உணவை விடுத்தார். முழுவாடையும் விடுத்தார். சர்ச்சில் ஏகாதிபத்தியத் திமிர் பிடித்த பெரியார். அவர் நமது அடிகளின் பெருமையுணராது "அரை நிர்வாணப் பக்கிரி" என்றிகழ்ந்தார். அந்த ஆடையோடு தான் ஆங்கில தேசஞ் சென்று, பிரிட்டிஷ் சக்கரவர்த்தி முடி சூடிய மன்னருடன், இந்தியாவின் முடி சூடா மன்னராகிய அடிகள் கை குலுக்கிப் பேசி மன்னர்தம் விருந்தினராயிருந்து மீண்டார். ஆன்ம வலிமை படைத்தார் அடிகள். அதை நாட்டின் விடுதலைக்குப் பயன் படுத்தினர்.

அடிகள் முதன் முதலில் வீரம்காமென்னு மிடத்தில் நடந்த வரி விசாரணையைப் பற்றிக் கேட்டு அங்கு சென்று, பம்பாய் சர்க்காரோடு கடிதப் போக்கு வரவு நடத்தினர். பிறகு இந்திய சர்க்காருக்கு எழுதினர். செம்ஸ் போர்டு பிரபுவை நேரிற்கண்டு மக்கள்படுந் துயரை யெடுத்துக் காட்டி சுங்கவரி நீக்க வேண்டு மென்று கேட்டார். இறுதியாக அடிகளின் நன் முயற்சியால் அதில் வெற்றி பெற்றுர். அடிகள் தமது வரலாற்றில் எழுதுங் கால் "இந்திய மண்ணில் இந்த வெற்றிதான் எனது சத்தியாக்கிரகப் போரின் முதல் வெற்றி" என்று எழுதி யுள்ளார்.

'எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்று உத்தர வேதம் கூறுகின்றது. ஒரு காரியத்தை முடிக்க நினைப்பவர் தவ வலிமையுடைய வராயிருந்தால், அவர் எண்ணியபடியே அக் காரியம் முடியும் என்பது பொருளாகும். அதே போல நமது அடிகள் தவவலிமையால் நாட்டின் நாலு பக்கங்களிலும் நடந்த அநீதிகளைப் போக்கினர்.

நாடு ஏழை நாடாக விருந்தபடியால், நாட்டிலிருந்து பல தொழிலாளிகள் குறிப்பிட்ட காலம் வரையில் வேலை செய்வதாக ஒப்பந்தம் செய்து வெளி நாடு செல்வார்கள். இத் தொழிலாளிகள் "ஒப்பந்தத் தொழிலாளர்" எனப் பேர் பெறுவர். இவர்கட்கு நேட்டால் சர்க்கார் தலை வரி போட்டனர். அதை அடிகள் ஆப்பிரிக்காவிலிருக்கும் போது நீக்கினர். இந்த ஒப்பந்தக் கூலி முறையையும நீக்க வேண்டு மென்றும் அடிகள் கிளர்ச்சி செய்தார். இது குறித்துப் பண்டித மதன் மோகன் மாளவியா அவர்

களும் 1916-ல் இந்தியச் சட்ட சபையில் பேசினார்கள்; ஒன்றும் பயனில்லை. அடிகளார் ஆப்பிரிக்காவில் தவங்கிடந்து பெற்று வந்த பாசுபதாஸ்திரமாகிய சத்தியாக்கிரகம் என்னும் அம்பு தொடுப்பதாகத் தெரிவித்தார். உடனே சர்க்கார் ஒப்பந்தக் கூலி முறையை நீக்கி விட்டனர்.

பீஹார் மகாணத்தைச் சேர்ந்த சம்பரான் என்ற இடத்தில் பெரும் பான்மையாக அவுரித் தோட்டங்களே யிருந்தன. அத் தோட்ட முதலாளிகளிற் பலர் மேனாட்டினர். குடியானவர், தம் நிலத்தில் ஒரு பகுதியில் நில முதலாளிகளுக்கு என அவுரி பயிரிட்டுத் தரவேண்டும். சட்டப்படிக் கட்டுப்பட்டிருந்தனர். இம் முறைக்குத் "தீன் கட்டியா" என்று பெயர். இம் முறையால் மக்கள் பெரிதும் வருந்தினர். இத் தொல்லையை நீக்க நமது அடிகள் சம்பரான் சென்றார். சம்பரான் உள்ளே நுழைய வொண்ணாது என்று தடையுத்தரவு பிறப்பித்தார். அதனை மீறினார் அடிகள். அரசாங்கம் வழக்குத் தொடுத்தது. இறுதியில் அடிகள் வெற்றி பெற்று குடி மக்கட்கு இன்பம் விளைத்தார். தான் வருந்திப் பிறர்க்குதவும் தயாபரன் அன்றோ அடிகள்.

1918-ம் ஆண்டில், பம்பாய் மாகாணத்துக் கெய்ரா நிலப் பகுதியில் விளைவு குறைந்து விட்டது. குடி மக்கள் வரி கொடுக்க முடியாதபடி தவித்தார்கள். அரசாங்கத்தார் என்றும்போல வரிவசூல் செய்யத் தொடங்கினர். மக்கள் படுந்துயர் கேட்டு அடிகள் உடனே கெய்ரா சென்றார். அதிகாரிகளிடம் மக்கள் சார்பில், வரிக் குறைவுக்காக மன்றாடினர். அதிகாரிகள் செவி கொடாதிருந்தனர். வரி கொடா வியக்கத்தை அடிகளார் நடத்த

ஏற்பாடு செய்தார். அதிகாரிகள் உடனே பணிந்து வந்து வரி நீக்கஞ் செய்தனர்.

அடிகள் தாய் நாட்டுப் பணியைத் தளராது புரிந் தார். 1917-ம் ஆண்டில் ஆமதபாத்து மில் முதலாளி கட்கும், தொழிலாளிகட்கும் சம்பள சம்பந்தமாகச் சச்சரவு நடந்தபோது அடிகளார் அங்கு சென்று உண்ணு நோன்பு அனுஷ்டித்து அதனைத் தீர்த்து வைத்தார். அடிகளார் இந்திய நாட்டின் இணையற்ற தலைவர் என் பதை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சிறுகச் சிறுக உணர வாரம்பித்தது. என்றாலும் வெள்ளையர்கள் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை யில்லாதவராய், மென் மேலும் இந்தியர்கட்கு இன்னல் விளைப்பதிலும், அடிமைத் தளையில் இறுகப் பிணித்தலிலும் இறுமாப்பும் இன்பமுங் கொண்டனர். இத்தகைய மனப்பான்மையில் 'இரவுலட்' சட்டம் ஒன்று பிறந்தது. இச் சட்டத்தின்படி இந்திய ரெவரையும் கேள்வி முறையின்றிச் சிறைக்கனுப்பும் உரிமை அரசாங்கத்தாருக்கு ஏற்பட்டது. இச் சட்டத்தை யெதிர்த்துப் போராட அடிகளார் நாடெங்கும் சுற்றித் திரிந்து ஆதரவு தேடினர். வல்லபாய் படேல், சரோஜினி தேவி, சங்கர்லால் பாங்கர் முதலிய பெரியோர்களோடு கலந்து பேசினர். ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்க எண்ணினர். இந்தச் சமயத்தில்தான் பஞ்சாபில் படு கொலை நடந்தது.

உலகப் பெரும் போருக்குப் பின்னர் சமாதான ஒப்பந்த மொன்று ஆங்கிலேயர் நேச தேசத் தாரோடு செய்தனர். அவ்வொப்பந்தத்தில் துருக்கி தேசத்திற்களித்த விதிகளில் முஸ்லீம் மக்களிற் பலர் வெறுப்புக் கொண்டனர். அதன் விளைவாக "கிலாபத்து

இயக்கம்" என்னும் கிளர்ச்சி யேற்பட்டது. அவ்வியக்கத்திற்கு அடிகளார் ஆதரவளித்தனர். இந்தியாவில் இருந்த முஸ்லீம் தலைவர்கள், அலிசகோதரர்களாகிய மகமத் அலி ஷவுகத் அலி என்னும் தலைவர்கள் மகாத்மா காந்தியடிகளுடன் தேச மெங்குஞ் சென்று சிலாபத்து இயக்கத்திற்கு ஆதரவு தேடினர். எங்கு பார்த்தாலும் "மகாத்மா காந்திக்கு ஜே! அல்லாஹூ அக்பர்" என்ற இந்து முஸ்லீம் சமரச ஜய கோஷம் வானைப் பிளந்தது.

நெஞ்சில் வஞ்சமில்லாத அடிகளார் ஆங்கிலேயருக்குதவியது போலவே இஸ்லாம் சகோதரர்கட் குதவினர். ஆகவே இந்தியாவில் யாவரும் ஒரே முகமாக இரவுலட் சட்ட எதிர்ப்புக்கு ஒத்துழைக்க முன் வந்தார்கள். "ஒன்று பட்டாலுண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு" என்று எங்கும் உபதேசிக்கப்பட்டது.

1920-ம் ஆண்டில் அடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். அரசாங்கம் நடைபெறுவதற்கு உதவாது இந்திய மக்கள் நின்றுவிடவேண்டு மென்பது அடிகளின் கோரிக்கை. இவ்வியக்கத்தின் விளைவாகப் பலர் பட்டம், பதவி துறந்தனர். பள்ளி மாணவர் படிப்பை நிறுத்தினர். அரசாங்கத்தார் இவ்வியக்கத்தை நசுக்க வேண்டிப் பல அடக்கு முறைச் சட்டங்களை அமுலுக்கு அவசரமாகக் கொணர்ந்தனர்.

அடிகளார் ஒத்துழையாமை இயக்கத்தைச் சாத்துவிக முறையில் நடத்த விரும்பினர். ஹிம்சை கூடாதென்று வற்புறுத்தினர். ஆனால் நாட்டு மக்கள் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து விட்டால் அக்கூட்டத்தைக் கலைக்கப் போலீஸார் வருவார்கள். அவர்களைக் கண்டதும் கூட்டத்தில் நிற்போரிற் சிலர் "செந்தலைப் புலிகள், செந்

தலைப் புலிகள்" என்று போலீஸாரைக் கேலி செய்வார். சிலர் கல்லெடுத் தடிப்பார். போலீஸார் தடியடி நடத்து வார். கலவர மதிகமானால் துப்பாக்கிப் பிரயோகஞ் செய் வார் போலீஸார். இம்மாதிரியான கலவரம், குழப்பம் எங்கு பார்த்தாலும் நிகழ்ந்தன.

கோரக்பூர் ஜில்லாவில் "சௌரி சௌரா" என்னு மிடத்தில், பொதுமக்களுக்கும் போலீஸாருக்கும், ஓர் ஊர் வலத்தின் போது பெரும்போர் மூண்டது. இதன் விளை வாக இருதரப்பிலும் பெருத்த நஷ்டமும் உயிர்ச் சேத மும் ஏற்பட்டன. அடிகளார் இந்திய நாட்டினர் இன்னும் சாத்துவிகப் போருக்குத் தயாராகவில்லை. அஹிம்சை யில் நம்பிக்கை வரவில்லை, என்பதை யுணர்ந்தார். உடனே ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தினர். அடி களாரிடத்தில் ஓரரிய பண்பு இருந்தது. என்ன வென் ருல் குற்றமென்று ஒன்றையுணர்ந்தால் அதனை ஒப்புக் கொள்ளும் உயரிய பண்பு. ஏதிலார் குற்றம்போல் தன் குற்றங்காணும் தன்னேரிலாத் தகைமை அடிகளாருக் குண்டு. ஆகவே, சாத்துவிகப் போருக்குப் பாரத மக்கள் தயாராக வில்லாத போது தாம் அப்போரினைத் தொடங் கியது தவறெனஅடிகளார் உணர்ந்தார். உடனே நிறுத் தினர்.

அடிகள் ஆக்க வேலையில் இறங்கினர். கைராட்டினத் தில் நூல் நூற்கும்படி யுபதேசித்தார். இந்தியநாடு உலக மக்கட்கு உண்கலம் எனப் பெயர் பெறும். ஏனென்ருல் ஏனைய நாட்டில் தயாராகும் ஆடை, இயந்திர வண்டி, மருந் துச் சாமான்கள் முதலியவற்றை ஒன்றுக்குப் பத்தாக விலைகொடுத்து வாங்கி இந்தியர்கள் உபயோகித்தனர். இத ஞல் கோடிக்கணக்கான பணம் வெளிநாட்டிற்குச் சென்

றது. இந்தியர் பணம் இம்மாதிரி கொள்ளை போயிற்று. ஆங்கிலேயர் வரி மூலம் கோடிக் கணக்கான பணம் கொண்டு சென்றார். இங்கிலாந்திலுள்ள லங்காஷையர் முதலிய விடங்களில் இருக்கும் துணி மில்களில் தயாராகும் துணிகளை இந்தியர் விலைக்கு வாங்கி மகிழ்ந்து வருவது கண்டு அடிகள் மனம் வருந்தினர். அவ்வகையிற் செலவாகும் பணம் மிச்சமாகவேண்டும் என்னும் நோக்கத்துடன் "கதர் இயக்கம்" அடிகளார் ஆரம்பித்தார். இந்தியாவிலுள்ள ஆண்களும், பெண்களும் தத்தமக்கு வேண்டிய ஆடைகளைத் தாங்கள் தினந்தோறும் நூற்கும் நூலைக் கொண்டு தயார் செய்து கொள்ளவேண்டுமென்று அடிகள் உபதேசித்தார்.

இங்ஙனம் அடிகளார் ஆக்கவேலையி லீடுபட்டிருந்த போது ஒத்துழையாமை இயக்கம் நடத்தியதால் நாட்டில் பல கொலைகள், கலகங்கள் நடந்தன. அவைகளுக்கு இவரே பொறுப்பாளியாவார் என்று அரசாங்கத்தார் 1922-ம் ஆண்டில், அடிகளாரைக் கைது செய்தனர். வழக்கு நடந்தது. நீதிபதி முன் அடிகளார் தாம் குற்றவாளியென்று ஒப்புக் கொண்டு, ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் "இந்திய நாட்டிற்குப் பிரிட்டிஷ் அரசாட்சி பல தீமைகள் இழைத்து வருகின்றது. அத்தீங்குகளைப் போக்குவான் வேண்டி ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தேன். யான் செய்வது தருமத்திற்கு விரோதமானது அன்று. அன்னியர் ஆட்சிக்குத் துணை புரியும் சட்டம் உங்கட்கு நன்மையெனத் தோன்றினல் என்னையுந் தண்டியுங்கள்" என்று கூறியிருந்தார். நீதிபதி அடிகளாரை ஆறுண்டுகள் வெறுங்காவல் தண்டனைக்குள்ளாக்கினர். சிறையில் இரண்டாண்டுகள் இருந்தார். குடல் நோய்

ஏற்பட்டது எவ்விதக் கட்டுப்பாடுமின்றி அடிகளார் சிறையினின்று விடுதலை பெற்றார்.

நமது நாட்டின் விடுதலைக்கு இந்து முஸ்லீம் ஒற்றுமை இன்றியமையாததென்று அடிகள் கருதினர். ஆகவே அதைப்பற்றி மக்களிடைப் பிரசாரம் செய்து வந்தார். அடிகள் சிறையிலிருந்த போது நாட்டில் நாலு பக்கங்களில் வகுப்புக் கலகங்கள் தலைவிரித்தாடின. இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவரை யொருவர் தாக்கினர். ஒற்றுமை குறைந்து விட்டது. சிறை நீக்கம் பெற்று வெளிப் போந்த அடிகளார் கலகங்களைப்பற்றி யறிந்து கண்ணீர் வடித்தார். தமது இன்னுரைகளால் வகுப்பு வேற்றுமையைப்போக்க அடிகள் முயன்றார்; முடியவில்லை. உடனே இம்மக்களின் ஒற்றுமை கருதி இருபத்தொரு நாள் உண்ணுவிரதம் மேற்கொண்டார். இந்நோன்பின் பயனாய்த் தேசத்தில் ஒற்றுமை உணர்ச்சி பரவிற்று.

1924-ம் ஆண்டில் பெல்காமில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் அடிகளார் தலைமை தாங்கி இந்திய நாட்டிற்குப் "பூரண சுதந்தரம்" வேண்டுமென்று தீர்மானித்தார். அப்பொழுது இங்கிலாந்தில் ஆதிக்கத்திலிருந்த தொழிற் கட்சி யரசாங்கத்தார் இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டந்தஸ்து வழங்குவதாகக் கூறினர். காங்கிரசுக்கு விருப்பமில்லை. அதனால் அரசாங்கத்தாருக்கும் காங்கிரசுக்கும் மனக் கசப்பு ஏற்பட்டது.

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" என்ற பட்டினத்தார் வாக்குப்படி உழைத்தாற்றான் உறுதியுண்டு என நம்பிய நமது காந்தியடிகள் மீண்டும் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கத் தீர்மானித்தார்.

1930-ம் ஆண்டில் அடிகளார் தமது ஆச்சிரமத்திலிருந்து நண்டியென்ற கடற்றுறைப் பட்டினம் சென்று உப்பு எடுத்தார். அதே சமயத்தில் நாடெங்கும் உப்பு சத்தியாக்கிரகம் என்ற பெயரால் மக்கள் உப்பெடுத்துச் சென்றார்கள். தென்னாட்டுக் காந்தியடிகள் என்ற பேர் பெற்ற சக்கிரவர்த்தி இராஜகோபாலாசாரியாரவர்கள் திருச்சியினின்றும் வேதாரணியத்திற்கு உப்பு சத்தியாக்கிரகத்தினிமித்தம் பெரியதொரு தொண்டர் படையுடன் சென்றார். வழக்கம்போல் அரசாங்கத்தார் அடக்குமுறைச் சட்டத்தைக் கையாண்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் சிறைபுக்கனர். ஏக காலத்தில் உப்புச் சட்டத்தை மீறல், கள்ளுக் கடை மறியல், அந்நியத் துணி பகிஷ்காரம் முதலிய பல வகையில் அறப்போர் நடத்தினர் அடிகள்.

இவ்வறப்போரின் பலனக 1931-ம் ஆண்டில் உலகு புகழ் "காந்தி இர்வின் ஒப்பந்தம்" ஏற்பட்டது. அதன்படி சட்டமறுப்பியக்கம் நின்றது. சிறை சென்றவர்கள் விடுதலையடைந்தனர். மக்களுக்கு வேண்டிய ஓரளவு உப்பு வரியின்றியெடுத்துப் பயன்படுத்த அரசாங்கம் அனுமதியளித்தது. கள்ளுக்கடை, துணிக்கடை முதலியவைகளை அமைதியாக நின்று மறியல் செய்யலாமென்று இர்வின் அரசாங்கம் பணிந்து கொடுத்தது.

இந்தியர்கட்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கும் நடந்தபோர் நின்றபாடில்லை. ஆங்கிலேயர் இந்தியாவிற்குச் சுதந்தரம் வழங்க மனமிலராய், பலவாறு இந்தியரின் சுதந்தரப் போரை யடக்க முயன்றார். 1932-ம் ஆண்டு இங்கிலாந்தில் ஒரு வட்டமேஜை மகாநாடு நடந்தது. அப்போது காந்தியடிகள் இங்கிலாந்திற்குச் சென்றிருந்தார்; மன்னர் பிரானைக் கண்டு பேசினர். தீண்டாதாருக்

குத் தனித்தொகுதி அமைப்பதாக அம்மகா நாட்டில் பேச்சு நடந்தது. பிரித்தாளும் தந்திரத்தைப் பிரிட்டிஷார் கையாளுவதை யறிந்து காந்தியடிகள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அதனல் வட்டமேஜை மகாநாட்டில் பலன் ஒன்றும் ஏற்படவில்லை. அடிகள் தாய் நாட்டிற்கு வெறுங்கையுடன் வந்தார்.

தாய் நாடு அடிகள் திரும்பியதும் அரசாங்கத்தார் பல அவசர அடக்குமுறைச் சட்டங்களைச் செய்தனர். எங்கு பார்த்தாலும், தலைவர்கள் சிறை செல்வதும், மக்கள் சுட்டு வீழ்த்தப்படலும் நிகழ்ந்தன. அடிகள் வைசிராயைப் பேட்டி காண விழைந்தார். பேட்டி கிடைக்கவில்லை. அடிகள் சட்டமறுப்பு இயக்கத்தை நடத்தினர். இலட்சக் கணக்கான மக்கள் சிறை சென்றனர். பதினெட்டு மாத காலம் நடைபெற்றது. பின்னர் காங்கிரசுக்குச் சட்டசபை நாட்டமிருந்தமையால், பொதுமக்கள் இயக்கத்தை மாற்றித் தனிப்பட்ட இயக்கமாகச் செய்தார். பிறகு அதனையும் நிறுத்தி, சட்ட மறுப்பினைத் தம் சொந்தப் பொறுப்பின் கீழ் வைத்துக் கொண்டார். ஆக்க வேலையில் இறங்கினர். அமைதி நிலவும்படிச் செய்தார்.

இதன் மத்தியில், பிரிட்டிஷ் சர்க்கார் தீண்டாதாருக்குத் தனித்தொகுதி அளிக்கும் வகுப்புத் தீர்ப்பினை யேற்று வெளியிட்டது. இதை யெதிர்த்து அடிகள் உண்ணு நோன்பினை மேற்கொண்டார். ஆறு நாட்கள் நோன்பு தொடர்ந்தது. அதற்குள் சாதியிந்துக்களும் தீண்டாதாரும் ஓர் ஒப்பந்தத்திற்கு வந்தனர். அரசாங்கமும் ஒருவாறு இணங்கி வந்தது.

சட்டமறுப்புப் போரைத் தனிப்பட்ட முறையில் மீண்டும் ஆரம்பித்தார். அரசாங்கம் அடிகளைக்

கைது செய்தது. சிறையில் 16 மாதங்கள் இருந்த பின்னர், தம்மையும் தம்மைச் சேர்ந்த தொண்டர்களையும் தூய்மைப் படுத்தவேண்டி இருபத்தொரு நாள் பட்டினி கிடந்தார். மீண்டும் மூன்று மாதங்களான பிறகு உண்ணு நோன்புகொண்டார். இவ்வித நோன்புகளால் அடிகள் உடல் நலங் கெட்டது. பூனு மருத்துவச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பின்னர் அரசாங்கம் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி அடிகளாரை விடுதலை செய்தது. அடிகள் மூன்றுண்டு வரையில் அரசியலினின்று விலகியிருந்தார்.

1937-ம் ஆண்டில், எட்டு மாகாணங்களில் "மாகாணச் சுயஆட்சி" என்ற அடிப்படையின் பேரில் மந்திரி சபைகள் அமைக்கப்பட்டன. மாகாணச் சுயஆட்சி யேற்பட்டதால் சுதேச சமஸ்தானங்களிலுள்ள மக்களுள்ளத்திலும் சுதந்தர தாகம் ஏற்பட்டது. 1939-ம் ஆண்டில் இராஜகோட்டைக் கிளர்ச்சியில் அடிகள் கலந்துகொண்டார். இராசகோட்டை மன்னர் தாகூர் சாகிபு தமது வாக்குறுதிகளை மதித்து நிறைவேற்றினுர்.

நமது நாட்டில் பிரித்தாளும் தந்திரத்திற் கைதேர்ந்த பிரிட்டிஷார் இந்தியாவிலிருக்கும் வரையில் இந்துமுஸ்லீம் ஒற்றுமையிராதென்பது அடிகளாரின் நீண்டகால நினைவு. இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு அடிகள் அரும்பாடுபட்டார்; பலனளிக்கவில்லை. 1940-ம் ஆண்டில் ஜின்னு சாகிபு தேசத்தை யிரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று பிடிவாதஞ் செய்தார். முஸ்லீம்கள் இருக்கின்ற இடத்திற்குப் பாகிஸ்தானம் என்ற பெயரிட்டு முஸ்லீம்கள் அதனை யாளவேண்டுமென்றுர். அடிகளார் முதலிய தலைவர்கள் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

இங்கிலேயில் இரண்டாம் உலகப்போர் மூண்டது. முதல் மகா யுத்தத்தில் உதவிசெய்த அடிகள் இந்தப் போரில் உதவுவதற்கு மறுத்தார். சுபாஷ் சந்திரபோஸ் சிறையினின்றும் தப்பி ஜப்பானுக்குச் சென்று அங்கிருந்து ஆங்கிலேயர்மீது படையெடுக்கப் படைதிரட்டினர். 1942-ம் ஆண்டில் ஜப்பானுக்கு வெற்றிமேல் வெற்றி யேற்பட்டது. இந்த நெருக்கடியான நிலேயில் சர்ச்சில் துரைமகனர் சர். கிரிப்சு பிரபுவை இந்தியாவுக்கு காங்கிரசுக்காரர்களுடன் இராஜி பேச அனுப்பினர். இராஜிப் பேச்சு முறிந்துவிட்டது. அந்த வேளையில், அடிகளார் "வெள்ளேயரே! வெளியேறுங்கள்" என்று கூவினர். இவ்வொலி நாடெங்கும் பரவிற்று. எங்கு பார்த்தாலும் "வெள்ளேயரே! வெளியேறுங்கள்" என்ற முழக்கம் கேட்டது. 1943-ல் மீண்டும் அடிகள் சிறைப்பட்டார். சிறையில் மூன்றுவாரம் பட்டினி கிடந்தார். வேவல் பிரபு வைசிராயாக வந்தார். அதனுலும் சர்க்கார் கொள்கை மாறவில்லே. ஆகாகான் அரண்மனேயில் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அங்கிருந்தபோது அன்னே கஸ்தூரிபாயும், மகா தேவதேசாயும் இவ்வுலக வாழ்வை நீத்தனர். அடிகள் மனம் கலங்கிற்று. உடல் நிலேயும் மிகவும் சீர்கெட்டிருந்தது. ஆகவே 1944-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 6௳ அடிகள் விடுதலேயடைந்தார்.

அடிகள் சிறையினின்று வெளிவந்ததும், ஜின்னு சாகிபைக்கண்டு பேசினர். "கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்படி" முஸ்லீம் லீக்கின் தலேவர் ஜின்னு பாகிஸ்தானம் கொடுத்தே தீரவேண்டுமென்று வற்புறுத்தினர்.

1946-ம் ஆண்டில் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவில் ஒரு இடைக்கால சர்க்கார் ஏற்படுத்த அனுமதியளித்தனர்.

அதில் காந்தியடிகளும் ஏனைய காங்கிரசு வாதிகளும் பங்கு எடுத்தனர். தமது ஒத்துழைப்பை யளித்தனர். ஜின்னு ஒத்துழைக்க மறுத்துவிட்டதோடு நேரடி நடவடிக்கை யெடுக்குமாறு முஸ்லீம்களைத் தூண்டிவிட்டார். அதன் பலனாக, கல்கத்தா, நவகாளி, பீஹார் முதலிய இடங்களில் பெருங்குழப்பம் ஏற்பட்டது. கொலை முதலிய கொடுஞ் செயல்கள் நடந்தன. தள்ளாத பருவத்திற்கூட காந்தியடிகள் நவகாளி முதலான இடங்கட்குச் சென்று அமைதியினிமித்தம் பாடுபட்டார்.

மவுண்டு பேட்டன் இராஜப் பிரதிநிதியாக வந்தார். ஆங்கில ராஜப் பிரதிநிதிகளில் அவரே கடைசியானவர். 1947-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 15உ இரவு பன்னிரண்டு மணிக்கு இந்தியர்தம் முடிசூடா மன்னர் பண்டித ஜவஹர்லால் நேருவின் கையில், ஆங்கிலேயர் இந்திய ஆட்சியை ஒப்பித்தனர். அடிகளார் தம் வாணாளில் இந்தியருக்குச் சுதந்தரம் பெற்றுத தரவேண்டுமென்று விழைந்தர். அவ்வாறே பெற்று வழங்கினர்.

"மனுட்டா ரேசுவென, வியன்துருக்கர் நபியென்ன இந்த மாநாட்டார் கண்ணபிரான் என வாழ்த்த வந்துதித்த காந்தியடிகள் இந்தியர் அடிமைத் தளையினின்றும் நீங்க அரும்பாடு பட்டார். அயர்லாந்து முதலான தேசங்கள் விடுதலைக்காக நூற்றுக்கணக்கான ஆண்டுகள் போரிட்டன. ஆனால் நமது இந்திய நாட்டுச் சுதந்தரப் போராட்டம் சுமார் முப்பத்திரண் டாண்டுகள் நடந்தது. உலகில் வேறெப் பாகத்தினுங் காணுத ஆன்ம பலத்தோடு அடிகள் ஆங்கிலேயருடன் போர் புரிந்தார். இவர் தம் ஆன்ம வலிமையின்முன் ஆங்கிலேயர்தம் அரக்க

வியல்பு நிற்கவில்லை. அடிகளின் தவத்தின் முன் ஆங்கிலேயர்தம் அஞ்சாத விலங்கு வலிமை நிற்கவில்லை. உள்ளொளி பெருக்கிய உத்தமர். முப்பதுகோடி உள்ளத்தே கோயில் கொண்ட உத்தமர்தம் தியாகம் இந்திய மக்களின் அடிமைத்தளையை நீக்கியது.

பாரததேசம் விடுதலை பெற்றதற்கு மனம் களித்தோம். ஆனால் தேசம் இரண்டு துண்டாக்கப் பட்டது பெரிதும் வருந்துவதற்குக் காரணமாயிருந்தது. எங்கும் வகுப்புச் சண்டைகள் நடந்தன. அவைகளால் மக்கள் ஓரிடம் விட்டு மற்றோரிடம் செல்ல நேர்ந்தது. அகதிகள் அதிகரித்தனர்.

"குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்"

என்ற பாண்டியன் வாக்குப்படி வகுப்புக் கலகத்தில் செல்வர்கள் பலர் வறியரானார். மனைவி மக்களை யிழந்தனர். சொல்லொணாத் துயரத்திற்கு மக்கள் உள்ளாயினர். அடிகள் அல்லும் பகலும் வகுப் பொற்றுமைக்குப் பாடுபட்டார். ஆண்டவனைப் பிரார்த்தித்தார்; அழுதார்; அரற்றினார். நூற்றிருபத்தைந் தாண்டு வாழ விரும்பிய அடிகள் தாம் உலகிற்கு வந்த காரியம் நிறைவேறி விட்டது. எழுபத்தொன்பதாண் டிருந்தது போதும் என்று எண்ணினார் போலும். இனியிங் கிருக்ககில்லேன். இவ் வாழ்வு போதும் என்ற அளவிற்கு மத வெறி மித மீறி தலைவிரி கோலமாய்த் தாண்டவமாடிற்று. "பிள்ளை தான் வயதில் மூத்தாற் பிதாவின் சொற்புத்தி கேளார்" என்றபடி, இந்தியர்களிற் சிலர் அடிகளார்தம் அறவுரை ஏற்க மறுத்தார்.

"இன்னு செய்தார்க்கும் இனியவை செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு'

என்ற வள்ளுவர் குறளின் கருத்துட் கொண்டவர் நமது வட நாட்டு வள்ளுவர். துன்பஞ் செய்தவர்கட்கு நன்மை செய்வதுதான் சான்றோர் இயல்பு என்பதை யுணர்ந்த அடிகள், அவ்வாறே யுபதேசித்து வந்தார். பழிக்குப் பழி வாங்கும் மனப்பான்மையுடைய மக்கட்கு இவ்வுயர்ந்த தத்துவம் விளங்குமா? ஒரு நாளும் விளங்காது.

1948-ம் ஆண்டு ஜனவரி மீ இருபத்தாறுந்தேதி டில்லிமா நகரத்தில் அடிகளார் பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் சென்றார். மராட்டிய இளைஞன் காட்சே யென்பவன் ஒரு வெடிகுண்டை வீசினன். அது அவர் மேற்படவில்லை. அவன் இந்துமகா சபையைச் சேர்ந்தவன். இந்து மதம் அடிகளால் அழிந்துவிடு மென்று தவருக வெண்ணினன். ஒரு மாத காலம் அவன் மூளையில் அடிகளாரின் கொலைபற்றிய சூழ்ச்சி வேலை செய்து வந்தது. அடிகளுக்குப் பாதுகாவல் வைத்திருந்தனர்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

என்ற வள்ளுவர் வாய்மொழிப்படி, 1948-ஆண்டு ஜனவரி மீ 30-ம்தேதி மாலை, அடிகளார் பிரார்த்தனைக்கூட்டத்திற்குச் சென்றபோது, அதே கயவன் காட்ஸே என்பவன் அடிகள் முன்னர் வந்து "இவ்வளவு நேரமாய் விட்டதே" என்று கைகூப்பி வணங்கினன். தொழுத கையுளும் படையொடுங்கு மன்றோ? தான் எண்ணியது முடிக்க, வன்கணன் துப்பாக்கியால் மூன்று முறை சுட்

டான். அடிகளார் எப்பொழுதும் தாரக மந்திரம் சபிப்பவ ராதலால் "ராமா, ராமா" என்று சபித்த வண்ணமே யுயிர் நீத்தார்.

உலகம் இருள் சூழ்ந்தது. புற விருள் மட்டுமல்ல அகவிருளும் சூழ்ந்தது. அன்று. அடிகளார் மேற்பட்ட சூடு பொதுவாக உலக முழுதும், சிறப்பாக இந்தியா முழுதும் உள்ள மக்கள் மீது பட்டதென்னலாம். பாண்டியன் பிரம் படி பெற்ற சிவபிரான் அடியைப் பரஞ்சோதியார்

" பாண்டியன் முதுகிற் பட்டது செழியன்
பன்னிய ருடம்பினிற் பட்ட
தாண்டகை யமைச்சர் மேனிமேற் பட்ட
தரசிளங் குமரர்மேற் பட்ட
தீண்டிய கழற்கால் வீரர்மேற் பட்ட
திவுளிமேற் பட்டது பருமம்
பூண்டவெங் கரிமேற் பட்டதெவ் வுயிர்க்கும்
போதன்மேற் பட்டவத் தழும்பு

என்று கூறியாங்கு, அடிகளார் முடிவு எல்லாரையும் நடுங் கச் செய்தது.

உலகின் நந்தா விளக்கு நந்தியது. பொய்யாமையையும் கொல்லாமையையும் முக்கியக்கொள்கைகளாகக்கொண்டு, நாட்டு மக்களின் பொருட்டு வாழ்வு நடத்திய அடிகளார் முடிவு யாவருக்கும் ஆறுத்துயர் உண்டுபண்ணிற்று உலக முழுதும் துயர்க் கடலில் ஆழ்ந்தது. அநேகர் பட்டினி கிடந்தார். சிலர் பட்டினியால் உயிர்விட்டார்.

உலகில் மாகான்கள் கதியெல்லாம் இவ்வாறு தான் என்று சொல்லும்படி நேர்ந்தமை நம்மனோரின் ஆறுத் துயருக்குக் காரணமெனினும், இவ்வுலக மக்களின்

ஏழைமைக்குப் பெரிதும் இரங்குகின்றோம். மேதையிற் சிறந்த சாக்கிரிட்டீஸ் விஷம் கொடுக்கப்பெற் றுயிர் நீத்தார். நாணிலத்தார் செய்த நெடும் பாவத்தைச் செஞ்சிலுவையில் வடித்த செந்நீரால் போக்கியருளிய மாசற்ற ஏசுநாதர் முடிவும், நமது காந்தியடிகள் முடிவும் ஒன்றாக விளங்குகின்றன.

அடிகளார் பூதவுடல் மறைந்தாலும் உலகுள்ள வரையில் அவர்தம் புகழுடம்பு நின்று நிலவும். அடிகளார் புறப் பகையாகிய வெள்ளையரை வென்றார். அகப்பகையாகிய அறு பகைவர்களை வென்றார். அஹிம்சைக்கும் பொய்யாமைக்கும் அவதரித்த சாந்த மூர்த்தி இறுதி வரையில் தமது கொள்கைகளில் தவறினாரில்லை. "வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்" என்ற சுந்தரர் வாக்குப்படி, நமது காந்தியடிகள் தம் கொள்கைகளில் வெற்றி கண்டார் என்பதில் ஐயமின்று.

அடிகளார் ஆன்மா என்றும் இறைவனடி நீழலில் நின்றின்புறுவதாக.

வாழ்க! பாரதமாதா. வாழ்க ! காந்தியடிகள்.

வந்தேமாதரம்

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

★